
அமிர்தம்
எஸ். ஆறுமுகம்
அழகுப் பதிப்பகம்

# அமிர்தம்

அன்புச் சகோதரர்
சுப்பிரமணியம்
அவர்கட்கு,

★

அன்புடன்,
எஸ். ஆறுமுகம்
6.11.57.

எஸ். ஆறுமுகம்

★

அமுதப் பதிப்பகம்

முதற்பதிப்பு:
அக்டோபர் 1951

# அமிர்தமும் நானும்......!

'அமிர்தம்'!

அதன் அமுதச் சுவையில் என்னை மறந்து நான் மகிழ்ந்தேன்—மகிழ்கிறேன். மகிழ்விற்குக் காரணம் என் கதைத் தொகுப்பு என்ற பாசம் அன்று; 'அமிர்தம்' உள்ளடக்கியிருக்கும் கதைகள் அழகுற அமைந்து விட்டன என்ற பெருமிதம் தான்! பெருமிதம் விளைத்த மகிழ்வில் நான் என்னையும் மறந்து மகிழ்ந்தேன்—மகிழ்கிறேன்!

என் 'எழுத்'தில் அக்கரைகாட்டி ஊக்குவிக்கும் பத்திரிகைக்காரர்கள்—என் 'பெயரில்' ஒரு 'கண்' வைத்து ஆதரவு நல்கி வரும் தமிழன்பர்கள்—இவர்கட்கு என் அன்பின் காணிக்கை இந்த என் இரண்டாம் படைப்பு!

'அமிர்தம்' கொண்டுள்ள சிறு கதைகள் பொன்னி, சுதேசமித்திரன், குமுதம், கல்கி, தினமணிக்கதிர், காண்டிபம் முதலான பத்திரிகைகளில் பிரசுரமானவை. அவற்றைப் புத்தகத்தில் இணைத்துக் கொள்ள அன்புடன் அனுமதித்த ஆசிரியர்களுக்கு என் நன்றி உரியது.

'அமிர்தம்' சுவைபெற 'அணிந்துரை' வழங்கிய தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளரும், என் இலக்கிய வழிகாட்டியுமான நண்பர் திரு. விந்தன் அவர்களுக்கு என் வணக்கம்; நன்றி!

'அமிர்தம்' வெளிவரச் செய்த 'அழகுப்பதிப்பக'த்தாருக்கும் புத்தகம் வெளிவர எல்லா வழிகளிலும் உதவிய அன்பர் திரு. கரு. சிதம்பரம் அவர்களுக்கும் என் நன்றி!

அமிர்தச் சுவை காணத்துடிக்கும் உங்கள் ஆர்வங் கண்டும், இனியுமா வளர்த்துவது?.........

வணக்கம்.

பூவை: எஸ். ஆறுமுகம்

விலை
ரூ. 1-0-0

# முன்னுரை

நாம் இருக்கும் நாடு நமதே; சந்தேகமில்லை. ஆனால் நம் நாட்டிலுள்ள பொருள்களைத்தும் தெரு விளக்கைப் போல, குடி தண்ணீரைப் போல நமக்குச் சொந்தமானவை யல்ல. அவை விற்பவர்களுக்குச் சொந்தமானவை; வாங்குபவர்களுக்குச் சொந்தமானவை. இந்த இரு திறத்தாரும் நாட்டில் இருந்துகொண்டு, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்குகிறார்கள். அதன் காரணமாக, உழைப்பின் மதிப்பு குறைகிறது; முதலின் மதிப்பு ஏறுகிறது. நடுவில் மக்கள் சிக்கிக்கொண்டு தவிக்கிறார்கள். வாழ்க்கையின் பல கொடுமைகளுக்கு இதுவே காரணம்.

இத்தகைய கொடுமைகளுக்கு ஆளாகும் மக்களில் பெரும்பாலோர் ஏழைகள்; போதுமான எழுத்தறிவு இல்லாதவர்கள்; இலக்கியமோ, இலக்கணமோ தெரியாதவர்கள். இவர்களில் சிலர் மேற்படி அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் ஆளாகி, இயல்பாகவே அறிவு பெறுகிறார்கள்; எததனையோ நாட்களாக உணராமலிருந்த தங்களுடைய சக்தியையும் ஓரளவு உணருகிறார்கள். இந்த நிலைக்கு வந்த பிறகு அவர்களுடைய உள்ளங்கள் கொந்தளிக்கின்றன; குமுறுகின்றன. அந்தக் குமுறலின் காரணமாக எண்ணங்கள் சிறகடித்துப் பறந்து அவர்களை எழுதத் தூண்டுகின்றன; எழுதுகிறார்கள். அவ்வாறு எழுதுபவர்கள் பிறர் பாராட்டுவதைப்பற்றியும் கவலைப்படுவது கிடையாது; தூற்றுவதைப் பற்றியும் கவலைப்படுவது கிடையாது.

இம்மாதிரி எழுதப்படும் கதைகள் இயற்கைப் பிரசவத்தைப் போன்றதாகும்.

இன்னொரு சாரார், இளமையில் எந்தவிதமான கொடுமைக்கும் ஆளாகாமல் தப்பி முறையாகப் படிக்கிறார்கள்; படித்துப் பட்டமும் பெறுகிறார்கள்; இதன் காரணமாக, அவர்களால் எதையும் இலக்கியக் கண்ணோடு பார்க்க முடிகிறது; இலக்கணக் கண்ணோடு எழுத முடிகிறது. இவ்வாறு

எழுதப்படும் கதைகளில் ரஸபேதம் இருக்கலாம். ஆனால் அவற்றைப் படிப்பவர்கள் யாரும் தூற்ற மாட்டார்கள்; பதிலாகப் பாராட்டவே செய்வார்கள்.

செயற்கைப் பிரசவத்துக்குள்ள மதிப்பு இது.

இந்த வகையைச் சேர்ந்தவர் நண்பர் ஆறுமுகம் அவர்கள். எவருடைய உள்ளத்தையும் புண்படுத்தாமல் அவர் இதுவரை இலக்கிய இலக்கண மரபையொட்டி எத்தனையோ கதைகள் எழுதியிருக்கிறார். அவருடைய கதைகள் அனைத்தும் வாழ்க்கையோடு ஒட்டியவை; அவருடைய கதா பாத்திரங்களோ நம்மைச் சுற்றி இருப்பவர்கள்; நம்மோடு நெருங்கிப் பழகுபவர்கள்; நம்முடைய இன்ப துன்பங்களிலும், சுகதுக்கங்களிலும் நாள் தோறும் பங்கெடுத்துக் கொள்பவர்கள். எனவே, நம்மால் அவர்களை எளிதில் இனம் கண்டுகொள்ள முடிகிறது; அளவளாவ முடிகிறது; அனுதாபமும் ஆனந்தமும் கொள்ள முடிகிறது. ஆங்கிலக் கதைகளைப் படிக்கும்போது நமக்கு உண்டாகும் அவஸ்தை தோழர் ஆறுமுகத்தின் கதைகளைப் படிக்கும் போது உண்டாவதில்லை.

ஒரு காலத்தில் சொர்க்கத்துக்கு இருந்த மதிப்பு இந்தக் காலத்தில் காதலுக்கு இருக்கிறது. இரண்டும் கற்பனையே என்றாலும் காதலை நம்மால் கைவிட முடிவதில்லை. 'வாழ்க்கையில் இல்லாத காதல் கதைகளிலாவது இருந்துவிட்டுப் போகட்டுமே!' என்று நாம் நினைக்கிறோம். இத்தகைய காதலைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்ட கதைகள் பல இந்தத் தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, 'அமிர்த'த்துக்காக நீங்கள் அரக்கர்களுடனோ, தேவர்களுடனோ சண்டையிட வேண்டியதில்லை; பாற்கடலையோ, பாலில்லாத கடலையோ கடையவேண்டியதில்லை. இந்தப் புத்தகத்தை ஒருமுறை படித்தால்போதும். 'அமிர்தம்' உங்கள் கைக்கு மட்டுமல்ல, வாய்க்கும் கிட்டிவிடும்.

சென்னை
25-10-51

வணக்கம்.
விந்தன்.

# முதல் காணிக்கை

சந்தித்தோம். சிந்தனையின் செயலில் 'அழகுப் பதிப்பகம்' அமைந்தது. தமிழ் மக்களுக்கு எங்களின் முதல் காணிக்கை 'அமிர்தம்'.

இலக்கியப் பாதையில் அழகு நடைபோட்டு முன்னேறி வரும் நண்பர் திரு. பூவை. எஸ். ஆறுமுகம் அவர்களின் அமுதூறும் பத்துக் கதைகளைக் கொண்ட இனிய இலக்கியத் தொகுதி 'அமிர்தம்'!

இதில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'டெக்னிக்'; ஒவ்வொரு 'சுவை'. இலக்கியத்தின் தரத்தை எடை போடுவதில் தேர்ந்தவர்கள் தமிழர்கள். பின், அவர்களின் ஆக்கம் எங்கட்கு ஊக்கம் தரத் தயக்கம் இராது என்று நம்புகிறோம்.

இப் புத்தகத்தை வெகு விரைவில் எழிலுற அச்சிட்டுத் தந்த 'பொன்னி' அச்சகத்தாருக்கும், பொன்னுரை சிறப்புரை நல்கிய திரு. விந்தன் அவர்கட்கும், ஆக்க வேலைகளில் ஊக்கம் செலுத்தி அவ்வப்போது ஒத்துழைத்த நண்பர் திரு. கரு. சிதம்பரம் அவர்கட்கும் எங்கள் நன்றி உரியது.

சென்னை
26–10–51

பதிப்பகத்தார்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | ஏற்றிய விளக்கு | ... | 7 |
| 2. | கோதையின் கேள்வி | ... | 17 |
| 3. | மோகினி | ... | 23 |
| 4. | பலியா? | ... | 30 |
| 5. | பிள்ளைக்கனியமுது | ... | 39 |
| 6. | தாலி பாக்கியம் | ... | 47 |
| 7. | அத்தை மகள் | ... | 56 |
| 8. | கை அணைத்தது! | ... | 64 |
| 9. | அறுந்த தந்தி | ... | 77 |
| 10. | அமிர்தம் | ... | 86 |

"வாழ்க்கை ஓர் முள் படுக்கை என்கிறார்கள்! ஆனால் அது ஓர் அழகிய மலர்ப்படுக்கை. ஆம்; அது சுகமாகவிருக்கும்; 'ஜோராக' இருக்கும்— உணரும் விதத்தில், புரிந்து கொள்ளும் விதத்தில், அனுபவிக்கும் விதத்தில், வாழ்க்கை ஓர் இன்ப ரோஜா; இளந்தென்றல்; தேநிலவு"

# ஏற்றிய விளக்கு

ரேடியோவில் நிலைய வித்வான்களின் கதம்ப நிகழ்ச்சி யொன்று நடந்துகொண்டிருந்தது.

சங்கரன் இசைத் தேனீ; இருந்தும் அவன் மனம் அன்றைய இசையின்பத்தில் ரசனை கொள்ளவில்லை.

'சொக்க வெள்ளிப் பாற்குடம்' வானத்து வீதிநெடுக வெண்புள்ளிக் கோலமிட்டுக் கொண்டிருந்தது.

இயற்கை என்றால் அவனுக்குத் தனி மகிழ்வு; என்றாலும் அந்நிலையில் அவன் உள்ளம் அதில் ஈடுபட மறுத்தது.

'நாவல்' ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்தான் அவன். கதை என்றால் அவனுக்கு ஒரு பித்து. இதழ்கள் புரண்டன; கண்கள் கருத்தில் ஒன்ற வில்லை; மனமும் பிடிப்பில் இல்லை. சங்கரன் பித்துப் பிடித்தவனாக வினை உட்கார்ந்துவிட்டான். அதிர்ந்திருந்த அவன் இதயம் அமைதி அடையவில்லை. ஏதேதோ சிந் தனைகள் அவன் நெஞ்சை அலைக்கழித்தன. அவன் கண்கள் கலங்கின.

மாடிப் படிகளைக் கடந்து 'கலகல' வென்ற வளையல் களின் சிங்காரப் பண் சிருங்கார ரசம் இழையக் காற்றில் மிதந்து வந்தது. சங்கரன் நிமிர்ந்தான். அவன் மனைவி சரளா பாலுடன் நின்றாள்.

"பால் இருக்கிறது" என்றாள் சரளா, பாத்திரத்தை மேஜைமீது வைத்தவண்ணம். அவள் குரலில் தாப மிருந்தது; அடக்கம் இருந்தது.

"அதுதான் தெரிகிறதே" என்றான் அவன். அவன் குரலில் விரக்தி, வறட்சி, கடுமை எல்லாமிருந்தன.

சங்கரன் சடக்கென்று ஓடி ரேடியோவை மூடினான். பாலினின்றும் ஆவி பறந்தது. அவன் மற்றுமோர் முறை நிமிர்ந்தான். இன்னும் சரளா நின்றபடி இருந்தாள். அவளது ரோஜாக் கன்னங்கள் குழைந்திருந்தன; வளமேறிய அவள் இளம் இதய வீணையில் உணர்ச்சி நரம்புகள் மீட்டிவிடத் தாபம் சுருதி கூட்டிற்று. தீராத தாபம் துளும்பக் கண்களில் மாறாத சோகம் துளும்பக் கணவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஏ, என் கண்முன் நில்லாதே."

சங்கரன் உத்தரவிட்டான்; எரிந்து விழுந்தான்.

அணைக்கவிருக்கும் கை அடிப்பதைக் கண்ட குழந்தை எவ்வளவு வேதனையுறும்? சரளா அம்மாதிரி மனம் வெந்து போனாள். அரைக்கணத்தில் படியிறங்கினாள். கண்களில் நீர்த் துளிகள் முத்து முத்தாக உருண்டோடின.

'படித்துப் பட்டம் பெற்ற கண்ணிறைந்த கணவர்; இங்கிதம் தெரிந்து தன்னைப் பராமரிப்பார்; வாழ்வும் சோபிக்கும்; இன்பக் கேளிக்கையில் வாழ்க்கை ஓர் சுவர்க்க மாகத் திகழும்.'

அன்று—சங்கரன் தன்னை உடந்தை யாக்கிக்கொண்ட பொன்னாளில் அப்படித்தான் அவள் தன் மன டைரியில் 'நோட்' எழுதி வைத்திருந்தாள்.

ஆனால், அவள் எண்ணியது நடக்கவில்லை. இந்த மூன்று மாதங்களில் தன் பதியின் விபரீத மனப்போக்கை, கணவன்—மனைவி என்ற பாசமின்றித் தாமரை இலைத் தண்ணீர் போன்று எதிலுமே ஒட்டாத நிலையைக் காணக் காணச் சரளா அதிர்ச்சி யடைந்தாள். பேதை யுள்ளம் சுக்கல் சுக்கலாகச் சிதறியது. ஏன் இந்தப் பிளவு? வேற்றுமை?

அழுகை ஒன்றுதான் சராவுக்கு அப்போதைய பாற்றுக-தனிமைத் துணையாக இருந்தது. அவள் அழுதாள்' குருடன் அழுகின்றான் என்றால் அது கண்பார்வை நிமித்தமே அல்லவா ?

மேஜைமீது வைக்கப்பட்டிருந்த பாலின் நினைவு சங்கரனுக்கு வந்தது. கையில் எடுத்தான். சூடு ஆறிவிட்டிருந்தது. ஆனால், அவன் மனத்தின் வேதனைச் சூடுமட்டும் ஆறக் காணோம். தம்ளரில் பாலை ஊற்றி வாயருகில் கொண்டு சென்றான் அவன். அதற்குள் என்ன நினைப்போ? தடக்கென்று தம்ளரை மேஜைமீது வைத்துவிட்டான்.

அன்று வந்த தபால்களுடன் சேர்ந்து கிடந்த அந்தத் திருமணப் பத்திரிகையை எடுத்தான்; அது இப்படிப்பட்ட புயலைக் கிளப்பிவிடும் என்று அவன் எங்கே நினைத்திருப்பான் ?

புயலா ? ஊஹூம்—சூறாவளி !

எரிமலை ? ஊஹூம்—பூகம்பம் !

கைப்பொருள் களவாடப்பட்டது போன்ற மயக்கம் பரவியது அவனுள்; அழைப்பில் ஓட்டினான் பார்வையை.

சுந்தரம்... சுந்தரி !

பெயர்ப் பொருத்தம் அவனை வியப்புறச் செய்தது. சுந்தரிக்குகந்த சுந்தரன்தானே !

பின், கடிதம் :

" அத்தான்,

கல்யாண அழைப்பு அனுப்பியிருக்கிறேன், உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன்.

சுந்தரி "

சுந்தரி அவனுக்கென்று 'ஒப்பந்தம்'. அவள் அழகு ராணி. அவளென்றால் சங்கரனுக்குத் தனிப்பிரேமை. பிள்ளைப் பிராயந் தொட்டே இருவரும் நெருங்கிப் பழகினவர்கள்.

அப்பொழுது அவன் திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரியில் படித்துக்கொண்டு இருந்தான். அங்குதான்

சுந்தரிக்கு வீடு. சங்கரன் கிளைவ் விடுதியில் இருந்தான். என்றாலும், அடிக்கடி சுந்தரியைச் சந்தித்தான். அவளை விட்டு அரைக்கணமும் அவனால் பிரிந்திருக்க முடியாது என்பது போன்ற ஓர் உணர்வெய்தினான். வயதுவளர்ந்தது; அன்பும் வளர்ந்தது.

தோட்டத்துத் தென்றலில் மாங்குயில்கள் தீஞ்சுவைக் கீதம் எழுப்பும். இங்கே இந்த ஜோடிப் புறாக்கள் அளவளாவிப் பிரேம கீதம் இசைப்பார்கள். மலைக்கோட்டை மணி அவர்களது பேச்சின் எல்லைக்குக் கோடிட்டுக் காட்டும். பின்னர் பிரியாமல் பிரிவார்கள். பொழுது விடிந்தால் மீண்டும் சந்திப்பு—பிரிவு. இப்படி எத்தனையோ நாட்கள்—எத்தனையோ சம்பவங்கள்!

பரீட்சை எழுதிவிட்டுச் சங்கரன் ஊருக்கு வந்தான்.

அப்பொழுது தான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. கல்யாணப் பேச்சு நடப்பதாக இருந்த நாளிலே இருதரப்புப் பெற்றவர்களிடையில் பழைய வியவகாரமொன்று முளைத்தெழுந்து 'கோர்ட்' படி ஏறிவிட்டது. அத்துடன் அவர்கள் 'சம்பந்த' மும் முறிந்தது.

ஆனால் சங்கரனுக்கு உலகமே சூன்யமாகி விட்டதாகத் தோன்றிற்று. அப்போதைய நிலையில் அவன் தன் தாய் தந்தையர்க்கு எதிராக நடக்கவும் துணிவு கொள்ளவில்லை. எனினும், அவளை அவன் எங்ஙனம் மறக்கமுடியும்? அவளுடைய அன்புப் பார்வை; ஆதரவுப் பணிவிடை; அழகூறும் பேச்சு—இவற்றை அவன் எங்ஙனம் மறப்பான்? அவன் இதயம் பூராவிலும் சுந்தரியல்லவா வாசம்செய்தாள்? ஆம்; அவள்தான் அவன் உலகம்!

அன்றைய அவர்களது பாசமும் பிணைப்பும் இருவரையும் கணவன்—மனைவியாக ஜோடி சேர்த்திருக்க வேண்டியது. ஆனால் பந்தம்—விதி என்று கதைக்கின்றனரே, அந்த ஒரு தொடர்பு அவர்களைத் திசை வேறு திக்கு வேறாகப் பிரித்தது. ஆம்; அவர்களது வாழ்க்கைப் பாதையின் திரும்புமுனை.

காலம் மாறியது. சங்கரனுக்கு சுந்தரியின் நினைவு மாறவில்லை.

''உலகப் பொருள் அனைத்தும் ஒன்றை யொன்று தழுவித்தான் வாழமுடியும்.'

கவிஞன் ஷெல்லியின் கூற்றுயிற்றே இது!

பின் கேட்கவேண்டுமா? சங்கரன் சாளாவைக் கைப் பற்றினன். சாளா தனக்கு முன்பின் தெரியாத இடத்தில், புகாத இடத்தில் அடியெடுத்து வைத்தாள். சுந்தரிக்கு எவ்விதத்திலும் அவள் குறைந்தவளல்ல. சுந்தரிக்கு இனித் தான் மணவினை. அதற்குத்தான் அழைப்பு.

சாளா எழிலணங்கு. சங்கரனைப் பதியாகப் பெற்றதில் எவ்வளவோ பெருமைப்பட்டாள்; பெருமிதமும் கொண் டிருந்தாள். ஆனல், நாளாக நாளாக ஏனே ஒரு மாதிரியாக, எதையோ பறிகொடுத்தவன் போல, எப்பொழுதுமே காணப்பட்ட கணவனின் நிலை அவளை வெகுவாகப் புண் படுத்தியது.

அன்புடன் அண்டிஞல் ஆதரவு கூடிய ஒரு இன்சொல் இல்லை; தாபத்துடன் நோக்கிவிட்டால் தயவான ஓர் புது மொழி கிடையாது. வாழ்க்கை—தாம்பத்தியம்; ஊடல்—கூடல்! ஆம்; எதிலும் விரக்திதான சங்கரனைப் பொறுத்த அளவிலே!

ஆனல் அந்த ஒரு நாளில்—!

'சாளா'.

'அம்மா'.

'நாழி ஆய்விட்டதே, மாப்பிள்ளை வீட்டார்கள் வரும் நேரமாய்விட்டதே. சீக்கிரம் உடுத்திக்கொண்டு தயார் செய்.'

'சரளா'

அழைப்பு பறந்தது. மாப்பிள்ளை தன்னை எடை போட்டு 'ஜட்ஜ்மெண்ட்' சொல்லவிருக்கும் யாரோ ஓர் இளைஞன் எங்கிருந்தோ அப்பாவின் சம்மதத்தின்பேரில் வந்திருக்கிறுர் என்று நினைத்துப் பார்க்கையில் அவளுக்கு இனம் புரியாத பரபரப்பு பரவியது.

சரளா 'டீக்' காக டிரஸ்செய்து ஒயிலுடன் ஹாலில் போய் அமர்ந்தாள். பாட்டு வேண்டுமென்றார்கள்.

'கனவு கண்டதிலே...ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை—எவனோ
என்னகம் தொட்டுவிட்டான்.'

அனுபவித்து, ரசனை துள்ளப் பாடினாள் அவள். அவளுக்கு நிம்மதிகனிந்தது. அப்போது எவ்வளவு மனக்கோட்டைகள் கட்டினாள்?

ஆனால் இன்று......!

அவள் கண்கள் கண்ணீரைக் கக்கக் காத்திருந்தன.

'என்னகம் தொட்டு விட்டான்!'

நினைத்தாள்; அவளிடமிருந்து நெடுமூச்சு வெளிப் போந்தது.

அவளிடம் காந்த இழைவு, மோகனச் சிரிப்பு, கலகல வெனும் பேச்சு எல்லாமிருந்தன; இருந்தும் சங்கரைப் பொறுத்தவரை அவளுள் ஏதோ ஒரு குறை—நிறை வின்மை காணப்பட்டதாக அவன் உணரலானான்.

அந்த ஒரு குறை?

சரளா ஆக்கிரமித்திருக்கும் இடத்தில் தன் கனவுப் பதுமை சுந்தரி இருந்திருந்தால்...!

அவன் செய்கை ஒவ்வொன்றிலும் தவறாது சுந்தரியின் தோற்றமே நிழலாடியது; ஊக்கம் தந்தது. அதே கணம் பித்தனாக்கிச் செயல் இழக்கவும் செய்தது. அவள் இன்ப நினைவை அவனால் மறக்கக் கூடவில்லைபோலும். ஏன் இந்தச் சலனம்? ஏன் இந்தச் சபலம்? ஆமாம்; இதயக் குகையில் சுரங்கம் வைக்கப்பட்டிருக்கும் மனித உணர்ச்சி களின் சலனத்திற்கும் சபலத்திற்கும் அளவு ஏது?

★

'டிங்-டாங்.'

சுவர்க் கடிகாரம் இரவில் பத்து அடித்து ஓய்ந்தது. சுய உணர்வு 'லகான்' பிடித்ததும் சங்கரனுக்குத் தன் நினைவு வந்தது.

சுந்தரியின் திருமணத்துக்குப் போக வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு ஓடியது, வீட்டார்களின் பூசலையும் மறந்து. இடைவேளைப் பிரிவின் பின் மீண்டும் அவள் 'தரிசனம்' கிடைக்குமல்லவா?

என்ன தோன்றியதோ, சங்கரன் ஹாலினுள் பிரவேசித்தான். மின்சார வெளிச்சத்தில் அழைப்பு ஒன்று காணப்பட்டது. என்ன ஆச்சரியம்! தனக்கு வந்தது போன்ற அதே அழைப்பு. யார் அனுப்பினார்கள்? அத்துடன் இணைத்திருந்த கடிதத்தைப் படித்தான். 'சுந்தரம்' என்று கையெழுத்திட்டிருந்தது. சரளாவைக் கட்டாயம் தன் மண விழாவிற்கு வரக் கோரியிருந்தது கடிதம். யார் இந்தச் சுந்தரம்? விஷவித்தின் முதல் கணை இது.

அடுத்து ஒரு கடிதம் இருந்தது. அது சரளாவின் கைப்பட எழுதியிருந்தது.

**அத்தான்,**

தங்கள் கடிதம், பத்திரிகை கிடைத்தன. தங்கள் கலியாணத்துக்கு வர இயலாத நிலையிலிருக்கிறேன். அந்த நாளில் என்மீது கொண்ட அன்பில் என்னை அழைத்திருக்கிறீர்கள். ஆனால், இன்றைய என் நிலை வேறு. நான் என் கைப்பிடித்த கணவரின் கட்டளைக்கு அடிபணிய வேண்டியவள், நெருப்பும் பஞ்சும் தோழமை கொள்ளக்கூடுமா? ஆம்; இன்றைய என் நிலை அது. ஆனால் தங்கள் கடிதத்தைக் கண்டால்கூட என்ன நினைப்பாரோ 'அவர்' என்று அஞ்சுகிறேன். ரயில் நட்புப் போல என்னையும் மறந்துவிடுங்கள். நான் அவர் உயிர்த்துணை. அவர்தான் என் லட்சியம். அவர் நினைவு ஒன்றே என் உயிர், பலம், ஊக்கம் அனைத்தும். மன்னியுங்கள்.

**சரளா.**

தன் மனைவி எழுதியிருக்கும் கடிதத்தைக் கண்ணோட்டமிட்ட சங்கரனுக்கு நெஞ்சு மலையாய்க் கனத்தது. 'தன்னை மணந்த கணவன்தான் சகலமும்' என்ற உயரிய பண்பாட்டை உள்ளடக்கி எழுதின அவ்வரிகளைக் கண்டதும் வாழ்க்கையின் உண்மை பளிச்சிட்டது, காரிருளில் தோன்றும் மின்னலென.

அவன் இதய அந்தரங்கம் பேசியது.

“அந்நியர் கல்யாணத்துக்குப் போக வேண்டுமென்றால் ஏதாகிலும் நான் நினைத்துக்கொள்வேன் என்று தானே சாளா இப்படி எழுதியிருக்கின்றாள்? மனைவி என்ற வரம்பிற்கு உட்பட்டாள் அவள். அதே போலத்தானே நானும்? சுந்தரியின் நினைவில் அவளைக் காணத் துடித்தது எத்துணை துரோகம்? நானோ சுந்தரி இன்னொருவனுக்கு வாழ்க்கைப்பட வேண்டியவளன்றோ? அவள் நினைவில் பித்தாகி, பித்தனாகிச் சாளாவை—அவள் அன்பை நிராகரித்தது எவ்வளவு மன்னிக்கமுடியாத குற்றம்? ஆம்; சாளா என் உயிர்த்துணை; அவள் புடமிட்ட பொன்!”

மனச்சாட்சி அவனை என்னவோ செய்தது. ‘மனைவி’ என்ற ஸ்தானம் அப்பொழுது தான் சங்கரனுக்குப் புரிந்தது. அதேகணம் தன் கலியாணத்துக்கு எழுத்தாள நண்பர் ஒருவர் அனுப்பிய ‘க்ரீட்டிங்க்ஸ்’ வாசகத்தையும் சிந்தித்தான்.

“வாழ்க்கை ஓர் முள் படுக்கை என்கிறார்கள்! ஆனால் அது ஓர் அழகிய மலர்ப்படுக்கை. ஆம்; அது சுகமாக விருக்கும்; ‘ஹாயா’க இருக்கும்—உணரும் விதத்தில், புரிந்து கொள்ளும் விதத்தில், அனுபவிக்கும் விதத்தில். வாழ்க்கை ஓர் இன்பரோஜா; இளந் தென்றல்; தேனிலவு.”

தத்துவ ரீதியில் எழுதியிருந்த அவ்வரிகள் சங்கரனுக்கு நன்றாகப் புரிந்தன. அவன் வாழ்க்கையைப் புரிந்து கொண்டான். சாளாவையும் புரிந்துகொண்டான்!

சாளா படுத்திருந்தாள். சங்கரன் மெல்ல அண்டினான். பள்ளியறை என்ற பாத்தியதையுடன் கிடந்த அவளது மேலாடை நழுவிக்கிடந்தது. நெருங்கிச் ‘சாளா’ என்றான். அவன் குரல் கேட்டதுதான் தாமதம். உடையைச் சரிப்படுத்திவிட்டு வாரிச் சுருட்டிச் சாளா எழுந்தாள். கண்களிலிருந்து கண்ணீர் ஓடியது. அப்படி யென்றால் இன்னமும் அவள் உறங்கவில்லையா?

சாளா கணவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்த முகத்தில் என்றுமில்லாத அமைதி படர்ந்திருந்ததைக் கண்ட அவள் அமைதி பெற்றாள்; அதிசயமுற்றாள்.

சங்கரன், மேஜைமீது ஸ்டாண்டிட்டு வைக்கப்பட்டிருந்த புகைப்படத்தைப் பார்த்தான். ஒரு கணம் மலைத்து நின்றான். மாலைகள் புடைசூழக் காட்சியளித்தது அவன் போட்டோ. அவன் விழிகள் கலங்கின.

"சரளா, உனக்கு சுந்தரம் உறவா?"

"ஆமாம்; சொல்லலா மென்றிருந்தேன். அத்தான் வேண்டும். அவருக்குக் கல்யாணம். லெட்டர் எழுதிவைத்திருக்கிறேன், போஸ்ட் செய்ய."

"சரளா, ஒரு ஆச்சரியம் பார்த்தாயா? மணமகனிடமிருந்து உனக்குப், மணமகளிடமிருந்து எனக்கும் அழைப்புகள் வந்திருக்கின்றன. சுந்தரி என அத்தை பெண். நீ கல்யாணத்துக்குப் போய் வா."

"உங்கள் இன்பச் சூழ்நிலையை விட்டு நான் எங்கும் போகவில்லை."

"அப்படி யென்றால் தம்பதிகட்கு நம் இருவர் சார்பிலும் நல்ல பரிசாக நாளை அனுப்பி விடுவோமா?"

"ஏன், நீங்கள் போகவில்லையா?"

"ஊஹூம்; என் இதய ராணியை விட்டு எனக்கு அங்கு என்ன வேலை? சரளா, ஒரு விண்ணப்பம். உன் அத்தானுக்கு எழுதி வைத்திருக்கிறாயல்லவா அந்தக் கடிதத்தை அனுப்பவேண்டாம். பாவம், அவர் வருந்துவார்."

'ஏன்' என்ற கேள்விக்குறி அவளது நெற்றியில் வளைவிட்டது. ஆனால் கேட்கவில்லை; 'சரி' என்ற பாவனையில் இருந்தாள்.

மேஜை மீதிருந்த பால் பாத்திரத்தைப் பார்த்ததும், "சரளா, பால் அப்படியே இருக்கிறதே, இன்னும் சாப்பிடவில்லையா?" என்று கேட்டு, பாலைக் கூர்ந்து நோக்கினான். ஏனோ அடுத்த நிமிஷம் அவன் திகைப்பூண்டை மிதித்தவனாகத் திகைத்து நின்றான். பாலின் நிறம் மாறியிருந்தது. இதில் ஏதோ சூது இருக்கிறதென முடிவிட்டான் அவன்.

"சரளா, பால் உனக்கு வேண்டாமா? நான் சாப்பிடட்டுமா?"

"ஐயோ, வேண்டாம். விஷம் கலந்தது."

" என்ன, விஷமா?"

" விஷம்...!"

சங்கரனுக்குத் தலை கிறுகிறுத்தது. சுற்றுமுற்றும் பார்த்தான். எல்லாம் சுழன்றன. சுவரின்மீது அரியாசனம் வகித்த வீனஸ்ராணி சுற்றினாள்; சிரஞ்சீவிக் காதலர்களான ரோமியோ—ஜூலியட்; லைலா—மஜ்னு சுற்றினார்கள்.

பாலில் விஷம் கலந்து தன் உயிரைப் போக்கிக்கொள்ள சாளா திட்டமிட்டு இருக்கிறாள் என்ற செய்தியை அவன் உணரலானான்; அதற்குக் காரணம் இதுவரை அவளைத் தான் புறக்கணித்ததே என்ற உண்மை புலனானதும் நீர் வழிந்த கண்களால் தன் மனைவியை ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வை தன் தவறுக்கு மன்னிப்புக் கோருவதுபோலிருந்தது.

" சாளா, என்னை மன்னிப்பாயா?" என்று கெஞ்சினான் சங்கரன்.

" மன்னிப்பா? அன்பரே, தாங்கள் அல்லவா மன்னிக்க வேண்டும். கணநேரத்து வெறி கற்பித்த மனமாற்றத்தில் தங்களை விட்டு விடுதலையடைய எண்ணிய என் தீச்செயலுக்குத் தாங்கள்தான் மன்னிக்கவேண்டும்."

" சாளா."

அவன் அவளது சுருளலைபடிந்த கூந்தலைச் சரிப்படுத்தினான்; அவள் நெஞ்சம் விம்மித் தணிந்தது. அத்தருணத்தில் சாளா அவன் இதயத்தில் ராஜ்யம் நடத்திக்கொண்டிருந்தாள். சங்கரனுக்கு அப்போதுதான் உயிர் திரும்பிற்று.

தன்வாழ்வில் துணைவர் ஏற்றிய தாம்பத்திய விளக்கை அஞ்சலி செய்துகொண்டிருந்தாள் சாளா!

விஷமும் அமிர்தமும் பாற்கடலில் தோன்று மென்பது கதை. ஆனால் அவை இரண்டுமே மனித இதயத்தில் உருப்பெறும்போது......

# கோதையின் கேள்வி

அந்தக் கேள்வி திரும்பத் திரும்பக் காவேரியின் இதய அடிவாரத்தில் எதிரொலித்துக்கொண்டிருந்தது. அப்படிப் பட்ட கேள்வியை அச்சமயம் அவள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் என்றோ ஒரு நாள், அதாவது விபரம் புரிந்த உணர்வின் தூண்டுதலால் அத்தகைய வினா ஒன்று தன் குழந்தை வாயினின்றும் வெளிக் கிளம்பும் என்று நினைத் ததுமட்டும் உண்மை. கடைசியில் குழந்தை சற்றும் எதிர்பாராத சமயத்தில் அதைக் கேட்டுவிட்டாள்.

மத்தியானம் வேலை முடிந்ததும், சுடுசோறு வடித் தாள். வடித்தவுடன் 'சுடச் சுட' தட்டில் பிசைந்து மகளுக்கு ஊட்ட உட்கார்ந்தாள் காவேரி. குழந்தையின் மனம் எங்கு அலைந்ததோ? பிடித்த சோற்றுக் கவளத்தை உண்ணக்கூட நினைவின்றி, எடுத்த எடுப்பிலேயே அந்தக் கேள்வியைக் கேட்டது.

"அம்மா, கோடி வீட்டு மணிக்கு நிதமும் அவன் அப்பா ரொட்டி, மிட்டாய் எல்லாம் வாங்கிவந்து கொடுக் கிறாரே! எனக்கு மட்டும் அப்படி வாங்கித்தர அப்பாவைக் காணோமே. எங்கே என் அப்பா? ஊ...ம்...சொல்லு..."

அவள் திடுக்கிட்டாள். பச்சைக் குழந்தைக்கு என்ன சமாதானம் சொல்ல இருக்கிறது? உள்ளெழுந்த சல னத்தை அடக்கிக்கொண்டாள்.

"கோதை, நீ என் கண்ணில்லையா? அப்பா பணம் சம்பாதிக்கப் போயிருக்கிறார். வந்ததும் பொம்மை,

பனூன், ரொட்டி எல்லாம் வாங்கி வருவாங்க. எங்கே சோற்றைச் சாப்பிடு" என்று 'தாஜா' செய்தவாறு மக ளுக்குச் சோற்றை ஊட்டினாள்.

சம்பாதிக்கவா அவள் கணவன் போயிருக்கிறான்?

அவள் நெஞ்சம் எதிர்க் கேள்வி கேட்டது. பொய்யைக் கற்பித்து, குழந்தை உள்ளத்தை ஏமாற்றிவிட் டதை எண்ணி வருந்துவதைத் தவிர அவளுக்கு வேறு மார்க்கம் புலப்படவில்லை. காவேரியின் கண்கள் கலங்கின.

"தெய்வமே! ஒன்றும் தெரியாத மகளுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? எங்கள் கலி தீர மச்சான் விடுதலை கிடைத்துச் சீக்கிரம் வந்துவிடுமா? மாரியாத்தா! கட்டாயம் மாவிளக்குப் போடுறேன். தாயே..." என்றெல் லாம் வேண்டிக்கொண்டாள்.

★

உள்ளமும் உள்ளமும் பேசிக்கொண்டதின் பேரில், நாலு பேர் அறியக் காவேரியின் கழுத்தில் தாலியைக் கட்டினான் மாணிக்கம். வாழ்க்கை சுகமுடன் நடந்தது; ஏழ்மையில் இன்பம்! முள் ரோஜாவிலிருந்துதானே உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சுகந்த மணம் எழுகின்றது!

காலச்சக்கரம் சுழன்றது. காவேரியும் மாணிக்கமும் ஆக இருந்த குடும்பத்தில் மூன்றும் நபர் ஒன்றும் அங்கீ காரம் பெற்றது. கோதையின் ஜனனம் தம்பதிகள் வயிற் றில் பால் வார்த்தது. என்றாலும் அடுத்த வருஷமே அப் படிப்பட்ட எதிர்பாராத விளைவு நேரிடுமென்று யாரும் நினைக்கவில்லை.

மூன்று பேர்களுக்கு வகை சொல்லி நாளை ஓட்ட வேண்டியது மாணிக்கத்தின் பொறுப்பல்லவா? அதற் காகவே அம்முயற்சியிலும் ஈடுபட்டான். அங்கிருந்து பதி னைந்து மைல் தொலைவிலிருந்து ரகசியமாக அரிசி வாங்கிச் சுமந்து லாபத்திற்கு விற்று ஜீவனம் நடத்தினர் சிலர். அவர்களில் மாணிக்கமும் ஒருவன். விடியற்காலையில்

'துட்டு வட்டி'க்குக் கிடைத்த ரொக்கத்துடன் புறப்படும் அவன், மீண்டும் வீடு வரும் சமயம் இருட்டிப் போகும். பத்து, பன்னிரண்டு ரூபாய்க்கு அரிசி வாங்குவான். வீடு வந்ததும் அரிசி பூராவும் காலியாகிவிடும். கண் முன்னாலேயே லாபம் மூன்று, நான்கு ரூபாய் சர்வ நிச்சயம் கிடைக்கும். ஆக இந்தத் தொழில் பட்டப் பகலில் 'கறுப்பு மார்க்கட்' முத்திரையுடன் நடந்தது.

காற்று என்றென்றும் ஒரே திக்கில்தான் வீசும் என்பது என்ன நிச்சயம்?

அப்பொழுது ரேஷன் ரொம்பவும் 'கெடுபிடி'யாக இருந்தது. அன்று வழக்கம்போல அரிசி மூட்டையைச் சுமக்க முடியாமல் சுமந்து வருகையில், எதிரே சைக்கிளில் வந்து நின்ற ரேஷன் அதிகாரியைக் கண்ட மாணிக்கத்திற்கு ரத்தம் முழுதும் அப்படியே உறைந்துவிட்டது போன்ற பிரமை எழுந்தது. அவருடன் வந்திறங்கிய அந்தச் செட்டியாரைக் கண்டதும், மாணிக்கத்திற்கு விஷயம் விளங்கிவிட்டது. செட்டியாருக்கு அவன்மீது பல நாளாக ஒரு 'கண்' உண்டு. அவர்தான் அவ்வூர் ரேஷன் கடைக்காரர். பின்னர் கேட்பானேன்? ரகசியமாக அரிசி வியாபாரம் நடப்பது பற்றிய 'துப்பு' அவர் வாயிலாக அதிகாரிகளுக்கு எட்டியது. அதன் பலன் மாணிக்கத்தின் தலையில் விடிந்தது.

மாணிக்கம் செய்த கள்ள வியாபாரம் நிரூபிக்கப்பட்டது. அதன் பலனாக அவனுக்கு ஒரு வருஷம் சிறைத் தண்டனை கிடைத்தது. கையும் களவுமாக அவன் பிடிபட்ட தருணம், அந்தச் செட்டியாரைப் பார்த்தான். அப்பார்வையில்தான் எவ்வளவு கொடூரம், ஏக்கம், சஞ்சலம் பிரதிபலித்தது!

கணவன் கைதியாகிய 'சேதி' அறிந்து புலம்பினாள் காவேரி. கைக்குழந்தையுடன் எப்படிக் காலந்தள்ள முடியுமோ என்று எண்ணிப் பார்த்த அவளுக்கு ஆத்திரம் பொங்கியது; அழுகை பீறிட்டது. அன்றைக்குத் தன்

'மச்சான்' அகப்பட்டுக்கொள்ள ஏதுவாகவிருந்த செட்டியாரை நிந்தித்தாள் அவள்.

மகளின் இன்பச் சிரிப்பில்—கிள்ளை மொழியில்—விளையாட்டில் புருஷனின் பிரிவைத் தேற்றிக்கொண்டாள் காவேரி. 'வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி' காலத்தை விரட்டிவிடப் பார்த்தாள். எனினும் முடிகிறதா, என்ன? வீடுகளில் கைவேலை செய்து பிழைக்கலானாள்.

காவேரிக்குச் சோறு கண்ட இடம் சொர்க்கலோகமாகிவிட்டது. அவளது கஷ்ட நிலையைக் கேள்விப்பட்டு மனம் இளகிய ரேஷன் கடைச் செட்டியாரின் மனைவி, அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கைகொடுத்துதவினாள். "காவேரி, எங்க வீட்டுச் செட்டியார் செய்தது செய்துவிட்டார். அதை மனசிலே இனியும் வச்சிக்காதே. என்னமோ நடந்தது நடந்து போச்சு. உன் புருஷன் விடுதலை கிடைத்து வெளியே வந்ததும் நம்ம செட்டியாரையே ஒரு வழிபண்ணித் தரச்சொல்லுகிறேன். உன் மச்சான் வரமட்டும் இங்கேயே சாப்பிட்டுக்கிட்டு இரு" என்று அந்த அம்மாள் வேண்டிக்கொண்டாள்.

இந்த வரவேற்பைக் கண்டு காவேரி பிரமித்தாள். அவள் உள்ளமும் மலர்ந்தது. ஆம்; விஷம் தோன்றிய பாற்கடலில் தானே அமிர்தமும் தோன்றியது!

★

"காவேரி, உனக்குச் சேதி தெரியுமா? நம் நாடு குடியரசானதுக்காகச் சாதாரணக் கைதிகளையெல்லாம் விடுதலை செய்யப்போகிறாங்களாம் நம்ம சர்க்காரிலே. பேப்பரிலே போட்டிருக்குதுன்னு செட்டியார் சொன்னார். நிச்சயம் உன் புருஷனும் இன்னிக்கு, நாளைக்கு வந்துடலாம்" என்று செட்டியாரின் மனைவி சொல்லக் கேட்டதிலிருந்து காவேரிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. தன் கணவனுக்கு விடுதலை கிட்டும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவளுக்கு அச்செய்தி ஆனந்தத்தை ஊட்டிற்று.

சூரியன் அஸ்தமித்து இருள் எங்கும் படர்ந்தது.

சமையலறையில் செட்டியார் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அவர் மனைவி உணவு படைத்தாள். வெளியே குழந்தையின் அரவணைப்பில் காவேரி தன்னை மறந்திருந்தாள்.

அப்பொழுது கதவைப் 'படபட' வென்று தட்டும் சத்தம் கேட்டது. காவேரி குழந்தையை அணைத்தவாறு ஓடிக் கதவைத் திறந்தாள். திறந்த வழியினூடே "எங்கே அந்தச் செட்டி?" என்ற ஆவேசக் குரல் எதிரொலித்துப் பரவியது.

மெல்லத் தலையை உயர்த்திப் பார்த்தாள்; குடல் நடுக்கமெடுத்தது. அங்கே பைத்தியம் பிடித்தவன் போல, கோபக் கனல் பறக்கக் கைகளைப் பிசைந்துகொண்டு நின்றிருந்தான் மாணிக்கம். அதே சமயம் அந்த அம்மாள், செட்டியார் மனைவி கூறிய 'ஜோஸியம்' நினைவுக்கு வந்தது அவளுக்கு.

"யாரு, காவேரியா?"

"ஆமாங்க மச்சான்."

"உனக்கு இந்த இரக்கமற்ற பாவி வீட்டிலே என்ன வேலை?" என்றான் மாணிக்கம். அவன் கேள்வியில் சோளம் பொரிந்தது.

"மச்சான், சத்தம் போடாதீங்க. செட்டியாரு பெண் சாதி மகாலட்சுமி போல. அவங்க இல்லாவிடில் நானும் பிள்ளையும் செத்த இடங்கூட இந்நேரம் புல் முளைச்சுப் போயிருக்குமே! உங்களைப் பிடித்துக்கொண்டு போனதிலிருந்து கால் வயிற்றுப் பாட்டுக்குக் கூடத் திண்டாடிப் போய்விட்டேன். என்னமோ, நல்ல காலம் அந்த அம்மாவுக்குச் சேதி தெரிந்து என்னை அழைத்துப் போய் இது வரை காப்பாற்றினாங்க" என்று சொன்ன தன் மனைவியின் வார்த்தைகளைக் கேட்ட மாணிக்கம் சிலையாகிப் போனான்.

" நிஜமாகவா, காவேரி? செட்டியாரு என்னை வேண்டுமென்று காட்டிக் கொடுத்துவிட்டார் என்கிற கோபத்திலே அவர் மேலே பழி வாங்கணும் என்று நானே எண்ணிக் கொண்டல்லவா இருந்தேன். தேசத்திலே அரிசிச் சோறு எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கணும் என்று சொல்லறப்போ நான் இந்த மாதிரி கள்ள வியாபாரம் பண்ணியதும் தப்புத்தான். ஆனாலும் இத்தனை நாள் வேறு ராஜாங்கம் நடந்தது; ஆனால் இன்றையிலிருந்து நம்ம ராஜாங்கம்; இனி உண்மையாக நடந்து, உடல் உழைத்துச் சம்பாதித்துச் சாப்பிடணும். இப்படி விரதமெடுத்துக்குவோம். ஆனால் இன்றைக்கு உன்னைக் காணாவிட்டால் என்ன தீவினை நேர்ந்திருக்குமோ? காவேரி, அந்தப் புண்ணியவதி மாங் கல்யத்துக்கு உலை வைக்க நினைத்து வந்த நான் எப்படி அவங்க முகத்திலே விழிப்பேன். ஊஹூம்; மாட்டேன். நான் முதலில் வீட்டுக்குப் போகிறேன்" என்றான் மாணிக்கம் உணர்ச்சியுடன்.

கண்களில் வரம்பு கட்டியிருந்த கண்ணீரை விலக்கி விட்டு, தன் மகளை வாங்கி முத்தமிட்டான் மாணிக்கம். அடுத்த நிமிஷம் புறப்பட்டான். 'மச்சா'னின் மாற்றத்தைக் கண்டு வாயடைத்துப் போனாள் காவேரி.

புவனு வாய் திறந்து பேசமுடியாது. அதற்கு வட்டியும் முதலுமாக அவள் விழிகள் பேசுமே! குறுநகையை ஒளித்து வைக்கும் சிமிழ் உதடுகள் ஆயிரம் இன்பக் கதைகள் பேசுமே!

# மோகினி

கையில் பிரித்து வைத்திருந்த திருமண அழைப்பைப் படித்து முடித்த சுந்தரேசனுக்கு ஆச்சரியமும் அனுதாபமும் மாறி மாறி உண்டாயிற்று. விசுவநாதன் என்ற பெயருடன் ஒட்டியிருந்த பி. ஏ. என்ற இரண்டு எழுத்துக்கள் அவன் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தன. மணமகள் புவனு; அவளை மட்டுமே அவனுக்குத் தெரியும். அவர்கள் இருவரையும் ஜோடி சேர்க்க இருக்கும் விதியைப்பற்றிக் கொஞ்ச நேரமாகிலும் அவனுல் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

பி. ஏ. படித்துவிட்டு, இருந்திருந்து இந்த ஊமைப் பெண்ணைத்தானு கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும்? ஒருவேளை இத்தகைய சதிக்கு அவனுடைய வறுமைதான் காரணமாக இருக்குமோ? இதை நினைக்கவே, சுந்தரேசனுக்கு மாப்பிள்ளையாக வரப்போகும் விசுவநாதன் பேரில் அளவுகடந்த இரக்கம் ஏற்பட்டது.

அவன் புவனுவை ஓரிரண்டு சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறான். விதிவசமாக ஊமை என்ற ஒரு குறையைத் தவிர மற்றப்படி அழகில் அவள் 'ஏ ஒன்!'

ஏதோ சொற்ப காலம் பரிச்சயம் ஏற்பட்ட தன்னை ஞாபகம் வைத்து அழைப்பு அனுப்பியுள்ள சுவாமிநாதய்யருக்காக வேண்டி, அவர் பெண் கல்யாணத்திற்கு எப்படியும் போய்த்தான் ஆகவேண்டுமென்று முடிவு கட்டினுன் சுந்தரேசன்.

“ஸார், இன்னொரு லெட்டர் உங்களுக்கு; முதலில் கொடுக்க மறந்துவிட்டேன்” என்று சொல்லிக்கொண்டே ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்றான் தபால்காரன்.

மதுரையில் நடக்கும் சுவாமிநாதய்யர் வீட்டுக் கல்யாணத்துக்கு அவசியம் போய்வர வேண்டுமென்று அம்மா எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தைப் பார்த்த சுந்தரேசனுக்கு வியப்பு மேலிட்டது. அந்த வீட்டைப்பற்றி அம்மாவுக்கு எப்படித் தெரியும்? அவள் அவ்வளவு அக்கரையாகக் கல்யாணத்திற்குப் போகச் சொல்லும் காரணம் என்ன?

சுந்தரேசனுக்கு ஒன்றும் புரியவில்லை. சாதாரண விஷயங்களுக்கெல்லாம் மூளையைக் குழப்பிக்கொண்டு, காலத்தை விரயப்படுத்தக் கூடாதென்பது அவன் கருத்து. ஆகவே அவன் கல்யாணத்துக்குப் போவதென்று முடிவு செய்தான்.

★

‘போட்டோஆல்ப’த்தில் காணப்பட்ட அந்தப் படத்தைச் சுந்தரேசன் எவ்வளவு நேரம்தான் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தானோ தெரியாது. நினைவின் சுழற்சியில் எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவன் மனதில் அலைபாய்ந்தெழுந்தன.

“மீனா” என்ற இரண்டு எழுத்துக்கள் போட்டோவின் கீழ் இருந்தன. மீனா வேறு யாருமில்லை; புவனாவின் உடன்பிறந்த தங்கை. புவனாவின் முகூர்த்தப் பத்திரிகையைப் பார்த்ததிலிருந்து அவனுடைய இதயஅந்தரங்கத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஆசை காட்டி நின்ற அந்த மீனாவின் எழில் பிம்பம் காட்சியளித்தது. மீனாவின் நினைவு முகமே அவனைப் புவனாவைப்பற்றி அதிகம் நினைக்கத் தூண்டியது.

மதுரையிலிருந்து மாற்றலாகி அவன் தஞ்சாவூருக்கு வந்து ஒரு வருஷம் இருக்கலாம். அதற்குள் எத்தனையோ தடவை அந்த இரு சகோதரிகளைப்பற்றியும் அவன்

நினைத்துப் பார்த்ததுண்டு. புவனு ஊமை என்ற விஷயம் மீனு சொல்லத்தான் சுந்தரேசனுக்குத் தெரியவந்தது. அதுமுதற்கொண்டு புவனுமீது அவனுக்கு ஒரு தனி அனுதாபம்.

முன் பாவாடை, தாவணி சகிதம் காட்சியளித்து மனம்விட்டுப் பழகிப் பேசிவந்த மீனு இதற்குள் எப்படி எப்படி மாறிவிட்டிருப்பாளோ? என்று எண்ணினுன்.

அப்போது அவன் மதுரை கலெக்டர் ஆபீஸில் 'கிளார்க்'காக வேலைக்கு வந்தான். வேலைக்குப் புதிதாகை யால் அவனுக்கு ஆபீஸில் முதலில் பழக்கம் ஆனவர் சுவாமிநாதய்யர்தான். அத்துடன் அவர் தம் வீட்டின் முன்னிருந்த ஒரு அறையையும் அவனுக்கென்று ஒதுக்கிக் கொடுத்தார்.

ஒருநாள் "ஸார், 'காம்பவுண்ட் இன்டரெஸ்ட்' கணக்கு ஒன்று புரியவில்லை. அப்பா உங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளச் சொன்னுர்" என்று மீனு அறிமுகப் படுத்திக்கொண்டாள் முதன் முதலாக. அதுமுதல் பாடத் தில் சந்தேகங்கள் கேட்கும் வியாஜத்தில் மீனு அடிக்கடி சுந்தரேசன் அறைக்கு வரலானுள். சுந்தரேசனும் அவ ளுடன் சௌஜன்யமாகப் பழகிவந்தான்.

★

அன்று வீடு கலகலப்பாக இருந்தது. பிடில் நாதம் இங் கிதமாகக் காற்றில் இழைந்தது. என்ன விசேஷம் என்று சுந்தரேசனுக்கு விளங்கவில்லை. அப்பொழுது கையில் காப்பியுடன் மீனு உள்ளே நுழைந்தாள். அத்துடன் பக்ஷணங்களும் இருந்தன.

"ஸார், எடுத்துக்கொள்ளுங்கள். நாலைந்து மாதமாக அத்தை வீட்டில் இருந்த அக்காள் இன்று அம்மாஞ்சி யுடன் ஊருக்கு வந்திருக்கிறுள். வேறொன்றுமில்லை."

பக்ஷணங்களைச் சுவைத்த வண்ணம், "உன் சொந்த அக்காளா, மீனு? எனக்குத் தெரியாதே!" என்றுன் சுந்த

ரேசன். ஆனால் அப்படிச் சொன்ன பிற்பாடுதான் ஏன் அவ்விதம் கேட்டோமென்றிருந்தது அவனுக்கு.

சொல்லி வைத்தாற்போல அதேசமயம் குழாயில் தண்ணீர் பிடித்துச் சென்றாள் புவனா. ஒருமுறை அவளை அப்படியே விழுங்கிவிடுபவன் போலப் பார்த்து நின்ற சுந்தரேசனைக் கண்டதும், மீனா என்ன நினைத்தாளோ?

"ஸார், அவள்தான் புவனா! என் அக்காள். ஆனால் பாவம்..."

"என்ன மீனா?" என்று கவலையுடன் கேட்டான் சுந்தரேசன்.

"இவ்வளவு அழகைக் கொடுத்திருக்கும் பகவான் அவள் ஊமையையும் போக்கடித்துவிட்டால்..." என்று நிறுத்தினாள். அவள் குரல் கம்மியது.

சுந்தரேசன் அதற்குமேல் பேசவில்லை. புவனாவின் வருங்கால வாழ்க்கை அவன் உள்ளத்திலே அனுதாபத்தை உண்டுபண்ணியது.

அடுத்த நாள் எதிர்பாராதவிதமாகச் சுந்தரேசனைத் தஞ்சாவூருக்கு மாற்றிவிட்டார்கள். சுவாமிநாதய்யரிடம் விடை பெற்றுச் செல்லுகையில் கண்கலங்க நின்ற மீனாவும் புவனாவும் அவன் கண்களைவிட்டு அகலவில்லை.

★

சுபயோக சுபதினத்தில் புவனா மிஸஸ் விசுவநாதனாக மாறும் வைபவத்தைக் காண்பதற்காக ஆஜரானான் சுந்தரேசன். கல்யாண வீட்டில் மாப்பிள்ளைகளுக்கு நடப்பதைக் காட்டிலும் ஒருபடி மேலாகத் தனக்கு ராஜோபசாரம் நடப்பதைக் கண்டு ஆச்சர்யப்பட்டுப் போனான் சுந்தரேசன்.

புது மாப்பிள்ளை விசுவநாதன் ரொம்பவும் குஷாலாகச் சுந்தரேசனுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் சுந்தரேசனுக்கு விசுவநாதன் ஒரு புதிராகவே தோற்றமளித்தான். தான் கைபிடித்த மனைவி ஊமை என்பதறிந்தும் அதைப்பற்றி லவலேசமும் விசுவநாதன்

குறைபட்டவனாகத் தெரியவில்லை. அல்லது தெரிந்து கொண்டுதான் 'அதுவே தன் தலை எழுத்து' என்று மனதைச் சமாதானம் செய்துகொண்டுவிட்டாரோ என் றெல்லாம் எண்ணினான்.

புவனா வாய் திறந்து பேசமுடியாது. அதற்கு வட்டியும் முதலுமாக அவள் விழிகள் பேசுமே! குறு நகையை ஒளித்துவைக்கும் சிமிழ் உதடுகள் ஆயிரம் இன்பக் கதைகள் பேசுமே! சுந்தரேசன் இம்மாதிரி அந்தப் புதுத் தம்பதிகளைப்பற்றி என்னவெல்லாமோ சிந்தித்தான்.

அன்று, 'லீவ்' முடிந்து சுந்தரேசன் ஊருக்குப் புறப்படுவதற்காகப் பெட்டி படுக்கைகளைக் கட்டிக்கொண் டிருந்தான். அப்போது எதிர்த்த அறையில் பாட்டுச் சத்தம் தெளிவாகக் கேட்டது. மீனாவின் குரல் அல்ல என்பதை அனுமானித்த அவன் கூர்ந்து கவனித்தான். ஒருகணம் அவனுக்குப் பூமியும் ஆகாயமும் ஒன்றாகச் சுழல்வது போலத் தோன்றியது. யார் பாடுவது? புவனா வல்லவா? அப்படியென்றால் அவள் ஊமையில்லையா? மீனா முன்பு சொன்னது பொய்யா? அல்லது ஆலவாய்ப் பெருமான் இப்போதுதான் அவள் பெற்றோரது பிரார்த் தனைக்கு மனமிரங்கி அருள் சுரந்திருக்கிறாரோ?

மீண்டும் ஒருமுறை நோக்கினான். மீனா தன்னையே வெறித்துப் பார்த்துவிட்டு நகர்ந்துவிட்டதையும் கண்டு கொண்டான். செப்பிடுவித்தை பார்ப்பது போலவே அவனுக்குப் பட்டது.

ஆச்சர்யத்தில் மூழ்கி உட்கார்ந்திருந்த சுந்தரேச னிடம் ஒரு வாண்டுப்பயல் ஓடிவந்து ஒரு கடிதத்தை நீட்டியதும்தான் அவனுக்குச் சுயஉணர்வு வந்தது. அது மீனா எழுதிய கடிதம்:

**அன்பரே,**

முதலில் என்னை மன்னித்துவிடுங்கள். எதிரும் புதிருமாக நின்று தங்களிடம் மன்னிப்பைப் பெறவேண்டிய நான், இப்படிக் கடிதம் மூலம் மன்னிப்புக் கோருவதைத் தவறாக எண்ணமாட்டீர்களே?

சிறிது நேரத்துக்கு முன்பு புவனா பாடியதைக் கேட்டு தங்கள் முகத்தில் ஏற்பட்ட கலவரத்தைக் கண்டமாத்திரத்திலே அன்று நான் செய்த தவறை—

சொன்ன பொய்யை உணர்ந்தேன். என்றோ விளையாட்டாகச் சொல்லப் போக, அதை அப்படியே ஞாபகம் வைத்துக்கொள்வீர்களென்று நான் நினைக்கவேயில்லை. புவனா ஊமையல்ல. அன்று முதன்முதலில் அவளைக் கண்டபோது நீங்கள் பார்த்த பார்வையைக் கொண்டு எங்கே அக்காள்மீது காதல் கீதல் கொண்டுவிடுவீர்களோ என்று சந்தேகப்பட ஆரம்பித்தது என் மனம். அவள் நினைவில் அப்புறம் உங்கள் மனம் வீணாக அலைபாய நேரிடுமே என்ற அச்சம்! ஏன் தெரியுமா? அக்காள் எங்கள் அம்மாஞ்சிக்காகவே 'ரிசர்வ்' செய்யப்பட்டிருந்தாள். அதற்காகவே, அதுவும் உங்கள் சொந்த நலனை உத்தேசித்து அவ்விதம் ஒரு பொய்யைக் கற்பித்துக் கூற நேர்ந்தது. அவள் ஊமை என்று நான் சொன்னதற்குச் சரியாக அன்று அவளுக்கு அசாத்தியமான பல்வலி. வாயைத் திறக்கவே முடியவில்லை. என்னைப் பிடித்த நல்லகாலம், அடுத்த நாளே உங்களை மாற்றி விட்டார்கள். மறுதினம் நீங்கள் வீட்டில் இருந்திருந்தால் என் 'குட்டு' வெளிப்பட்டிருக்குமோ, என்னவோ?

விளையாட்டாகச் செய்த குற்றம்; நியாயத்தை நிர்ணயித்து என்னை மன்னிப்பது உங்கள் பொறுப்பு,

மறந்துவிட்டேன். எங்கள் அம்மாஞ்சி யார் தெரியுமா? அவர்தான் இந்த விசுவநாதன்.

இப்படிக்கு,

மீனா

*மீனாவின் குறும்புத்தனத்தைக் கண்ட அவனுக்குச் சிரிப்பதைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் அந்த க்ஷணம் மீனா ஒரு புதிர் போலக் காட்சியளித்தாள் சுந்தரேசனுக்கு. விதியின் ஆடலரங்கிலே மோகினி போலப் பல்வேறு உருவங்களில் தோன்றி மறையும் மீனாவை அவன் எப்படி மறப்பான்?*

*பயணத்துக்குத் தயாராகிக்கொண்டிருந்த சுந்தரேசனைக் கண்டு சுவாமிநாதய்யர் திகிலடைந்தார்.*

*"மிஸ்டர் சுந்தரேசன், என்ன அதற்குள் ஊருக்குப் புறப்பட்டுவிட்டீர்கள்? மீனா சொன்னாள்; ஓடோடி வந்தேன். முதலில் இன்றைக்கே இன்னும் ஒரு வார லீவுக்கு எழுதிப் போடுங்கள்.*

*"உங்களிடம் என்றைக்கோ சொல்லியிருக்க வேண்டிய விஷயம், இன்றுதான் நேரில் கூறச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்த நாளில்—அதாவது வாலிப வயதில்—எனக்கும் உங்கள் அம்மா சரசுவுக்கும் கல்யாணம் செய்து வைப்பது என்று நிச்சயித்திருந்தார்கள் எங்கள் பெற்றோர்*

கள். ஆனால் விதி எங்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டது. திடீரென்று நல்ல பூஸ்திதியுடன் இருந்த என் தந்தைக்குப் பலவிதங்களில் நஷ்டமேற்பட்டது. உலகத்தில் பணம் தானே ஜீவநாடி? ஆகவே எங்கள் எண்ணம் கைகூடாமற் போய்விட்டது.

"உத்தியோகத்துக்கென்று வந்த உங்களைப்பற்றி விசாரித்தறிந்த நான் அப்போதே ஓர் இன்பக் கனவு கண்டேன். அதற்கு அநுசரணையாகவே மீனு உங்கள் மீது அத்யந்த அன்பு கொண்டிருக்கிறாள். எப்படியும் மீனுவை உங்கள் வசம் ஒப்புவித்து மன நிம்மதியடைய எண்ணி உங்கள் தாயாரிடம் சொன்னேன். அவளும் சம்மதித்துவிட்டாள்... உங்கள் இருவர் ஜாதகங்களும் இழை குறையாமல் பொருந்தியிருக்கின்றன. மனம் போலத் தானே மாங்கல்யம்? என்னைக்கொண்டே உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்கச் சொல்லிவிட்டாள் உங்கள் அம்மா. அன்று பூர்த்தி பெறாதிருந்த எங்கள் மனோரதம் உங்கள் விஷயத்திலாவது நிறைவேறவேணும்... சம்மதம் தெரிவியுங்கள். வருகிற வியாழன் ரொம்பவும் பேஷான நாள். அன்றைக்கே நிச்சயதார்த்தம் செய்துவிடலாம்" என்றார் சுவாமிநாதய்யர்.

அவர் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஏதோ கனவில் நிகழ்வது போலவே தோன்றியது சுந்தரேசனுக்கு. அன்று மதுரைக் கல்யாணத்துக்கு அவசியம் போய் வர வேண்டுமென்று அம்மாவிடமிருந்து வந்திருந்த கடிதத்தின் தாத்பர்யமும் அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. இவ்வளவு எளிதில்—இவ்வளவு சீக்கிரமாக மீனு தன்னுடையவளாக ஆகிவிடுவாள் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

அவன் அகக்கண்முன் மாயமோகினி மீனுவுடன் தான் நடத்தப்போகும் இன்ப வாழ்க்கையின் காட்சிகள் எழுந்தன. அந்த நினைவில் அவன் இலேசாகச் சிரித்தது, கல்யாணத்துக்குத் தன்னுடைய பூரண சம்மதத்தைத் தெரிவிப்பது போலிருந்தது.

‘கருணை பொழியும் கடலா’கிய அந்த ஜகன்
மாதாவா கருணையின்றி ‘கொடை’ கேட்கிறாள்?
கோழி தன் குஞ்சை எங்ஙனம் தின்ன விழையும்?

# பலியா?

“ஏலே வடிவு, அடுத்த கிழமைக்குப் பொங்கலுக்குப் புறப்பட்டு வரச்சொல்லி உன் மச்சானுக்கு கடுதாசி போடறதுதானே”

“தபால்போட்டு நாலு நாள் ஆகப்போகுது. பொங்கலோடு காளி கோயில் திருவிழாவையும் பார்க்கவேணுமா, அப்பா. அநேகமா இன்னிக்கு நாளைக்கு அவங்க வருற விபரத்துக்குத் தகவல் எழுதுவாங்க”

அவள் குரலில் மிதமிஞ்சிய ஆனந்தம் சுரந்தது. தன் கணவனுக்குக் கடிதம் போட்டு வர வழைப்பதில் தந்தையின் கட்டளைக்கு முந்திக்கொண்டதில் ஏதோ ஓர் வகை வெட்கம் அவளைப் பற்றியது.

அதே சமயம் “அக்கா இந்தாப் பாரு” என்று ஓடிவந்த அவள் தங்கை, தபால் ஒன்றை வடிவழகியிடம் நீட்டினாள்.

“அப்பா, மச்சான் கட்டாயம் வந்திடுமாம். தேரோட்டம் கட்டாயம் பார்க்க வேணுமாம்.”

கணவனைப் பார்க்கும் பூரிப்பில் உருப்பெற்ற கனவு மயக்கம் அவள் வதனத் திரையில் அழகாக வரிக் கோடிட்டது.

“சபாசு வடிவு. ஊம்; அப்படியானா, மாப்பிள்ளைக்கு விருந்து பண்ண இப்பவிருந்தே தயார்ப்படுத்த வேண்டியதுதானாக்கும்.”

வடிவழகி—அவள் கணவன் வீரப்பன் இருவரும் ஜோடிப் புறாக்கள். அவர்களிரண்டு பேர்களும் கைபிடித்த வாழ்க்கைத் துணைவர்களானது இருக்கின்றது பாருங்கள், அது ஒரு அதிசயமான கதை; உண்மை நிகழ்ச்சி!

★

வடிவழகி, வீரப்பனுக்கு வாழ்க்கைப்பட வேண்டியமுறை. அவள் தன் அத்தானின் கரம்பற்றப் பொன்னான சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்தாள். ஆனால் வீரப்பன் அவளைப் பற்றிக் கொஞ்சமும் அக்கரைப்பட்டவனாகத் தெரியவில்லை. அவள் செயலற்றாள். அவள் கவலை, சந்தை சுப்பன் சேர்வையைத் திணறவடித்தது. பருவமடைந்த வடிவை வீரப்பனிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று சேர்வை ஆசை ஆசையாகவிருந்தான்.

வடிவழகே!

பெயரின் எழில் அவள் வடிவத்தில் எதிரொளி வீசிற்று; காட்டில் பூத்த ரோஜா அவள். பருவம் அவள் அழகிற்கு முலாம் பூசியது. போதை நிறைந்த புன்னகையில் மின்னும் காந்தக் கவர்ச்சி அவள் அழகை மிகைப்படுத்தியது.

எல்லாம் பொருந்தியிருந்தும் வீரப்பன், வடிவழகியிடம் இப்படிப் பராமுகமாகத்தான் இருந்தான். வீரப்பனுக்கும் வடிவழகிக்கும் முடிச்சுப் போட்டுவிட வேண்டுமென்ற கவலையில் நாட்களை விரல்விட்டு எண்ணிக் கொண்டிருந்த இரண்டுதரப்புப் பெற்றோர்களும் அப்படியே கதிகலங்கிப் போகும்வண்ணம் வாய்த்தது வீரப்பனுடைய விபரீத முடிவு. அவன் மனமாற்றத்தைக் கேள்விப்பட்ட ஊரார்கள் ஒருகணம் வாயில் விரலை வைத்து ஆச்சரியப்படத்தான் செய்தார்கள்.

தன் மச்சானின் தீர்மானத்தை அறிந்த வடிவு மனமிடிந்தாள்; அழுதாள்; புலம்பினாள். ஆசை அத்தானோடு அழகாக நடக்கப்போகும் இன்ப வாழ்க்கையைப்பற்றி எவ்வளவு எவ்வளவு எண்ணங்கள் எண்ணியிருந்தாள்!

வீரப்பனுக்குத் திடீரென்று வடிவழகியின் பேரில் இவ்விதம் அவளைப் புறக்கணிக்கும் ரீதியில் வெறுப்பு ஏற்படக் காரணம்?

புதிர் ஒன்றுமில்லை.

வடிவழகி எழுத்து வாசனை கிஞ்சித்தேனும் அறியாதவள் என்பது ஒன்றே குறை. அந்த வட்டாரத்திற்குள் நாலுந் தெரிந்தவன் வீரப்பன். உலக சமாச்சாரம், அரசியல் சேதி இப்படிப்பட்ட செய்தி எல்லாம் அவன் சொல்லித் தான் மற்றவர்கட்குப் புரியும். ஆகக்கூடி, ஊரார்களுக்கு வீரப்பனிடம் தனித்த ஈடுபாடும், விசுவாசமும் உண்டானதில் ஆச்சரியம் எதுவுமில்லையல்லவா?

நாள் ஆக ஆக-அதாவது சுயஅறிவு அவன் வாழ்விற்கு ஒளிபரப்பி வழிகாட்டும் நிலையில், தன்னுடைய எதிர்கால இல்லற வாழ்க்கைத்துணை குறித்து வீரப்பன் அடிக்கடி ஆலோசித்துப் பார்க்கலானான். அப்போது தனக்காகப் பரிசம் போட்டிருக்கும் வடிவழகியின் குறைபாடு அவனுக்குப் புலப்பட்டது. வருங்காலம் வனப்புக்கொண்டு விளங்கக் கைதொடும் மனையாட்டி அழகுடன் ஓரளவு கல்வியறிவுள்ளவளாக இருக்கவேண்டும்; அப்படி அமைந்தாலே தன்னுடன் இணைந்து வாழ்க்கை நடத்தமுடியும் என்பது வீரப்பன் லட்சியம். ஆனால் அவனுக்காகக் காத்திருக்கும் வடிவழகி அவன் லட்சியத்துக்கு எங்ஙனம் ஈடுகொடுக்க முடியும்? அவள் எழுத்தறிவற்றவளாயிற்றே!

ஆனால் குற்றம் அவள்மேல்தான்!

"வடிவு, கொஞ்சமானும் படித்துக் கொண்டாத்தான் தேவலாம்" என்பதாகச் சமயம் வாய்க்கும்போதெல்லாம் அவளிடம் நேரில் பலமுறை வீரப்பன் எச்சரித்தும், அவள் அவன் சொற்களைச் செவிமடுக்கவில்லை.

கடைசியில் ஒருநாள் தேவையில் யாருக்கும் தெரியாமல் வீரப்பன் ஊரைவிட்டு மறைந்துவிட்டான். கல்யாணமும் தடைப்பட்டது. வடிவு தீயிலிட்ட மெழுகென

உள்ளம் உருகினாள்; அடித்துவைத்த கற்சிலையாகி விட்டாள்.

“அத்தான் சொன்னது கணக்கா முன்னமேயே படிப்புக் கேட்டிருந்தா எதுக்கு இந்த இடுசாடம் வரப் போவுது. என் கண்ணே என்னை மறைச்சிருச்சே. காளி ஆத்தா நீதான் கருணைகாட்டவேணும்”

அப்பொழுதுதான் அவள் குற்றம் வடிவுக்கு விளங்கியது. அண்டிவந்த புதையலைக் கைநழுவ விட்டதற்குத் தனது அறிவின்மையே காரணம் என்பதை நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை வளர்ந்தது.

“பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மா கிட்டப்போய் தெனமும் படிப்புச் சொல்லிக்கிட்டா என்ன?” என்ற யோசனை வடிவழகியின் மனதில் மின்வெட்டவே, அன்றே வாத்தியாரம்மாவிடம் சென்று வரலாறு பூராவையும் ஒளிவு மறைவின்றிக் கூறினாள் வடிவு.

“வடிவு, இன்று முதல் உன் கண்கலங்க நான் இணங்கேன். வீரப்பனை மணக்கவிருக்கும் நீ கொடுத்து வைத்தவள். எண்ணி ஏழெட்டு மாசத்திற்குள் உன் கைப்படவே அத்தானுக்கு ‘லெட்டர்’ எழுதும் அளவுக்கு நான் கற்றுக் கொடுத்து விடுகிறேன். அதற்கு நானாச்சு” என்றாள் அம்மா.

அவள் தன்மீது இவ்வளவு அன்பு காட்டுவதைக் கண்டு வடிவழகி எவ்வளவோ ஆறுதல் அடைந்தாள்.

“கொண்ட கொள்கைப்படி இனியும் அத்தான் என் சொந்த மச்சான்தானே...” என்று மனதிற்குள் சொல்லிப் பார்த்தபோது பெருமிதமும் பூரிப்பும் அவளுக்கு ஏற்பட்டன. ஆனால் மறைந்துபோன வீரப்பனின் கதி...? அவளுடைய பேதையுள்ளம் குமுறியது.

மாதங்கள் பல கழிந்தன. ஒருநாள் பட்டணத்தில் வீரப்பனைக் கண்ட அவன் சொந்தக்காரன் எப்படியோ பின் தொடர்ந்து, அவன் கணக்கு வேலை பார்க்கும் கடை

விலாசத்தைக் கண்டுகொண்டான். சில நாள் கழித்துத் தன் பேருக்குக் கடிதம் ஒன்று வர முத்திரையை வீரப்பன் பார்த்தான். ஊர் முத்திரை! அவசரமாகத் தபாலை உடைத்தான். வீரப்பனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. வடிவழகி இவ்வளவு அந்தமாகவும், அழகாகவும் தனிப்படக் கடிதம் எழுதித் தனக்குப் போடுவாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்த்தவனல்லவே! தன்னைப் படிக்கத் தெரியாதவள் என்ற ஒரே காரணத்துக்காகப் புறக்கணித்ததால் மனம் நொந்த அவள், வாத்தியாரம்மாவிடம் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்ட விருத்தாந்தம் முழுவதையும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

பாரதியாரின் 'புதுமைப் பெண்' சுவட்டில் அழகு காட்டி நிற்கும் வடிவழகியை இனிக் கைத்தலம்பற்ற வீரப்பனுக்கு என்ன தயக்கம்? தன் முன் வரவேற்புக் கூறி விரிந்து கிடக்கும் எதிர்காலத்தை எண்ணிப் பார்த்தான். வாழ்வின் வழிகாட்டியாக விளங்கிய லட்சியத் தம்பதிகள் பலரின் நிழல் சித்திரங்கள் அவன் நினைவில் அடங்கிச் சென்றன.

ஒருநாள் வீரப்பனும் வடிவழகியும் 'இருமனம் ஒன்று சேர்' தம்பதிகளாயினர்.

அன்று பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மாவைக் கண்டு வரப் புறப்பட்டான் வீரப்பன்.

"அம்மா, உங்கள் உதவிக்கு நான் மிகவும் கடமைப் பட்டவன். நீங்கள் மாத்திரம் அடிக்கடி வடிவைத் தூண்டியிராவிட்டால் இவ்வளவு எளிதில் அவள் படித்துக் கொண்டிருக்கச் சாத்தியப்படுமா?" என்று சொல்லிப் புடவை ஒன்றை அவளிடம் சமர்ப்பித்தான்.

"வீரப்பன், ஆச்சரியமாக இருக்கிறதே! கொஞ்சநேரத்துக்கு முன்தான் உங்கள் வடிவு வந்து புடவை, பழங்கள் எல்லாம் கட்டாயப்படுத்திக் கொடுத்துவிட்டுப் போனாள். கேட்டதற்குக் காரணம் என்ன சொன்னாள் பாருங்களேன்.

குரு தட்சிணையாம்; கல்யாணப் பரிசாம். படிப்புமட்டுமல்ல; அழகாகப் பேசவும் கற்றுக்கொண்டு விட்டாள்."

"அம்மா, உண்மையில் இரண்டு பேருமே உங்களுக்குக் கடப்பாடுடையோம்."

வீரப்பன் பட்டணத்தில் இருந்தவண்ணம், எப்படியும் வடிவழகியைத் தூண்டி அவளுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்துவிடவேண்டும் என்பதாகப் பிரார்த்தித்து, அதே வாத்தியாரம்மாவிற்கு அடிக்கடி தபால் எழுதிய ரகசியம் வடிவிற்கு நாளது தேதிவரை தெரியவே தெரியாதாம்!

★

தமுக்குச் சப்தம் கேட்டது. பொங்கலுக்கு மச்சான் எடுத்துவந்த புடவை காற்றில் சலசலக்க வடிவழகி புது மணப் பெண்போல நின்றிருந்தாள். வாசலில் 'கசமுச' வென்ற பேச்சொலி கேட்டு அவள் மெல்ல அடியெடுத்து வைத்தாள்.

"ஆமா, தம்பீ. காவு கொடுக்கிறார்களாமே, காவு. பாவம், வாய்பேசத் தெரியாத ஆடு கோழிகளைத்தானா காளி ஆத்தா கேட்கிறாள்? எல்லாம் சாமி பேரைச்சொல்லிக் கோயில்காரங்க ஏமாத்தற பொழைப்பு. சாயந்திரம் எப்படியும் பலிகொடுக்கிற வழக்கத்தை நிப்பாட்டணும். இல்லாட்டி என் தலையையே அந்தக் காளிக்கு......"

உணர்ச்சி கொப்பளிக்க வீரப்பன் பேசியதைக் காது கொடுத்துக் கேட்ட வடிவழகிக்கு உடல் வியர்த்துக் கொட்டியது.

அவளுக்குப் பேச்சின் சாராம்சம் புரிந்தது. பலி கொடுக்கும் சம்பவத்தை மாற்றவேண்டும் என்பது அத்தானின் குறிக்கோள் என்பதையும் உணர்ந்தாள். ஆனால் எப்படி இது சாத்தியம்? கோவில் உடமைக்காரர்கள் ஊரில் பெரும் புள்ளிகளாயிற்றே! 'இல்லாட்டி என் தலையையே அந்தக் காளிக்கு...' என்று சபதம் செய்த தன் மச்சானின் பேச்சில் தொனித்த உறுதியை எண்ணிப்பார்த்த

அவளுக்குக் கவலை மிஞ்சியது. பல கோடி நினைவுகள் அவள் பேதை நெஞ்சிலே விசுவரூபமெடுத்தன.

அன்று அந்திசாயும் பொழுது; வடிவழகி கோவிலை நோக்கிப் புறப்பட்டாள். எங்கும் ஜனத்திரள் மண்டியிருந்தது. ஒரு பக்கம் குடைராட்டினம் சுழன்றது. அடுத்துச் சிலம்பு விளையாட்டு. மற்றொரு பக்கத்தில் 'சீரங்கம் தெரியுது பார்; சென்னைப்பட்டணம் தெரியுது பார்!' என்று பாடிப் படம் காண்பிக்கப்பட்டது. ஒரு பக்கம் பட்டிக் காட்டுப் பாவையரின் கும்மிச் சத்தம் காதைத் துளைத்தது.

ஆச்சு!

அற்புத சோடனை செய்திருந்த தேர் ஊர்வலம் புறப்பட ஆயத்தமாக நின்றது. மறுவினாடி வடிவழகியின் பார்வை திசை திரும்பியது; திடுக்கிட்டாள், தூண்டில் போடப்பட்ட மீன் குஞ்சுபோல. ஏராளமான ஆடுகளும் கோழிகளும் அம்மனுக்குக் 'காவு' கொடுக்க நிறுத்தப்பட்டிருந்தன. தலை முழுதும் மஞ்சள் பூசியிருந்தது. கழுத்தில் பூமாலை. பூசாரி சாம்பான் கையில் தீட்டிய அரிவாளுடன் உச்சாடனம் பெற்றவனைப்போல உறுமினான்; பயங்கரமாக விழித்தான். என்ன சொன்னேன்? உச்சாடனமா? ஹஹ்ஹா! சுத்த ஹம்பக்! பாவம், கள் இல்லாததால் முன் சுரத்து அவனிடமில்லை.

வடிவழகி திகைத்து விட்டாள். அந்தோ, சாவின் சந்நிதியில் நின்ற அத்தனை வாய் பேசமாட்டாத உயிர்களையும் ஒருவிசை ஏறிட்டு நோக்கினாள். 'கருணை பொழியும் கடலாகிய' அந்த ஜகன்மாதாவா, கருணையின்றிக் 'கொடை' கேட்கிறாள்? கோழி தன் குஞ்சை எங்ஙனம் தின்ன விழையும்?

"தன்முன் எமன் வடிவில் நின்றுகொண்டிருக்கும் பூசாரியை ஏமாற்றி எப்படியாகிலும் அவ்வளவு உயிர்களையும் காப்பாற்றி விட்டால்... ஆகா!" அவள் ஆவல் அது. ஆனால் முடியுமா?

எதிரே திரும்பினாள். வீரப்பனைச் சுற்றி நாலைந்து தொண்டர்கள் பலி செய்யும் கொடுமையை விவரித்தனர். புத்தர், சமணமுனி, காந்தி மகாத்மா போன்ற பெரியோர்களின் பொன்மொழிகளை அவர்கள் கூறக்கேட்ட வடிவழகியின்—சூழவிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொருவரின் கண்கள் நீரில் நீந்தின.

பறையொலி வானளாவியது. கொம்பு முழங்கியது. கோவில் அடிமைக்காரர்கள் அம்மனுக்கு என ஒவ்வொரு ஆண்டு கொடுக்கும் பலியை நிறுத்த ஒப்பவில்லை. வீரப்பன் தனித்து எவ்வளவோ மன்றாடினான்; பயனில்லை.

பூசாரி முதல் ஆட்டின் தலைக்கு நேராகப் பளபள வென மின்னிய வாளை ஏந்தப் போனான். அந்தப் பொறி தட்டும் நேரத்தில் வீரப்பன் ஓடிப்போய் நின்றான் வாள் பிடித்து நின்ற பூசாரியின் முன். அவ்வளவுதான். வடிவழகிக்கு உயிர் தத்தளித்தது; அவளும் ஓரே பாய்ச்சலில் பாய்ந்து 'அத்தான்' என்று அலறிவிட்டாள்.

"அத்தான், நம்ம ரெண்டு பேருமே காளிக்குப் பலியாகிப் போயிடுவோம். அப்புறம் அந்த வாய் பேசாத பிராணிகளாச்சும் உயிர் தப்பட்டும்—" என்றாள் வடிவழகி.

கூட்டத்திடையே மயான அமைதி நிலவிற்று. கோவில் காரர்கள் சிலையாகி நின்றார்கள்.

அதே சமயம் தேரின் முன்பாக வந்து நின்ற 'ஜீப்'பிலிருந்து போலீஸ்காரர்கள் இறங்கினார்கள். அப்போது தான் வீரப்பனுக்கு மலர்ச்சி சேகை விட்டது. வடிவழகி அதிசயித்தாள்.

"தெய்வங்கள் பெயரால் செய்யப்படும் அநீதிகளில் பலி மிகவும் கண்டனத்துக்குரியது. எந்தத் தெய்வமும் இம்மாதிரி ரத்தபலியை விரும்புவதுமில்லை; ஏற்கவும் ஏற்காது. தங்கள் தங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறிவிட்டால் உடனே கொடை கொடுப்பதாக வேண்டுகிறார்கள் குருட்டு நம்பிக்கை கொண்டு. ஆனால் இந்த உயிர்கள்

கொட்டும் இரத்தக் கண்ணீரை அவர்களெல்லாம் அறிய வில்லை. அண்மையில் 'பலித்தடை மசோதா' நம் சர்க்காரில் சட்டமாயிருக்கிறது. இது சர்க்கார் உத்தரவு; பலியின்றித் தான் உங்கள் விழாவைக் கொண்டாட வேண்டும்........" என்றான் ஒரு போலீஸ்காரன்.

கூடியிருந்தவர்கள் மெய்சிலிர்த்தனர்.

அப்புறம் கேட்பானேன்? பலி இல்லாமலே தேரோட்டத் திருநாள் சுபமாக முடிந்தது. அவ்வளவு உயிர்களும் பிழைத்து மறுவாழ்வு பெற்ற விந்தையை வியந் தாள் வடிவு. பலியை நிறுத்த வேண்டி முன்னமேயே அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்ததும் வீரப்பனின் தலைமையில்தான் என்பது யாருக்குத் தெரியும்!

"கண்ணம்மா—ஆம்; பேசும் பொற்சித்திரமே தான்! அன்று அமரகவியின் கனவில் தோன்றி மனதைப் பித்தாக்கினாள் அந்தக் கண்ணம்மா. ஆனால் தற்சமயம் என் இழந்த இன்பத்திற்கு நிரவல் கொடுத்து, வாழ்விலே அமுதகீதத்தைப் பொழிகின்றாள் இந்தக் கண்ணம்மா!"

# பிள்ளைக் கனியமுது

"பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே!
அள்ளி யணைத்திடவே—என்முன்னே
ஆடிவருந் தேனே!"

ரேடியோவினின்றும் எழுந்து காற்றில் மிதந்துவந்த இனிய கானம் டாக்டர் சுந்தரத்தின் மனத்தில் இன்பவலை பின்னியது.

"கண்ணம்மா—ஆம்; பேசும் பொற்சித்திரமேதான்! அன்று அமரகவியின் கனவில் தோன்றி மனத்தைப் பித்தாக்கினாள் அந்தக் கண்ணம்மா. ஆனால் தற்சமயம் இழந்த இன்பத்திற்கு நிரவல் கொடுத்து வாழ்விலே அமுத கீதத்தைப் பொழிகின்றாள் இந்தக் கண்ணம்மா."

டாக்டரின் மனம் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. அவர் பார்வை எதிரே சென்றது. 'கண்ணம்மா' என்று அழைத்துக்கொண்டே எழுந்து நின்றார். தந்தையின் மனநிலையை அறிந்துகொண்டது போலக் கண்ணம்மா தன் சின்னஞ்சிறு வாயைத் திறந்து நயனங்களை உருட்டி விழித்தாள். அத்தருணம் டாக்டரின் தங்கை லலிதா குழந்தைக்கு அன்னம் பிசைந்து ஊட்டிக்கொண்டிருந்தாள்.

"அண்ணா, கண்ணம்மா வரவர அதிக சேஷ்டை பண்ண ஆரம்பிக்கிறாள். இந்த மாதிரி சிரித்துக்கொண்டு

விளையாடும் சமயம் பார்த்துச் சாதம் ஊட்டினால்தான் கொஞ்சமேனும் சாப்பிடுகிறாள். மற்ற சமயங்களில் ஒரு பிடி அன்னம்கூடச் சாப்பிடமாட்டேன் என்கிறாள். தப்பித் தவறி அண்ணியின் போட்டோப் படத்தண்டை எடுத்துச் சென்றுவிட்டால் படத்தைப் பார்த்து விரலைக் காட்டி 'அம்மா' எனக் கதற ஆரம்பிக்கிறாள்!"

"பாவம், தாயில்லாக் குழந்தை. இந்த ஒரு வருஷம் பட்டதெல்லாம் கஷ்டமில்லை. ஆனால் இனித்தான் நமக்கெல்லாம் சிரமம் காத்திருக்கிறது. இனிமேல்தான் தவழும் பருவம்; அப்போது பேணிக் காப்பதுதான் ரொம்பவும் சங்கடம். நீயும்கூட இன்னும் சில நாளில் சென்னை போய்விடுவாய். என்னமோ ஈசன் விட்டவழி."

இவ்விதம் பேசிக்கொண்டிருந்த டாக்டர், தன் தங்கை லலிதாவின் முகத்தை நோக்கினார். அவள் முகத்தில் சஞ்சல ரேகைகள் தடம் பதிந்திருப்பதைக் கண்டதும் அவர் கண்கள் கலங்கின.

"லலிதா, குழந்தை தூங்கி விழுகிறது. கொண்டு போய்ப் படுக்க வை" என்று சொல்லித் திரும்பவும் தன் அறைக்குச் சென்றார் சுந்தரம். அவரது கண்ணோட்டம் மேஜைமீது ஸ்டாண்டில் வைத்திருந்த புகைப்படத்தின் மீது லயித்தது. காஞ்சனா உயிருடனிருந்தபொழுது எடுத்த போட்டோ அது. அவளுடைய மென்மலர் வதனத்தில் அன்புக்குழி மிளிரப் புன்முறுவல் பூத்தவண்ணம் சல்லாப மொழி பல பேசித் தன்னை ஊக்குவித்து வருவது போன்ற ஒரு பிரமை தட்டியது அவருக்கு.

டாக்டரின் மனம் கடந்ததை நினைத்து வருந்த, எண்ணங்கள் அலையலையாய் மிதந்து கண்வழியே நீர் முத்துக்களைச் சிதறின.

★

கல்யாணத்திற்குப் பெண் பார்க்கச் செல்லும் படலத்தின் முதல் அத்தியாய ஆரம்ப தினம்!

காஞ்சனாவின் வீட்டில் மலர் மணம் எங்கும் பரவி யிருந்தது. குழல் ஊதி லீலைகள் செய்த மாயக்கண்ணனின் படம் ஒருபுறம்; மற்றொரு பக்கம் கால்மாறி நடம் புரிந்த நடராஜமூர்த்தியின் திருவுருவம்! இரண்டிற்கும் நடுவில் அஹிம்சையின் திருஉரு—தியாகத்தின் சின்னம்—அமரவாழ்வெய்திய அண்ணல் காந்தி மகாத்மாவின் மோகன பிம்பம் தீபஒளியாகப் பரிணமித்தது.

அறையின் மத்தியில் வீற்றிருந்த சுந்தரத்தின் கவனம் நாற்புறமும் சுழன்றோடி நிலைத்தது.

சகலகலாவல்லி போலக் காட்சியளித்தாள் காஞ்சனா, கையில் வீணையுடன். வீணையின் நரம்புகளை மெதுவாக மீட்டி ஜீவநாதத்தைத் தட்டி எழுப்பினாள். அவளது வீணாகானத்தில் லயித்த அவர், அவளை நிமிர்ந்து நோக்கின சமயம், ஒருகணம் அவர் மனம் சஞ்சலித்துவிட்டது.

நாணிக் கண்புதைத்த வண்ணம் எழுந்து சென்றாள் பூத்துக் குலுங்கும் கொடி போன்ற அக்கட்டழகி. ஒய்யாரமான அவள் உருவத்தின் ஒவ்வொரு அங்க அமைப்பிலும் இளமை கொந்தளித்தது.

அவளது முகச் சாயலிலே ஒருவிதக் கவர்ச்சி; அந்த வசிகரத்தில் ஒரு குளுமை! பிடியிலடங்கும் இடை; கொடிமாதிரித் துவளும் மெல்லுடல். மெல்லிய கீற்றுப் போன்ற இதழ்களிலே முறுவல் ஊறும்போதெல்லாம் குழி விழும் ரோஜா நிறக் கன்னங்கள். நீண்ட புருவத்தின் கீழ் இருட் கனலெனத் திகழும் விழிகள்!

அந்த அழகியின் வனப்பில் சுந்தரம் மயங்கியதில் ஆச்சரியமென்ன?

முகூர்த்தம் நிச்சயமாகித் திருமணமும் நடந்தேறியது.

சாயந்தரம் ஆனவுடன் 'காஞ்சனா' என்று தேன் குரலில் அழைத்துக்கொண்டே உள்ளே நுழையும் சமயம் அவளும் தன் பதியின் வரவை எதிர்பார்த்து நின்று கொண்டிருப்பாள், வசந்தத்தின் வரவை எதிர்கொண் டழைக்கும் வானம்பாடியைப் போல. சுந்தரத்தின்

இதயம் அப்படியே ஆனந்தப் பூரிப்பிலே ஒருமுறை சிலிர்த்து அடங்கிவிடும். இம்மாதிரி இனிய சந்தர்ப்பங்கள் எத்தனை எத்தனையோ!

ஒருநாள் என்றுமிலாதபடி டாக்டரின் மனத்தில் ஒருவித ஏக்கமும் வருத்தமும் குடிபுகுந்திருந்தன. காரணம், காஞ்சனாவிற்கு பிரசவ தினம் நெருங்க நெருங்க அவள் உடல் தளர்ந்துவிட்டது.

அன்று பிரசவ நாள். சுயஉணர்வு தப்பிவிட்டது காஞ்சனாவிற்கு. பிரசவம் சுகமாகத்தான் ஏற்பட்டது. ஆனால் டாக்டரை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாள் அந்தக் காஞ்சனா!

தன் வாழ்வு அஸ்தமித்துவிட்டதென எண்ணிப் பொருமினார். ஆனால் அவ்விதம் நினைவு வரும் சமய மெல்லாம் அவருக்கு ஆறுதல் அளித்து வந்தது அவரது கண்ணம்மாதான்!

★

டாக்டர் சுந்தரத்திற்கு வேண்டிய உற்றார் உறவினர்கள் அவரை 'இரண்டாம் கல்யாணம்' செய்துகொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அவர்களது வார்த்தைகளுக்கெல்லாம் சிறிதும் மசியவில்லை டாக்டர். அதேசமயம், பச்சைக் குழந்தையின் பராமரிப்பிற்குப் பெண் உதவி மிகவும் அத்தியாவசியம் என்பதைத் தீர உணராமலுமில்லை.

"காஞ்சனா போல இனிமேல் இந்த ஜன்மத்திலா ஒரு மனைவி எனக்கு வாய்க்கப்போகிறாள்?" இந்த ஒரு கேள்வியைத்தான் தன்னை நாடிவரும் பந்துக்களிடம் பிரயோகித்து வந்தார். காஞ்சனாவுடன் கழிந்துபோன இன்பமயமான அந்நாட்களைத் திரும்பவும் எண்ணிப் பார்க்கும்போதெல்லாம் மறுமணத்தைப்பற்றிய நினைவே அவரது மனதில் தலை காட்டாமலிருந்தது!

இப்படியே நாட்கள் நகர்ந்தன.

அன்று நடுநிசி. குழந்தையைப் படுக்க வைத்துவிட்டுச் சிறிதுநேரம் புத்தகம் படிப்பதில் மூழ்ந்திருந்தார் சுந்தரம்.

"டாக்டர் ஐயா!"

அந்த அறிமுகமற்ற குரலில் வருத்தத்தின் சாயல் தெரிந்தது.

வெளியே சென்று பார்த்தார். பெரியவர் ஒருவர் படபடக்க ஓடிவந்த களைப்புடன் செய்தியைச் சொன்னார்.

டாக்டர் சுந்தரம் உடனே ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினார். ஓர் பெண் கட்டிலில் உணர்வு தப்பிப் படுத்திருந்தாள். 'ஸ்டெத்தாஸ்கோப்' கொண்டு பரிசோதிக்கக் குனிந்தார். அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டார் டாக்டர். ஏனென்றால் அந்தப் பெண், காஞ்சனாவை அப்படியே உருக்கிவைத்தாற் போலக் காணப்பட்டாள்!

அவ்வுருவத்தைக் கண்டதுமுதல் அர்த்தமற்ற ஒருவித அனுதாபம், வாத்சல்யம் ஏதோ அவரையும் அறியாமல் கிளர்ந்தெழுந்தன!

நான்கு நாள் கழித்து அந்த யுவதி ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்ட சமயம் கண்கள் கலங்க அவளை வழியனுப்பி வைத்தார் அவர்.

★

"லலிதா, என்னை உடனே புறப்பட்டு வரும்படி அத்தை இன்று தந்தி கொடுத்திருக்கிறார். கண்ணம்மாவை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்" என்று தன் சகோதரியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் டாக்டர் சுந்தரம்.

அத்தை வீட்டையடைந்ததும் வரவேற்பு உபசாரம் பலமாக நடந்து முடிந்தது.

"அத்தை, ஒன்றும் விசேஷம் கிடையாதே. தந்தியைக் கண்டதும் என்னவோ ஏதோ என்று பயந்து போய் விட்டேன்."

"சுந்தரம், தந்தி கொடுத்திராவிட்டால் இவ்வளவு எளிதில் உன்னை இங்கே வரவழைத்திருக்க முடியுமா? காஞ்சனா இறந்ததற்கப்புறம்தான் நீ இங்கு வரவில்லையே.

எத்தனை நாளைக்குத்தான் இப்படிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருக்கப் போவதாக உத்தேசம், கையில் ஒரு பச்சைக்குழந்தையை வைத்துக்கொண்டு? பெரிய பிள்ளைக்கு அதிகமாக நான் எதைச் சொல்ல இருக்கிறது?"

"அத்தை, நான் என்ன யோசிக்க இருக்கிறது? காஞ்சனா மாதிரி இனிமேல் இந்தப் பிறவியிலா எனக்கு ஒரு பெண் மனைவியாக வாய்க்கப் போகிறாள்? ஊஹூம். ஒருக்காலும் இருக்காது. ஏதோ விட்டகுறை, தொட்ட குறை என்பார்களே, அந்தமாதிரிதான் எங்கள் திருமணம் முன்னர் நடந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால்..."

டாக்டரின் பேச்சிற்குச் சோகம் சுருதி கூட்டிற்று.

"சுந்தரம், தேரடித்தெரு சோமுபிள்ளையின் சொந்தக் காரப் பெண்ணும், பர்மாவிலிருந்து வந்திருக்கிறாள். முதன் முதலில் அவளைக் கண்டதும் அப்படியே திகைத்துவிட்டேன். அப்படியே உன் பெண்டாட்டி போல ஒரே அச்சு. நல்ல பதவிசு. நீ 'ஊம்' என்றால் போதும். காரியம் முடிந்தமாதிரிதான். மேலும், கைக்குழந்தைக்கு நல்ல ஆதரவாயிற்று. அதன் நன்மையை உத்தேசித்தாகிலும் சம்மதம் கொடு, அப்பா."

இவ்விதம் முகாந்தரங்கள் பலவற்றை எடுத்துக்காட்டி, அதற்கு அத்தாட்சிபோல அப்பெண் போட்டோவையும் அவரிடம் நீட்டினாள்.

படத்தைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டார் டாக்டர். ஏனென்றால், அதே பெண்தான் சில தினங் களுக்கு முன்பு அவரிடம் வைத்தியம் செய்துகொண்ட யுவதி. தன்னையும் அறியாமல் அந்தப் பெண்மீது உண் டான அன்பின் காரணம் இப்பொழுதுதான் அவருக்குப் புலப்பட்டது.

"அத்தை, இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமா என்று கேட்டீர்களா பெண்ணிடம்?"

"எல்லாம் கேட்டாய்விட்டது. இதன்மூலம் ஏழைக் குடும்பத்திற்கும் ரொம்பவும் ஒத்தாசை செய்ததுபோல் இருக்கும்."

"புதியவள் வந்துவிட்டால் அப்புறம் கண்ணம்மாவை நன்ருகப் பேணி வளர்ப்பாள்."—இந்த ஒரே ஆசையுடன் மனத்தைச் சாந்தியுறச் செய்துகொண்டு அவர் தன் அத்தையிடம் விடைபெற்று வீடு வந்தடைந்ததும், அவரது நெஞ்சம் பிளந்துவிடும் போலாய்விட்டது. எங்கும் ஒரே அந்தகாரம்; மோன அமைதி! திடீரென்று அலறல் சப்தம் கேட்கத் திரும்பினர் டாக்டர்.

"அண்ணு, கண்ணம்மா போய்விட்டாள் அண்ணு. இன்று காலையில் குளித்துவிட்டுத் திரும்பும் சமயம் குழந்தை தண்ணீர்த் தொட்டியில் தவறிவிழுந்து இறந்து கிடந்தது, அண்ணு" என்று நினைவிழந்து, நெஞ்சம் விம்மத் தேம்பித் தேம்பி அழுதாள் லலிதா.

தன் குழந்தையை நீர் மல்கும் கண்களுடன் ஏறிட்டு நோக்கினர். கண்ணம்மா ஆனந்தப்பள்ளி கொண்டிருந்தாள். டாக்டர் அழுதார்; புரண்டார். பைத்தியம் பிடித்து விடாதது ஒன்றுதான் பாக்கி. தன் அருமைக் கண்மணிக்காக வாங்கிவந்த பிஸ்கட்டுகள், விளையாட்டுச் சாமான்கள் இவையனைத்தும் சிதறிக்கிடந்தன, அவரது மனம்போல.

என்னதான் வாழ்க்கை வேண்டிக் கிடக்கின்றது? அவரது வாழ்விலே சாந்தி, இன்பம் என்பனவெல்லாம் தாமரை இலையில் ஒளிரும் நீர்த்திவலைகள் தாமா? ஆமாம்; மனிதன் வகுக்கும் திட்டங்களை—கட்டும் மனமாளிகைகளைத் தகர்த்தெறியத்தான் 'விதி' குறுக்கிட்டுவிடுகிறதே! விதி! நல்ல விதி!

அதே தினம் டாக்டரிடமிருந்து அவர் அத்தைக்கு 'ரிஜிஸ்தர்' தபால் ஒன்று பறந்து சென்றது.

அத்தை,

இத்தனை காலம் எந்த ஒரே லட்சியத்திற்காக எனது உயிர் காஞ்சனு இறந்ததையும் பொருட்படுத்தாமல் என் உடலில் தங்கியிருந்ததோ, எந்த ஒரே குறிக்கோளைக் காப்பாற்ற உங்களது பிடிவாதத்தின் துணைகொண்டு மறுமணம் புரிந்து கொள்ளச் சம்மதித்தேனே அந்த லட்சியம் சிதைந்துவிட்டது! என் கண்மணி

கண்ணம்மா இன்று இறந்துவிட்டாள்! என் கண்ணைச்-சீராட்டிப் பேணிப் போஷிக்கத்தானே மறுகல்யாணம் செய்துகொள்ள இருந்தேன். இனி எதற்கு இந்தக் 'கட்டை'க்குக் கல்யாணம்?

பெண்வீட்டில் விஷயத்தைத் தெரியப்படுத்துங்கள். பாவம், ரொம்பவும் ஏழைக்குடும்பம். பெண் தங்கமான குணம். சேற்றில் முளைத்த செந்தாமரை! இத்துடன் அனுப்பியிருக்கும் ரூ. 500 செக்கை மாற்றி, நல்ல மாப்பிள்ளையாகத் தேடித் தாங்களே நேரில் இருந்து அப் பெண்ணுக்குக் கல்யாணத்திற்கு ஆயத்தம் செய்யுங்கள்! இதுவேதான் என கடைசி வேண்டுகோள்!

சுந்தரம்.

உலகம், புரியாத புதிர். அதனூடே நிழலாடும் உண்மை, புரிந்த புதிர். ஆனால் உலகமும் உண்மையும் பிரதிபலிக்கும் 'முடிவு' சிந்தை பிழியச் செய்யும் விந்தை மிகுந்ததாக அமைந்துவிடுகிறது. அப்படியென்றால் அந்த முடிவின் முடிவு, புதிரின் புதிர்தானோ? ..........

தங்கவேல் பொன்னுருவியின் கழுத்தைப் பார்த்தான். மங்கலச் சின்னம் பரிணமிக்க வேண்டிய கழுத்து சூன்யமாகத் தோற்றமளித்தது.

# தாலி பாக்கியம்

கொத்து வேலை முடிந்து வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தான் தங்கவேல். முகத்திரையில் நாள் முழுதும் வேலைசெய்த களைப்பின் அயர்வு; நெற்றியில் முத்து முத்தாக அரும்பிக் காய்ந்துபோன வியர்வைத் துளிகளின் உவர்க்கோடு; உள்ளத்திலே ஆசை வள்ளியைக் காணப் போகும் புளகிதம்.

சந்தின் திருப்பத்தில் தன்னை எதிர்கொண்டழைப்பவள் போலச் சடக்கென்று முன்வந்து நின்ற பொன்னுருவியைக் கண்ட தங்கவேல், சிலகணம் திகைப் பூண்டை மிதித்தவன் போலச் சித்தம் தடுமாறிப் போனான். அப்போது உண்டான அதிர்ச்சி நீங்கப்பெறச் சற்று நேரமாயிற்று. எதிரும் புதிருமாக நின்று கொண்டிருக்கும் பொன்னுருவியை "வா!" என்று கூட அழைக்கவில்லையே என்று அப்போதுதான் நினைத்துக் கொண்டான் அவன்.

"பொன்னுருவி! பொழுது சாயப்போவுதே; எங்கே இந்த நேரத்திலே புறப்பிட்டுட்டே?"

இப்படி நேருக்கு நேராக நின்று அவளுடன் பேசிக் கச்சிதமாக வருஷம் இரண்டு ஆகப்போகிறதே! அந்த நாட்

களில் இருவரும் சந்தித்துப் பேசும் சமயங்களில் ஏற்பட்ட லளிதமும் வேடிக்கையும் தற்சமயம் அவன் பேச்சில் தலை காட்டவில்லை. ஏதாவது பேசியாக வேண்டுமே என்ற நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டவனைப்போல ஏதோ கேள்வி யொன்றைக் கேட்டு வைத்தான். ஆனால் அவன் இதய அந்தரங்கத்தில் புதைந்து கிடந்த துயரம் மீண்டும் புத்துயிர் பெறும்படி தான் செய்துவிட்டதைப் பொன்னுருவி அறி வாளா? அறிந்துதான் அவளால் என்ன ஆகப்போகிறது?

பரிதாபமாகத் தன்னைப் பார்த்து நின்ற பொன் னுருவியை நிமிர்ந்து நோக்கினான். வசந்த மல்லிகையைப் போல, சுண்டிவிட்டால் ரத்தம் தெறிக்கும்படியான பூரண யௌவனப் பொலிவுடன் இருந்த பொன்னுருவியா இப்படி எலும்பும் தோலுமாக உருமாறிப் போய்விட்டாள்? அவள் முகத்தில் சஞ்சலம் பிரதிபலித்தது. ஆச்சரியப்பட்ட அவன் அனுதாபப்பட்டான். தங்கவேலின் மனம் தறி கெட்டுச் சுழல ஆரம்பித்தது.

பொன்னுருவி! ஆம்; அவள் அவனுடைய முறைப் பெண். அன்று மட்டும் அவள் அப்பா அப்படி விடாக் கண்டனாகத் தங்கவேலின் குடும்பத்தாரோடு குஸ்திக்குக் கிளம்பியிராமல் இருந்திருந்தால், கட்டாயம் அவள் அவனது 'ஆசைக் கண்ணாட்டி'யாகவேதான் ஆகியிருப் பாள். ஆனால் அவர்கள் இரண்டு பேருடைய துரதிர்ஷ்டம் அந்தப் பந்தம் அறுந்துவிட்டது. நல்லது, கெட்டது எந்தக் காரியத்துக்கும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வதில்லை. ஒட்டுறவு துண்டிக்கப்பட்டது.

"அத்தான்!"

"பொன்னுருவி!"

"உங்களைக் காணத்தான் வீடு வரைக்கும் போயிட்டு வாரேன்."

"என்ன சேதி?"

'அத்தான், என் கைக்குழந்தைக்குக் கபவாத ஜுரம். நாலஞ்சு நாளாக் காய்ச்சல். வைத்தியத்துக்கு

முன் அச்சாரமா ஏதாச்சும் கொஞ்சம் பணம் கொடுத்தாத் தான் மருந்து கொடுக்க முடியுமாம். அதுக்குத்தான் உங்க கிட்டேக் கொஞ்சம் பணம் வாங்கிட்டு போவலாமின்னு வந்தேன். என் வீட்டுக்காரர் இருக்கிறப்ப எதுக்கு இப்படி வந்து பணம் கேட்கணுமின்னுதானே திகைச்சுப் போயிட்டிங்க? உங்களுக்கு அவரைப்பத்தி ஏதும் தெரியாதா? அவர் மனைமிதிச்சு என்னோடே பேசி, மகளை எடுக்கி, மாசம் ஒண்ணுக்கு மேலே ஆகுது. பொழுது விடிஞ்சு பொழுது போனா எந்த நேரமும் அவருக்குச் சீட்டாட்டம்தான் பொழப்பு. குளத்தங்கரைச் சாயாக் கடைதான் அவருக்கு அடைக்கலம். காலம்பற வீட்டுக்கு வந்தப்பப் பிள்ளைக்கு முடியலைன்னு சொன்னேன். அவர் எம்மேலே எரிஞ்சு விழுந்து அஞ்சு ரூவா அவசரமா வேணுமின்னு கேட்டாரு. அந்தப் பணத்தைக் கொண்டாச்சும் ஏதாச்சும் வைத்தியம் செய்யலாமின்னு நினைச்சிருந்த என் எண்ணத்திலே மண்ணை வாரிப் போட்டுட்டாரு. பணத்தைக் கைப்பத்தியதுமே மறு பேச்சாடாமல் கிளம்பிட்டாரு. இப்படித்தான் ஒவ்வொரு சமயமும் உயிரைக் கையிலே பிடிச்சுட்டு அவர்கிட்டே நடக்க வேண்டியிருக்குது. குடிகாரன் கணக்காப் பசிச்சப்போ வராரு; சாப்பிட்டுட்டுப் போயிடுறாரு. மேலுக்கு முடியாமக் கிடக்கிற பெத்த மகளைப்பத்திக் கூடக் கவலை கிடையாது பாவி மனுசனுக்கு. அத்தான், உங்க குழந்தை யின்னு நினைத்து மனசு இரங்கி ஒரு அஞ்சு ரூவா காசு கொடுத்திங்கன்னா கோடிப் புண்ணியமுண்டுங்க.''

விம்மிப் பெருமூச்செறியச் சொல்லி நிறுத்திய பொன்னுருவி வாய்விட்டு அழுதாள். தங்கவேலிற்கும் கண்களில் கண்ணீர் கொட்டியது. கண்ணுக்குக் கண்ணான தன் மகளின் காய்ச்சலைப் பற்றிக்கூடக் கவலையின்றிச் சீட்டாடிய வண்ணமிருக்கும் அவள் கணவன் காசிலிங்கத்தின் பேரில் அவனுக்குக் கரைகடந்த ஆத்திரம் பொங்கிஎழுந்தது. அத்துடன் எப்படியாவது அவனை நல்வழிப்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணமும் உதித்தது.

பொன்னுருவிக்குக் கொடுக்கப் பணத்திற்கு எப்படி 'மால்' பண்ணுவது என்று யோசிக்கையில், சில நாள் முந்தித் தன் மனைவிக்குச் சேலை வாங்க ஐந்து ரூபாய் பணம் கொடுத்து வைத்தது ஞாபகம் வந்தது.

"பொன்னுருவி! கருக்கல்லே பணத்தைக் கொண்டாந்து தந்து வைத்தியர் கிட்டேயும் சொல்றேன். மனசு கலங்காதே! உன் புருசனும் சீட்டாட்டத்துக்குத் தலை முழுக்குப் போட்டு, நல்லபடியா குணம் திருந்திடுவான், ஆயி கிருபையாலே. கவலைப்படாதே! ராவிலே புள்ளேயைக் கவனமாப் பாத்துக்கோ!" என்றான் தங்கவேல்.

"அத்தான், மகமாயி புண்ணியத்திலே உங்களுக்கு ஒரு குறைவும் வராது. உங்களைத்தான் அண்ணைக்கும் நம்பினேன்; இப்பவும் நம்பியிருக்கேன். படபடக்கும் மனசிலே பால் வார்க்கச் செஞ்சிடுங்க. புள்ளே தனியாக் கிடக்கும்...நான் வரட்டுமா அத்தான்?" என்று விடை பெற்றுச் சென்றாள் பொன்னுருவி. பித்துப் பிடித்தவன் மாதிரி அவள் போன வழிமீது விழி பதித்து நின்று கொண்டிருந்தான் தங்கவேல்.

★

பொன்னுருவியின் வீட்டுக்குப் புறப்பட யத்தனப்பட்டுக் கொண்டிருந்தான் தங்கவேல். உறவு என்ற ஓர்மையில் ஓரளவு பாத்தியதை கொண்ட பொன்னுருவிக்குத் தான் செய்யவிருக்கும் உதவியை நினைத்து அவன் பூரித்துப் போனான்.

"வள்ளி!" என்று அழைத்த தங்கவேல், இரவு செய்துகொண்ட தீர்மானப்பிரகாரம் வள்ளியிடம் சேலைக்குக் கொடுத்த பணத்தைத் திருப்பிப் பெற எண்ணினான். மறுமுறையும் மனைவியை அழைத்துப் பார்த்தான். அவளைக் காணோம்.

அவசரமாக வெளியே வந்து பார்த்தான். அப்போது தான் காசிலிங்கம்—பொன்னுருவியின் புருஷன், விர்சென்று விரைந்து சென்றது தெரிந்தது. அவன் வள்ளியிடம்

வந்துவிட்டுத்தான் போயிருக்கவேண்டும் என்று ஊகித்தவனாய், "வள்ளி, அன்னிக்கு உனக்குப் புடவைக்காகக் கொடுத்த அஞ்சு ரூபாயைக் கொடு. ஒரு அவசர ஜோலிக்கு வேணும். வார சனிக்கிழமை சந்தையிலே உனக்குச் சேலை வாங்கிக் கொடுத்துடறேன்" என்றான் தங்கவேல்.

வள்ளி விழித்தாள்.

"என்ன வள்ளி வாய் அடைச்சுப் போய் நிக்கறே?"

"வந்து... அந்தப் பணம் ரெண்டு நாளைக்கு முன்னே காணாமப் போயிருச்சு—நீங்க..." என்று காகாத்த குரலில் மென்று விழுங்கினாள் வள்ளி.

சற்றுமுன் தன் கண்முன் கண்ட காட்சி அவன் எரிச்சலுக்கும் ஆத்திரத்துக்கும் தூபமிட்டது. "அந்தச் சூதாடிப் பயலோடே இவளுக்கு என்ன பேச்சு?" என்று மனதிற்குள் பொருமினான் தங்கவேல். அத்துடன் கோபம் தலைக்கேறியது. ருத்திரமூர்த்தியானான்.

"பொய்யா சொல்றே பொய்? என்னை என்ன மூடன்னு மனசிலே நெனைச்சிப்பிட்டே?" என்று வள்ளியின் கன்னத்தில் 'பளீர்' என்று அறைந்தான்.

கன்னத்தைத் தடவியவளாய் விம்மினாள் வள்ளி.

"என்னை மன்னிச்சிப்பிடுங்க. காசிலிங்கம் அத்தான் வந்து தன் மகளுக்கு உடம்புக்கு ஆகலைன்னு வைத்தியத்துக்கு அஞ்சு ரூவா கேட்டுச்சு. எங்களுக்கு அந்தக் காலத்திலே எவ்வளவோ ஒத்தாசை பண்ணியிருந்த அத்தான் இப்படிக் கெஞ்சிக் கேட்கிறப்ப 'இல்லை'ன்னு சொல்ல எப்படி மனசு வரும்? எனக்குப் புடவைக்குத் தந்த பணத்தை அப்படியே கொடுத்துட்டேன்..." என்று கூறினாள் வள்ளி.

வாழ்க்கை விசித்திரம் அவனை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. தான் செய்த தவறை உணர்ந்தவன்போலத் தன் மனைவியை நோக்கினான். தன் மாமன் மகளுக்கு எப்படித் தான் பணம் கொடுத்து உதவ விரும்பினானோ, அதேபோல் அவளும் தன் அத்தானுக்குச் சமயத்தில்

பணம் கொடுத்து ஒத்தாசை செய்ததில் என்ன தவறு இருக்க முடியும்?

"வள்ளி, கோவப்படாதே! நான்கூட உன்கிட்டே பணத்தைக் கேட்டது பொன்னுருவி மகள் வைத்தியத்துக்காகத்தான். முன்னாடியே உள்ளதைச் சொல்லியிருக்கப்படாதா? காசி உனக்குச் சொந்தமின்னு எனக்குத் தெரியாதே. ஊம்; பணம் எப்படியாச்சும் அதுங்கிட்டே சேர்ந்தாச் சரி."

★

மறுநாள் மாலை பொன்னுருவியின் வீட்டையடைந்ததும், அங்கு நிலவிய அசாதாரண அமைதியைக் கண்டு ஒரு கணம திடுக்கிட்டான் தங்கவேல். பிள்ளைக்கு என்னவோ ஏதோ என்று பதறினான். "பொன்னுருவி மகளுக்கு ஆத்தா கருணையிலே ஏதும் நேர்ந்திடப்படாது" என்று பிரார்த்தித்துக் கொண்டே, அவன் உள்ளே நுழைந்தான்.

"அத்தான், உங்களைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன். குழந்தைக்கு ராத்திரி காச்சல் நெருப்பாயிருந்துச்சு. ராத்திரி பூராவும் சொரணைகூடக் கிடையாது மகளுக்கு!"

"பொன்னுருவி, எங்கே உன் புருசன் காசிலிங்கம்? அவன் கிட்டே என் பெண்சாதி அஞ்சு ரூவா கொடுத்துச்சாமே. மகளுக்கு வைத்தியத்துக்கு வேணுமின்னும். அத்தானுச்சேன்னு இரக்கப்பட்டுப் பணத்தைக் காலம் பரவே கொடுத்தாச்சாமே!"

"அத்தான், அதிசயமால்ல இருக்குது! எம் புருசனை காலையிலேருந்து கண்ணுப்புறத்தாலே கூட காணலையே! ஐயையோ, பொய் சொல்லி மறுபடியும் பணத்தை வச்சுச் சூதாடியிருக்கும்!" என்று சொல்லித் துடித்தாள் பேதை.

காசிலிங்கத்தின் தந்திரத்தால், சீட்டாட்டத்தில்தான் விரயமடைந்திருக்க வேண்டும் அவனிடம் கொடுத்திருந்த ரூபாய் ஐந்தும் என்று ஊகித்துத் கொண்டான் தங்கவேல். மேலும் காலத்தைப் போக்க எண்ணாமல் ஓடிப் போய்

வைத்தியரை அழைத்து வந்து காண்பித்தான். கேட்கும் பணத்தைத் தான் தருவதாகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டான். வேறு வழி?

குழந்தையின் ஆயுசுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்று உறுதி கொடுத்தார் வைத்தியர், நாடியைப் பரிசோதித்தபின். சூரணம் ஒன்றைத் தேனில் குழைத்துக் குழந்தைக்குக் கொடுக்கவே அது மெதுவாகக் கண்களைத் திறந்து விழித்தது. சந்தோஷ மிகுதியில் பொன்னுருவிக்குத் தலைகால் புரியவில்லை.

ஆனல் மறுகணம் அவளது ஆனந்தம் அழுகையாக மாறியது. தான் பார்த்த காட்சியைக் கண்டு அலறி விட்டாள் பொன்னுருவி. இடுக்கியில் அகப்பட்ட மீன் போலத் துடிதுடித்துப் போனள். ஏனென்றால், போலீஸ் காரன் ஒருவன் பின் தொடர வந்து நின்றான் அவள் கணவன் காசிலிங்கம்.

"ஊம், ஜல்தி பண்ணு, ஸ்டேஷனுக்குப் புறப்படணும்" என்று அதட்டினன் போலீஸ் ஜவான்.

சீட்டு விளையாட்டின் விளைவே இந்த இக்கட்டான நிலைக்கு, போலீஸ் கையில் சிக்கும் அளவிற்குக் கொண்டு வந்து விட்டது என்பது புலனயிற்று பொன்னுருவிக்கு.

"இருங்க ஐயா, உடம்பு காயலாகக் கிடக்கும் என் மகளை ஒரே ஒருதாம் மாத்திரம் பார்த்துட்டு வந்துடுறேன்!" என்று கெஞ்சினன் காசிலிங்கம்.

"போலீஸ்கார ஐயா, இந்தத் தடவை மட்டும் அவரை மன்னிச்சிடுங்க பெரிய மனசு பண்ணி. இனிச் சீட்டைக் கண்ணுலே கூடக்காண மாட்டாது காசிலிங்கம். நான் அதுக்கு 'ஜாமீன்'!" என்று அழுத்தமாகக் கூறிய தங்க வேல், காசிலிங்கத்தையும் போலீஸ்காரனையும் மாறி மாறிப் பார்த்தான். முறுவல் பூத்தது இதழ் ஓரத்தில். பொன்னுருவியின் கண்களில் கண்ணீர் நிறைந்து வழிந்தோடிக் கொண்டிருந்தது. ஆனல், போலீசைக் கொண்டு காசிலிங்கத்தை மிரட்டிவைத்தால்தான் ஒரு வழியாகச்

சீட்டாட்டத்தை நாடமாட்டான் என்பதை உணர்ந்து கொண்டு, தங்கவேல்தான் இப்படிப்பட்ட நாடகத்தை நடத்தியிருக்கிறான் என்ற ரகசியம் பொன்னுருவிக்கோ, அல்லது காசிலிங்கத்திற்கோ எப்படித் தெரிந்திருக்க முடியும்?

மறுபேச்சின்றித் தாணுக்காரன் போய்விட்டான். பொன்னுருவி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நிம்மதியடைந்தாள். மறுபிறவி எடுத்தவன்போல, ஒரே எட்டில் பாய்ந்து தன் குழந்தையை வாரியெடுத்து மடியில் வைத்த வண்ணம் தேம்பினான் காசிலிங்கம்.

"பொன்னுருவி, இந்த மட்டும் ஆயா கண் திறந்திச்சே, அதுவே நம்ப நெஞ்ச பாக்கியம்தான். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது மாதிரி, போலீசு கையிலே சிக்காமல் தப்பிச்சிட்டேன். தங்கவேலை உசிருள்ளவரை மறக்க முடியுமா? பொன்னுருவி, நீ என்னை மன்னிச்சிடு! குடிகாரன் கணக்காக உன் கழுத்துத் தாலியைக்கூட அறுத்துக்கிட்டுப் போய்க் கடைசியா ராத்திரி அதையும் தோத்துப்பிட்டேன். காலம்பற வள்ளிகிட்டப் போய், மகளுக்கு வைத்தியத்துக்கின்னு பொய் சொல்லி அஞ்சு ரூபாயை வாங்கிச் சீட்டு ஆடினேன். கடைசியா எனக்குக் கெலிப்பு வந்துச்சு. பணம் கொஞ்சம் கைக்கு வந்ததும் அந்தத் தாலியைத் திருப்பிட்டேன்!' என்று உணர்ச்சி மேலிடக் கூறி, துணியில் முடிந்து வைத்திருந்த தாலியைக் கொடுத்தான் தன் மனைவியிடம்.

இதைக் கேட்டதும் தங்கவேல் பொன்னுருவியின் கழுத்தைப் பார்த்தான். மங்கலச் சின்னம் பரிணமிக்க வேண்டிய கழுத்து சூனியமாகத் தோற்றமளித்தது. தங்கவேல் கற்சிலையாய்ச் சமைந்து நின்றான். தன் கணவனின் இஷ்டம் நிறைவேறிவிட்டால் அதுவே போதும் என்ற கொள்கையுடைய பொன்னுருவியின் மனப்போக்கை நினைத்து மலைத்தான் அவன். அதே தருணம் காசிலிங்கத்தின் அடாத செயலைக் கண்டு பொருமியது அவன்

உள்ளம். என்றாலும், இனியாவது அவன் வாழ்க்கைச் சுவடியில் புது ஏடு புரட்டப் பெற்று, பொன்னுருவி, குழந்தை சகிதம் இன்ப வாழ்வு தொடங்குவாளல்லவா என்ற எண்ணம் உதித்தது. உடனே அவனுக்கு நிற்கிறோமா அல்லது பறக்கிறோமா என்ற சந்தேகம் உண்டாகிவிட்டது. அவ்வளவு மகிழ்ச்சி!

"பொன்னுருவி, இனிக் கவலைப்படாதே! காசி மச்சான் திருந்திடுச்சு. எல்லாம் மகமாயி கடாட்சந்தான். அத்தோடே மலைபோல வந்ததெல்லாம் பனிபோல மாறினதும் உன் தாலி பாக்கியந்தான்—" என்று கனிவுடன் வார்த்தைகள் உதிர்த்தான் தங்கவேல்.

நன்றி நிறைந்த பார்வையுடன் தன் அத்தானை ஏறிட்டு விழித்த வண்ணம், கையில் வைத்திருந்த தாலியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு கழுத்தில் அணிந்துகொண்டாள் அவள். மறுமலர்ச்சி பெற்ற பொன்னுருவியின் வதனத்தில் புது வாழ்வின் பூரிப்பு வலை பின்னியிருந்தது.

லதாவின் கடிதத்தில்

....அப்போது ரோஜா மலர்கள் புடைசூழ அவற்றின் பரிமள வாசனையிடையே திளைத்து வீற்றிருந்தீர்கள் தாங்கள். ஆமாம்; தங்கள் போட்டோவைத் தான் குறிப்பிடுகிறேன்...

# அத்தை மகள்

"ஸார் தபால்."

திரும்பிப் பார்த்தேன். எதிரே தபால்காரன் கையில் கடிதத்தை ஏந்திய வண்ணம் வருவதைக் கண்டதும், குறிப்பறிந்த என் கைகள் கடிதத்தைப் பற்றின. பார்வை உறையின்மீது சென்றது. நான் அதிசயித்துவிட்டேன். 'ஏர் மெயில்' மூலம் பர்மாவிலிருந்து அக்கடிதம் வந்திருந்தது. என்னையும் அறியாமல் ஏதோ ஒருவித சக்தி உந்தித்தள்ள கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். கண்கள் கலங்கி விட்டன.

ஆமாம்; லதா ரங்கூனிலிருந்து எழுதியிருக்கிறாள். ஆஹா! பெண்மையின் பரிவு எத்துணை தூரம் என்மீது பதிந்து, அவ்வளவு காலமாக தன்னுள் அடக்கி வைத்திருந்த அன்பு முழுவதையும் வெளிக்காட்டி இந்தக் கடிதத்தை எழுதியிருக்கின்றாள். ஆனால்...!

ஆம்; சுஜாதா! தன் அன்பு வலையில் என்னை சிக்க வைத்து வேடிக்கை பார்த்து விளையாடும் அவள் கதி—?

எவ்வளவு நாழிகை வாசல் காம்பவுண்டில் சாய்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தேனோ தெரியவில்லை. சித்தம் கலைந்தது. திரும்பி என் அறைக்குள் நுழைந்தவுடன், கண்ணாடியில் தன் யௌவனப் பொலிவின் பூரிப்பிலே மயங்கி நின்ற சுஜாதாவைக் கண்டேன். என் வரவு கண்டு

திரும்பினாள் அவள். சுருள் சுருளாக நெளிந்திருந்த அவள் கேசம் சரிந்து கிடந்தது. அதே தருணம் லதாவின் நினைவு நெஞ்சைத் தட்டியெழுப்ப நிலையை உணரலானேன்.

"தாங்கள் அதற்குள்ளாகவே ஆபீஸிலிருந்து திரும்பி விட்டீர்களே. நான் பள்ளிக்கூடம் விட்டு வந்து இன்னும் பத்து நிமிஷங்கூட ஆகவில்லை" என்று வழக்கம் போல அன்பு குழையக் கேட்டாள்.

ஆனால் என் உண்மை நிலையை அவள் எவ்விதம் அறிய முடியும்? மனமறிந்த வகையில் உண்மைக்கு உரையிட்டு ஏதோ உளறி வைத்தேன். நம்பிவிட்டாள் சுஜாதா.

கொஞ்சநேரம் சென்றதும், வேலை காரணமாக தன் அறைக்குப் போய்விட்டாள். சந்தர்ப்பம் சமயத்தில் உதவ லதாவின் கடிதத்தை மீண்டும் ஒருமுறை புரட்டினேன்.

**அன்புள்ள அத்தான்,**

பர்மாவில் குமுறிப் புரண்ட பாழும் யுத்தத்தின் காரணமாக இதுகாறும் கொந்தளித்துக் குழம்பிய யுத்த அலறல் இன்றைய நிலையில் ஏதோ ஓரளவு அடங்கி விட்டதெனலாம்.

பர்மாவிற்கு பெற்றோர் சகிதம் புறப்பட்டபோது அழுத கண்ணும் சிந்தின மூக்குமாக நின்ற என்னை சமாதானப்படுத்தினீர்களே, நினைவிருக்கிறதா? நாங்கள் சென்ற சில மாதங்களுக்கப்புறம்தான் யுத்தம் தொடங்கிவிட்டதே!

தங்களது அன்புத் தொடரில் இணைத்துப் பிணைக்கப்பட்டுள்ள லதா அடுத்த வெள்ளிக்கிழமை புறப்பட்டு வருகிறேன். ஸ்டேஷனில் சந்தியுங்கள்.

தங்கள்,

**லதா.**

புதைந்து கிடந்த எண்ணங்களை கிளறி விட்டுவிட்டாள் என் அத்தை மகள் லதா. கடந்த ஆண்டுகளை நோக்கிப் பின் சென்றது மனக் குதிரை. உள்ளம் பழைய நினைவில் ஆழ்ந்தது.

★

அப்பொழுது லதாவிற்கு வயது பத்திருக்கும். நான் அவளைவிட மூன்று ஆண்டுகள் மூத்தவன்.

கால மலரில் வருஷ இதழ்கள் சில உதிர்ந்தன. அதற்குள் எவ்வளவு மாறுதல்? லதாவும் அடியோடு மாறி விட்டாள். முன்போல அடிக்கடி பேசாமல் அவள் எங்கேனும் பதுங்கிவிடுவாள்.

அறியாப் பருவம் நீங்கி அறியும் பருவம் அடைந்து விட்டாள் என்ற எண்ணம் போலும் அவளுக்கு. வலியப் போய் பேச முயன்றாலும், அப்படியே குபீரென்று சிவந்து விடும் அவளது கதுப்புக் கன்னங்கள்.

வாழ்க்கையை நடத்த வருவாயை எதிர்நோக்கி பர்மா விற்கு கடல் கடந்து சென்றனர் லதாவின் பெற்றோர்கள். உடன் சென்ற லதாவை வழியனுப்பினேன். அரைக் கணமும் அவளது பிரிவைச் சகிக்க முடியாத நான் அவள் திரும்பும்வரை எப்படிப் பொறுப்பேன் என்ற நினைவு என் உள்ளத்தை உருக்கியது. பிரிவின் வேதனை பொல்லாத தாயிற்றே!

நிர்மலமாயிருந்த என் மனத்திரையில், எங்களது முதல் சந்திப்பின் செய்தியை தன் வாழ்க்கைச் சுருளில் புகுத்திக் காட்ட ஆரம்பித்தாள் சுஜாதா.

★

சுஜாதா ஒரு ஆரம்ப பாடசாலையின் ஆசிரியை. அப்போது தான் எங்கிருந்தோ மாற்றலாகி வந்திருந்தாள். வீடு கிடைப்பது குதிரைக் கொம்பாயுள்ள இக்காலத்தில் நான் வாடகைக்கிருந்த 'பிளாக்'கில் கடைசி அறையை வாட கைக்கு அமர்த்திக்கொண்டாள் சுஜாதா.

அன்று இரவு நடுநிசி.

ஆழ்ந்த நித்திரையிலிருந்த நான் திடீரென்று அழு குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். அழுகை சப்தம் வரவர உச்சஸ்தாயியில் வந்தது. சப்தம் மிதந்து வந்த திசையைக் கவனித்தேன் கண்களைத் துடைத்துக்கொண்டு. சுஜாதா வின் அறையில்தான் அழுகுரல் கேட்டது. விரைந்து சென்றேன்.

வயது முதிர்ந்த ஸ்திரீ ஒருத்தி பயங்கரமாக வெறித்து நோக்கியபடி படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். அவள் முகத்தில் சவக்களை பிரதிபலித்தது. அவள் கைகளைப் பிடித்தபடி அழுதாள் அந்த இளம் யுவதி.

அவளைப் பரிதாபம் நிறைந்த கண்களால் நோக்கி, "அம்மாவுக்கு என்ன உடம்பு?" என்றேன் அன்பாக. கண்களில் பொங்கி வழிந்த நீரைக் கட்டுப்படுத்த முடியாதவளாய், "ஐயா, என் தாய் படும் நரகவேதனை இந்த ஜன்மத்திலா தீரப்போகிறது. இனி கட்டையுடன்தான்."

"காரணம்?"

"ஆமாம்; அதைத்தான் சொல்லவிருந்தேன். தன் புதல்வி—எனக்கு மணம் செய்வித்து பெற்ற மனம் குளிரக் கொடுத்து வைக்காமல் அவள் கணவன்—என் தந்தை இறந்துவிட்டாரே என்ற ஏக்கம். அன்று சவத்தைக் கட்டிக்கொண்டு அழுததை இப்பவும் நினைத்தாலும் ஒரே பயமாக இருக்கிறது. அன்று ஆரம்பித்த பிதற்றல், இன்னும் தீரவில்லை."

இவ்விதம் சொல்லி முடித்து, பின் தலைநிமிர்ந்தாள். ஒருகணம் அவளது பார்வையில் ஒருவித லஜ்ஜை! தான் இதுவரை பேசிக்கொண்டிருந்தது தன் வயதொத்த ஓர் இளைஞனிடம் என்ற எண்ணம் போலும்! பெண்களுடன் பிறந்த நாணம் அவளையும் வந்தணைய என்னை வழியனுப்பினாள்.

நாட்கள் நழுவின. ஆனால் அன்று அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் இன்னும் என்னுள் எதிரொலித்து நின்றது.

ஒருநாள் ஆபீசிற்குக் கிளம்பிக்கொண்டிருந்தேன். அவள் கையில் பட்சணம் நிறைந்த 'பிளேட்'டை என் மேஜைமீது வைத்து "அவசியம் இதைத் தாங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும். இன்று என் பிறந்த நாள்" என்று மன்றாடினாள். உவந்தளித்ததை பூரிப்புடன் புசித்தேன்.

ருசிகரமான நாவலொன்றின் பக்கங்களைப் போல வாழ்க்கை நடந்தது. மனிதன் பழக்கத்துக்கு அடிமை என்ற உண்மையை அன்றுதான் புரிந்துகொண்டேன். அந்தச் சமயத்தில்தான், சிற்சில சமயங்களில் என் நினைவின் நிழலினின்றும் விடுபட்டிருந்த என் அத்தை மகள் லதா விடமிருந்து தபால் பறந்து வந்தது.

★

அன்று ஆபீஸிலிருந்து வந்துகொண்டிருக்கையில், நாளை மாலை காணப்போகும் லதாவைப்பற்றி எண்ணமிட்டுக் கொண்டு வந்தேன். வாசலில் வண்டி ஒன்று நின்றது. 'குமார்' என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். சுஜாதா வருத்தம் தோய்ந்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தாள். காரணத்தைக் கேட்டேன் பதட்டத்துடன். பதில் எதுவும் சொல்லவில்லை. அவள் விழிகளில் கண்ணீர் தேங்கியது. பேசாமல் என்னிடம் 'டைப்' செய்திருந்த காகிதம் ஒன்றை நீட்டினாள். படித்தேன்; தலை சுழன்றது. அவளை மாயவரத்துக்கு மாற்றிவிட்டார்கள். விரைவில் சென்று 'சார்ஜ்' ஒப்புக்கொள்ளவேண்டுமாம்.

சுவர்க்கத்துக்கு ஏறிய நூல் அறுந்துவிட்டது!

"குமார், என்னை மறந்துவிடமாட்டீர்களே" என்றாள் விம்மியவண்ணம். கபடமற்ற அவளது உள்ளத்தினின்றும் கிளம்பிய இக்கேள்வி கல்லினும் கடிய என் மனத்தில் அம்பெனப் பாய்ந்தது. லதா போட்டிருக்கும் லெட்டர் பற்றி ஏதேனும் தெரிந்திருந்தால் இப்படி அவள் கேட்பாளா?

"ஏன் இவ்வித சந்தேகம் சுஜாதா? முன்பின் அறியா திருந்த நாம் ஒன்றுகூடினோம். பின் இப்படி எதிர் பாராமல் பிரிகிறோம். ஆனால் எப்படியும் திரும்பவும் பிரிந்த நாம் சந்திப்போம். வருந்தாதே. அம்மாவைக் கவனமாகப் பார்த்துக்கொள்."

மேலே பேச முடியாமல் கண்ணீர் தடைப்படுத்தியது.

அவளுடைய விழிகள் வடித்த நீர்த்துளிகள் அவள் மேனியை நனைத்தது. கோலக் கரங்களைக் குவித்து 'நமஸ்தே' தெரிவித்தாள். மறுநிமிஷம் வண்டி மறைந்தது. ஆனால் அவள் பிரதிபிம்பம் மறையவில்லை என் அகக் கண்களை விட்டு.

அன்று பூராவும் தூக்கம் பிடிக்கவில்லை. சுஜாதாவின் நினைவில் மனம் இணைந்து சுழன்றது.

அடுத்த நாள் லதாவைக் காண ஸ்டேஷன் சென்றேன். வழியில் லதாவின் இன்ப நினைவு; நீல வழிகளைச் சுழல விட்டு செவ்வதரங்களை லேசாக மடித்து குறுநகை பூக்கும் அவளது மோகன ரூபம் தோன்றி மறைந்தது.

ரயில் வந்தவுடன் என் கண்கள் லதாவைத் தேடின. 'அத்தான்' என்ற குரல் கேட்டது. நான் தேடி நின்ற அதே வண்டியில்தான் லதா இருந்தாள். விழித்துப் பார்த்தேன். "யார், லதாவா?" என்று அலறிவிட்டேன். மலர்ந்த ரோஜா போன்றிருந்த அவள் வாடிப் போய்ப் பார்க்கப் பரிதாபமாகக் காட்சியளித்தாள்.

"அத்தை, மாமா எங்கே" என்று கேட்டேன். 'ஓ' வென்று ஓலமிட்டாள். அவர்கள் குண்டு பட்டு இறந்துவிட்டார்களாம். துன்பத்துக்கு மேல் துன்பம்! அனாதையான எனக்கு அவர்களாவது உதவி செய்வார்கள் என்றிருந்தேன். அதுவும் பகற்கனவாகிவிட்டது.

இங்கேயே இருந்து உடம்பைப் பார்த்துச் செல்லும் படி கெஞ்சினேன். அவள் கேட்கவில்லை. நான் அவளை வரவேற்க இருக்க, அவள் என்னை உபசரித்தாள். பழம் நிறைந்த பை ஒன்றை என்னிடம் கொடுத்தாள். ஆனால் அவள் அன்புச் சுமையின் அந்தரங்கம்—!

ரயில் புறப்பட்டது.

★

அதற்குள் எப்படி அவ்வளவு நாட்கள் கழிந்தனவோ? அன்றைக்குப் புத்தகமொன்றைப் புரட்டிக்கொண்டிருந்

தேன். ஜன்னல் வழியே லெட்டர் ஒன்று வந்து விழுந்தது. லதா தான் எழுதியிருக்கின்றாள் என்பதை ஊகித்ததும் அவசரமாகப் பிரித்தேன்.

**அன்புள்ள அத்தான்,**

தாங்கள் என்னிடமிருந்து இத்தகைய லிகிதத்தை எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள்.

என் இதய பீடத்தில் வைத்துப் பூஜிக்கும் தங்களை வேறொரு ஜீவனும் அந்தரங்க பிரேமையுடன் அர்ச்சிக்கிற ரகசியத்தை இன்றுதான் நான் அறிந்துகொள்ள வாய்ப்பு கிட்டியது. நான் தங்களுக்கு முறைப்பெண் என்று அவளுக்கு எவ்விதம் தெரியும் ?

சுஜாதாவின் பழக்கம் ஏற்பட்ட நான்காம் நாள் அவள் வீட்டிற்குச் சென்றிருந்தேன். பெட்டியைத் திறந்து காண்பித்தாள். அப்போது ரோஜா மலர்கள் புடைசூழ அவற்றின் பரிமள வாசனையிடையே திளைத்து வீற்றிருந்தீர்கள் தாங்கள். ஆமாம் ; தங்கள் போட்டோவைத்தான் குறிப்பிடுகிறேன். என் உடல் வியர்க்க, நல்ல வேளையாக நிலையைச் சமாளித்துக்கொண்டு மெல்ல நகர்ந்துவிட்டேன்.

என்னிலும் அவள் எவ்விதத்திலும் தங்களுக்கு ஏற்றவள். அவளுடன் பழகியது குறுகிய காலமெனினும் தங்களிடம் முழு நம்பிக்கையையும் வைத்துள்ளாள் சுஜாதா.

சுஜாதாவை தங்கள் உயிர்த்துணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் இந்த அபலையின் ஒரே வேண்டுகோள். அதுவேதான் என் அத்யந்த ஆசை.

இங்ஙனம்
தங்களவளாயிருந்த
**லதா.**

உள்ளம் உருகியது. உடல் உருகினேன். நரக வேதனை என்னுள் சுயாட்சி செலுத்த, நான் செயலிழந்தேன் ; செய்வதறியாமல் சித்தம் குலைந்தேன்.

திடுமெனக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. சுஜாதா ஓடோடி வந்தாள். என்ன ஆச்சர்யம் ! கனவில் நிகழ்வது போலிருந்தது. என்னவோ ஏதோ என்று பதறிப் போனேன்.

“ லதாவின் உடல் நிலை ரொம்பவும் கவலைக்கிடமாயிருக்கிறது. ‘ மாரடைப்பு ’ ஏற்பட்டுவிட்டது. இப்போதுதான் இங்கே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்திருக்கிறேன். புறப்படுங்கள் ” என்றாள் துயரம் ததும்ப.

நடுங்கும் கைகளுடன் அவளிடம் லதாவின் அந்தக் கடிதத்தைக் கொடுத்தேன். சிறு குழந்தைபோல விசிக்கத் தொடங்கிவிட்டாள் சுஜாதா.

உடனே புறப்பட்டு ஆஸ்பத்திரியை அடைந்தேன் சுஜாதாவுடன். லதா சுருண்டு கிடந்தாள். அக்காட்சியைக் கண்டதும் எனக்கு இதயத் துடிப்பே நின்றுவிட்டது போலாயிற்று. லதாவைப்பற்றி அருகில் நின்ற நர்ஸிடம் கேட்டேன். அவள் உதட்டைப் பிதுக்கினுள். என்ன ஏமாற்றம்? அரவம் கேட்டு மெதுவாக மூடியிருந்த கண் களைத் திறந்தாள் லதா. இதழ்கள் அசைந்தன. ஆனல் வார்த்தை ஒன்றுகூட வெளிக் கிளம்பவில்லை. என்னையும் சுஜாதாவையும் ஒருமுறை ஆர்வத்துடன் நோக்கி, சமீபமாக வரும்படி சமிக்ஞை காட்டினுள். அவளுடைய கைகள் என் கையையும் சுஜாதாவின் கையையும் அன்புடன் இணைத் தன. அப்போது அவள் முகத்திலே ஒருவித காந்தி மின்னல் போலத் தோன்றி மறைந்தது. மறுகணம் அவள் இமைகள் மூடிவிட்டன!

*தாய் உள்ளத்தின் பாச எல்லைக்கு அளவுக் கோடு கிழிக்கவே முடியாது. அடிக்கும் கைகளே அணைக்கவும் செய்கின்றன. அவள் பெற்றவள்; பெற்ற மனம் பித்து!*

# கை அணைத்தது!

அப்போது கிணற்றிலிருந்து திரும்பி வீட்டினுள் நுழைந்ததும், அவள் கண்ட காட்சி அவள் மனதை அப்படியே நிலை தடுமாறச் செய்துவிட்டது. அந்தக் குழந்தை, கையில் பிரித்து வைத்திருந்த ஜரிகை கவுனை முன்னும் பின்னுமாகத் திருப்பி அழகு பார்த்துக்கொண்டிருந்தது. தான் அணியவேண்டிய சட்டைதானே என்ற எண்ணம் போலும்! பச்சைக் குழந்தையின் பால் வழியும் முகத்தில் ஆனந்தம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. ஆனால், பூங்கொடியின் உள்ளமோ குமுறிக் கொந்தளிக்க ஆரம்பித்தது.

அந்த ஒரு கண நேரத்தில் என்ன நடந்ததென்பது அவளுக்கே தெரியாது. மறு கணம் தரையில் சுருண்டு கிடந்த தன் மகள் வீறிட்டு அலறுவதைக் கண்டதும், பெற்ற மனம் பதைபதைத்து விட்டது. தன் மகளின் முகத்தைப் பார்த்தாள். அவள் உயிரே போய்விடும் போலாகிவிட்டது. ஐந்து விரல்களும் அப்படியே அதன் கன்னத்தில் ஆழப் பதிந்திருந்தன. அச்சமயம் அவள் செய்த அடாத செயல் அவளது தளர்ந்திருந்த மனதைப் பிளந்துவிடும்போலச் செய்துவிட்டது.

சரோஜாவின் அழுகை சப்தம் கேட்ட கந்தன், கைவேலையை அப்படியே போட்டுவிட்டு அலறிப்புடைத்துக்கொண்டு ஓடிவந்தான். குழந்தையின் கண்கள் அழுத

தன் காரணமாகச் சிவந்திருந்தன, கொவ்வைப் பழம் மாதிரி. கன்னமும் ரத்தச் சிவப்பாய்விட்டது. தன் மனைவியின் பக்கம் பார்வையைத் திருப்பினான். அவள் விழிக்கோடியில் கண்ணீர் மிதந்து கொண்டிருந்தது. தற்செயலாக ஓரத்தில் ஒதுங்கிக் கிடந்த அந்த ஜரிகை கவுன் அவன் பார்வையில் பட்டது. அப்பொழுதுதான் அவனுக்கு சங்கதி புலனாயிற்று. ஒன்றுமே பேசாமல் விசும்பிக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கித் தோளில் சாத்திய வண்ணம் தெருப்பக்கம் சென்றுவிட்டான் கந்தன்.

பூங்கொடி மனமொடிந்து இடிவிழுந்தவள்போல உட்கார்ந்துவிட்டாள். பன்னெடு நாட்களாக வெகு பத்திரமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்தக் கவுன் திரும்பவும் தன் குழந்தையின் கையில் காணப்படுவதைக் கண்ணுற்றதும், அவள் பேதை மனத்திடை அவிந்து கிடந்த எண்ணச் சிதறல்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. ஆனால் இந்த நினைவின் நிழல் ஒரு பாவமும் அறியாத பச்சைப பாலகனுக்கு எங்ஙனம் தெரியும்?

மடை திறந்ததுபோல் அவள் நயனச் செம்புகளினின்றும் கண்ணீர் மாலை மாலையாக வழிந்தோடியது. கண் இமைகளுக்கிடையே திரையாக விரிந்த நீர்ப் படலத்தில் புதைந்து கிடந்த நினைவுகள் புனர்ஜன்மமெடுத்தன.

★

அன்று மாலைப் பொழுது. அந்தி வானத்தில் விந்தைக் கோலங்கள் மலர்ந்திருந்தன. வேடிக்கை செய்துமுடித்த பிறகு கையில் தட்டை ஏந்தி கூட்டத்தை ஒரு தரம் வலம் வந்தான் அந்தக் கழைக்கூத்தாடி.

காலணா, அரையணா காசுகள் கவிழ்ந்து முத்தமிட்டன, நெளிந்து காணியிருந்த அவனது தட்டில். உவந்தளித்த அப்புண்ணியவான்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தான் கையிரண்டையும் ஒன்றுசேரக் குவித்தவண்ணம். திடுமென அவன் பார்வையில் ஏதோ மின்வெட்டிற்று. தட்டைப் பார்த்தான். இரண்டணா பணம் ஒன்று வந்து விழுந்

தது. அக்காட்சி ஏதோ கனவில் நிகழுவது போன்றிருந்தது அந்த ஏழைப் பாட்டாளி கந்தனுக்கு. தலையை உயர்த்தினான். அவனுக்கே ஆச்சரியமாகப் போய்விட்டது. அழகு சொட்டும் கட்டழகி யொருத்தி தன்னை விழுங்கி விடுபவள் போல அவ்விதம் வைத்த கண்வாங்காமல் உற்று நோக்குவதைப் பார்த்தான். கண நேரம் அவன் பார்வை அப்பெண்மீது சுழன்றது. அவளும் தன்னைப் போல ஓர் ஏழை என்பதை உணர்ந்தான், அப்போது அவள் தோன்றிய நிலையிலிருந்து. அவன் உடலில் புளகாங்கிதம் போர்த்தியது.

"இரண்டணா!" ஆமாம்; வாழ்வின் விசித்திரப் போக்கிலே ஒரு ஏழையைக் கண்டு மற்றொரு ஏழையின் உள்ளம் தான் இளகுகின்றது!

களைக்கூத்தாடி கந்தன் 'சலாம்' போட்டான் அந்தப் பெண்ணுக்கு. அதுவே அவனது என்றென்றும் மறக்க முடியாத உளமார்ந்த நன்றியின் சின்னம் போலும்!

கூட்டத்தைச் சுற்றி முடிந்து திரும்பவும் அதே இடத்திற்கு வந்ததும், அவன் அவளைக் காணவில்லை. தனக்கு உரித்தான கைப்பொருள் ஒன்றினைக் கைநழுவ விட்டது போன்ற ஓர் ஏக்கம் அவனுள் பொங்கி எழுந்தது.

தெளிந்த நீரோடை போன்றிருந்த அவன் உள்ளத்தைத் தொட்டுக் கலக்கிச் சென்றுவிட்டாள் அவ்வனிதை. அத்தி பூத்தது போன்றிருந்தது அவளைக் கண்டதும். ஆனால் கணப்பொழுதில் கோடைக்கால மின்னல்போல எங்கோ மறைந்துவிட்டாளே!

அவன் சித்தம் குழம்பிவிட்டது. ஒன்றிலும் அவன் மனம் நாடவில்லை. அன்றைய இரவைப் பகலாக்கிக் கழித்தான். சதா அவள் நினைவுதான். அவளது களை சொட்டும் சிரித்த முகம் அவன் முன் அடிக்கடி தோன்றியவண்ணம் இருந்தது. முன்பின் தெரிந்திராத அந்தப் பெண் நினைவு அவன் மனதில் எழும் சமயமெல்லாம், அவனையும் அறியாத ஓர் இன்பம் இழையின்னிச் சென்றது.

அடுத்த நாள் வித்தை செய்வதையும் மறந்து, பைத்தியம் பிடித்தவன் போல அங்குமிங்குமாக அலைந்துகொண்

டிருந்த அவன், காவிரிக் கரைக்குச் சென்றாலாகிலும் மன திற்குச் சிறிது சாந்தி பிறக்குமே என எண்ணி, அங்கு சென்றான்.

அப்பொழுது இருள் லேசாகப் படர ஆரம்பித்தது. நொங்கும் நுரையுமாக ஆரோகணித்துச் சென்றுகொண் டிருந்த காவிரியின் அழகிலே லயித்திருந்த கந்தன், இடுப்பில் செருகியிருந்த குழலை எடுத்து ஊத ஆரம்பித் தான். குழலின் இன்பகீதம் இளங்காற்றில் மிதந்து சென்றது. அலைபுரண்டோடும் வெள்ளத்தின் இனிய சலசலப்பு அச்சமயம் அவன் எழுப்பிய உயிர்நாதத்திற்குச் சுருதி கூட்டுவதுபோலிருந்தது.

திடீரென அவனது குழலிசை தடைப்பட்டது. நீரின் சலசலப்புக் கேட்டுத் திரும்பினான். அந்த இருட்டு வேளையில் நீரினுள் இறங்கும் உருவம் ஒன்றின் நிழல் தென்பட்டது. விசித்தெழுந்து ஓடிச் சென்றான். நீரில் இறங்கிய உருவம் அப்போது தோன்றி மறைந்த மின்னொளியில் நன்கு தெரிந்ததும், அப்படியே அவன் பிரமித்துவிட்டான்.

தன் உயிரைப் பணயம் வைத்து ஒற்றைச்சாண் வயிற்றைக் கழுவி மூட, உச்சாணிக் கம்பில் ஏறி வேடிக்கை செய்து முடித்த பின்னர் அன்று தனக்கு இரண்டணா மன முவந்தளித்த அதே உருவம்; அவளும் பார்த்தாள். அவள் பார்வையில் துடிப்பின் வேகம் அதிகரித்தது. அவளும் அவனை யாரென்று அறிந்துகொண்டாள் என்பது அவளது முகபாவனையிலிருந்து தெரிந்தது.

'இவ்வளவு கும்பிருட்டிலே ஒண்டியாக அலை பாய்ந்து ஓடும் ஆற்றிலே இறங்கவேண்டிய காரணம்?'— அவன் யோசனை செய்தான்.

"ஐயா, இன்னும் ஒரு கண் சிமிட்டுற நாழி களிச்சு நீங்க வந்திருந்தீங்கண்ணா எம்மனசு எம்பிட்டு குளுந்து போயிருக்கும்?"

அவ்விதம் சாரமற்றுப் பேசும் அப் பெண்ணினது வார்த்தைகள் அவனுக்கு வியப்பைக் கொடுத்தன.

"அப்படியென்ன அதுக்குள்ளே ஒனக்கு உசிரு மேலே அம்பிட்டு வெறுப்பும் சங்கடமும் வந்திடுச்சு."

"ஏழை அனாதை நான். அப்பனையும் ஆத்தாளையும் பறி கொடுத்துப்பிட்டுக் கடைசியா கடவுளை நம்பிக்கிட்டிருந்தேனுங்க. திக்கில்லாதவங்களுக்குத் தெய்வந்தானே தொணை. ஆனால் கடைசியிலே மாரியாத்தாவும் என்னை கைவிட்டுப்பிடுச்சுங்க. அப்புறம் இந்த ஏழைக்கு யாரு கதி? ஏதோ ஒரு யோசனை ஓடுச்சு மனசிலே. ஆத்தா காவேரி கிட்டயாச்சும் அடைக்கலம் புகலாமின்னு நெனைச்சேன். அப்பத்தான் நீங்க ஓடியாந்திருக்கீங்க. தெய்வம் போல இருந்திச்சு, ஒங்களைப் பார்த்ததும்."

அவள் குரலில் சோகம் பின்னணியாய் அமைந்தது. கண்களில் நீர்மல்கிப் பெருகியது.

வாடியிருக்கும் புஷ்பங்கள் பனித்திவலை பட்ட மாத்திரத்தில் மலர்ந்து சோபிதமடைவதைப் போல, அவளது குவிந்திருந்த முகமண்டலத்தில் மலர்ச்சியின் ரேகைகள் தெளிந்து காணப்பட்டன. அதிர்ந்திருந்த அவன் உள்ளத்திற்கு அபயமளிப்பது போன்றிருந்தது அக்காட்சி.

"இந்தாப் பாரு. அன்னிக்கு ஒன்னைக் கண்டதிலே இருந்து என் மனசு எங்கிட்டே நிக்கலே. சதா ஒன் நினைவு தான். மாரியாத்தா ஒன்னை மறக்கவேயில்லே. இல்லாட்டி, நான் இந்த சமயத்துக்குக் கணக்காக எப்புடி இங்கே வந்திருக்கமுடியும். நம்ப ரெண்டு பேரையும் ஜோடி சேர்க்கத்தான் இது நடந்திருக்குது. நீ என்னோடே வந்திடு. ஒன் மனசு கோணாம எல்லாம் செய்யிறேன். ரெண்டுபேருமா எங்கினாச்சும் அக்கரைச் சீமைக்குப் போயி வயிறு கழுவிக்கலாம். வரவர இந்தக் கம்பங் கூத்தாடிப் பிழைப்பும் புளிச்சுப் போச்சு. நானு ஒண்டிக்கை மனுசன். என்னதான் செய்யமுடியும்? யோசிக்கச் சொல்லு."

அவன் குரலில் இன்பம் கொஞ்சியது. தாபம் தடம் பதிந்திருந்தது.

தண்ணீர் சொட்டும் சேலையைப் பிழியக்கூட நினைவின்றித் தீவிர யோசனையில் ஈடுபட்டாள் பூங்கொடி. மறு கணம் அவள் தலை கீழே கவிழ்ந்தது. தீர்க்கமான முடிவின் அடையாளமா அத்தகைய நாணம்?

ஆமாம். உயரப் படர்ந்து செல்லவேண்டிய துவளும் கொடி ஒன்றிற்கு நல்ல கொழுகொம்பு கிடைத்தால் அப்புறம் அதன் வளர்ச்சிக்குக் கேட்கவும் வேண்டுமா?

★

அவள் பெயர் பூங்கொடி. பூங்கொடி! நாசுக்கான பெயர். அழகுக்கேற்ற பெயர்; பெயருக்கேற்ற பொருத்தம்.

கருவேப்பிலைக் கொழுந்து போன்ற தன் ஒரே பெண்ணைக் கண்ணுங் கருத்துமாக வளர்ப்பதில் தன் அருமை மனைவி இறந்த ஆறுத் துயரத்தையும் மறக்க முயன்றார் கோனார். கருப்பையாக் கோனார் பூவத்தக்குடி சுற்று வட்டாரத்தில் ஒரு பெரும் புள்ளி. அவரால் கை தூக்கி விடப்பட்டு முன்னுக்கு வந்த குடும்பங்கள் அனந்தம். இவ்வளவிற்கும் மனுஷன் ரொம்பவும் 'சுவாகி'. கொஞ்சம் கூட 'கெடுபிடி' இல்லாதவர். பதவிசான குணம். ஆனால் நல்ல மனிதர்களுக்குத்தான் இந்தப் பாழும் உலகில் காலமில்லையே!

பூங்கொடி என்றென்றும் செல்லப் பெண்ணாகவே வளரக் கொடுத்து வைக்கவில்லை. கோனாருக்கு இரண்டு நாள் லேசாக ஜுரம் கண்டதாம். வர வர காய்ச்சல் பலமாய்ப் போய்விட்டது. சாசுவதமாகக் கண்களை மூடிவிட்டார் கோனார். ஆனால் அவரது ஆவி ஒடுங்கும்வரை அவருக்கு அந்த ஒரே கவலைதானும். தன் செல்லப் பெண்ணின் எதிர்கால வாழ்க்கையை நினைத்து வடித்த கண்ணீரைக் கணக்கிடவே முடியாதாம். பாவம், ஒரே மகள்!

பெண் உள்ளத்தில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது. தன் தந்தை தன்மீது காட்டிய அன்பைத் திரும்பவும் எண்ணும்போதெல்லாம் அவள் மனம் கருகிச் சாம்பலாகி விடுவதுபோன்ற உணர்வு எழ ஆரம்பித்தது. இறுதியில் அவள் தகப்பன் விட்டுச் சென்ற பணத்தையும் பங்கிட்டுக் கொள்ளச் சொந்தமுறை கொண்டாடிக்கொண்டு வந்தார்கள் சிலர். கொஞ்சமிருந்த பணத்தையும் பறிகொண்டுவிட்டது அக்கும்பல். பாவம், பூங்கொடியின் எதிர்கால வாழ்வு?

தனி மரமானாள் பூங்கொடி. கடவுளின் கருணைக் கண்கள் தன்மீது விழாதா என ஏங்கித் துவண்டாள். அந்தச் சமயம்தான் அவளுக்குச் சிறிது நிம்மதி ஏற்பட்டது, அந்தச் செய்தியைக் கேட்டதும்.

பக்கத்து ஊர் மாடசாமிக் கோனார் அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டார். அவரது குடும்ப விளக்கு அணையப்போகும் தருணத்தில், சுடரைத் தூண்டி விட்டுப் பிரகாசமெய்தச் செய்தவர் பூங்கொடியின் தந்தை தான்.

'நம் குடும்பத்தைக் கைதூக்கிவிட்டு முன்னுக்குக் கொண்டுவந்த அந்தப் புண்ணியவானுடைய பெண் அனாதவான நிலையில் தெருவில் அலைந்துகொண்டிருப்பதைக் கண்டு நாம் கவனியாதிருந்தால் ஊரில் என்ன பேசிக்கொள்வார்கள்?' என்ற அந்த ஊரின் வசைச் சொல்லிற்காக அவளை அங்கு அழைத்துக்கொண்டார்.

அவருக்கும் ஒரு பெண் இருந்தாள். பாஞ்சாலி என்று பெயர். இருவருக்கும் கிட்டத்தட்ட சமவயது. ஆனால், அழகில் பாஞ்சாலி எவ்விதத்திலும் பூங்கொடிக்கு ஈடாகவே முடியாது. அவ்வளவு அழகி பூங்கொடி. இருந்து என்ன செய்வது? அதுதான் அவளது அழகிற்கு வறுமை திரையிட்டுவிட்டதே?

பாஞ்சாலி வீட்டு வேலை ஒன்றும் செய்யமாட்டாள். வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு அசை

போடும் மாடு மாதிரி எங்காகிலும் சென்று வம்பளந்து காலத்தைக் கழிப்பதுதான் அவளது அன்றாட வேலை. ஆனால், காலையில் படுக்கையைவிட்டு எழுந்தது முதல் மீண்டும் படுக்கைக்குப் போகும் வரை உள்ள வேலை அனைத்தையும் உடல் நலியச் செய்யும் 'பாக்கியம்' ஏழைப் பூங்கொடி மீது விழுந்தது. இதற்குத்தான் 'செஞ் சோற்றுக் கடன்' என்ற பெயரா? மாடாக உழைத்து ஓடாகி விடும்படிதான் அன்று அவளைப் படைத்த பிரமன் அவள் தலையில் எழுதினனா? அழிக்க முடியாத சிரஞ்சீவித்வம் வாய்ந்ததா அவ்வெழுத்து? ஐயோ! என்ன வஞ்சமோ அந்த ஈசனுக்கு!—

அன்று ஒரு நாள்! அடுத்த ஊரிலிருந்து பாஞ்சாலியின் அத்தான் தங்கவேலு வந்திருந்தான். அவன் கடைக்கண் வீச்சில் பூங்கொடி விழுந்துவிட்டாள். அவளது வாளிப்பாக வளர்ந்திருந்த வனப்பு வாய்ந்த தோற்றப் பொலிவு தங்கவேலின் உள்ளத்தில் தனியிடம் பெற்றுவிட்டது. எப்படியாகிலும் பூங்கொடியிடம் ஒரு வார்த்தையாகிலும் பேசிவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்தான் அவன்.

வந்த வேலையை முடித்துக்கொண்டு உடனே கிளம்பி விடும் தங்கவேலு, அங்கு இரண்டு நாள் தங்கினன். ஒரே அதிசயமாக இருந்தது பாஞ்சாலிக்கு.

நாட்கள் சென்றன. அவன் அடிக்கடி ஏதாகிலும் வேலையென்று 'சாக்கு'ச் சொல்லி அங்கு வந்து தங்கிவிடுவான். இவ்வளவிற்கும் தன் மாமன் மகள் பாஞ்சாலியுடன் ஒரு விநாடி கூட மன அன்புடன் அவன் முகங்கொடுத்துப் பேசினதில்லை.

தன்மீது தங்கவேலு காண்பிக்கும் தனிப்பட்ட சலுகையில் ஒருவித மனத்திருப்தி எய்தினள் பூங்கொடி. ஆனால், அதே தருணம் "அவர் நம்முடன் பேசும் சமாச்சாரம் பாஞ்சாலியின் பெற்றோர்களுக்குத் தெரிந்துபோனால் என்ன ஆவது நம் கதி? அப்புறம் வயிற்றுச் சோற்றுக்குக் கூடத் திண்டாட்டமாகவல்லவா போய்விடும்?" என்ற

எண்ணம் தோன்றியதும் மலர்ந்திருந்த அவள் முகம் கூம்பிவிட்டது.

இந்த நாடகமெல்லாம் பாஞ்சாலிக்கு எட்டாதிருக்குமா? அவள் உள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

"என் அத்தான் - நான் கண்ணாலம் கட்டிக்கவேண்டிய மொறை அத்தான் - அவரை நேத்திக்கு வந்த அறுதைச் சிறுக்கி மயக்கிப்பிட்டாளே. எங்கண்ணிலேயும் மண்ணைத் தூவிப்பிடுவாளே"

நெய்புண்ட நெருப்புப் போலானது அவள் நெஞ்சம்.

அப்போது தெருவைப் பெருக்கிவிட்டு வீட்டிற்குள் நுழைந்த பூங்கொடி திக்பிரமை பிடித்தவள் போல அப்படியே நின்றுவிட்டாள் கற்சிலையாக. அந்த வார்த்தைகள் அவளது காதுகளில் நாராசமென விழுந்தன. "நான் அப்பவே சொன்னேனே கேட்டிங்களா? பலே கைகாரியாக இருப்பாண்ணு எனக்கு முன்னமே தெரிஞ்சுதே, அவ ஆடிக்குலுங்கி சினிமாக்காரிபோல நடந்து வரதிலேருந்து. பாஞ்சாலிக்கு சொந்த அத்தான். எனக்குத் தம்பி. அதுக்கும் நேத்திக்கு வந்த அறுதைக் கழுதைக்கும் என்ன சம்பந்தம். வரட்டும் அவள்? உண்ட வீட்டுக்கே ஒலைவச்சுப்புட்டாளே. அது கண்ணிலே மையைப் போட்டில்ல மயக்கிப்பிட்டா பாவி."

பூங்கொடி தளும்பி நின்ற கண்ணீரைத் துடைக்கக்கூட நினைவின்றிப் புறப்பட்டுவிட்டாள் கால் சென்ற வழியே. காவேரி! அந்த எண்ணம் மின் வெட்டியது பேதையுள்ளத்தில். அன்னை காவேரியிடம் அடைக்கலம் பெற விரைந்தோடிச் சென்ற சமயம்தான், கந்தன் அங்கு தோன்றிய காட்சி அவளுக்கு வாழ்வின் புது மலர்ச்சி யென இருந்தது!

★

"பூங்கொடி"

புது வெள்ளத்தின் உற்சாகம் தொனிக்க அன்பு கொஞ்சும் குரலில் தன் மனைவியை அழைப்பான் கந்தன்.

அவளும் ஓடோடி வந்து 'துறு துறு' வென்று ஸ்மரணை செய்யும் அவளது குறும்புப் பார்வையைத் தன் கணவன் மீது சுழலவிட்டபடி அவனை வரவேற்பாள்.

'கண்டிச் சீமையில்' தேயிலைத் தோட்டமொன்றில் அவனுக்கு வேலை. காலையில் செல்லும் அவன் மறுபடியும் திரும்பும் சமயம் இருட்டிவிடும். அவன் வீட்டிற்குள் நுழைவதற்கும், பூங்கொடி சாதத்தைப் பரிமாறித் தயாராக வைத்திருப்பதற்கும் கணக்காக இருக்கும். பசிக்களைப்பில் அடைத்தவாய் திறக்காமல் தட்டைக் காலி செய்துவிடுவான் கந்தன். ஆமாம்; தன் வரவிற்காக நெடுநேரம் வரும் வழியின்மீது விழி தாழ்த்திய வண்ணம் காத்துக்கிடக்கும் தன் அருமை மனைவி கொஞ்சும் கிள்ளை மொழிகள் உதிர்த்த வண்ணம் உணவு பரிமாறும் சமயம் கூழானாலும் அவனுக்குத் தேவாமிர்தம் போன்று சுவை மிகுந்துதானே காணப் படும்? சாப்பிட்டுக் கை அலம்பியவுடன் கையில் மடித்து வைத்திருக்கும் வெற்றிலையை அவனிடம் நீட்டுவாள். வெற்றிலையை வாயிலிட்டு மென்றவண்ணம் வாசலில் துண்டை விரித்துப் பேச உட்கார்ந்துவிடுவார்கள் அந்த ஏழைத் தம்பதிகள் இரண்டு பேரும். அப்போது காலம் போவதே தெரியாது.

அவர்கள் இருவரும் ஏழைத் தம்பதிகள். ஆமாம்; அது அவர்களது குற்றமல்லவே. அந்த ஏழைப்பங் காளன் அன்றோ அவர்களை அங்ஙனம் சதிசெய்துவிட்டான். ஆனால், அவர்கள் தங்களது ஏழ்மை நிறைந்த வாழ்விலே காணும் இன்பத்திற்கு ஈடே இருக்க முடியாதல்லவா?

காலச்சக்கரம் கனவேகத்தில் சுழன்று, வருஷம் ஒன்று அதற்கப்புறம் ஓடிவிட்டதை அறிவித்தது. அப்பொழுது பூங்கொடி சாதாரணப் பூங்கொடியாயிருந்தாள். ஆனால், இன்றோ அவள் ஒரு தாய்!

நாட்கள் நழுவின.

அன்று ஒரு நாள் 'பூங்கொடி' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தான் கந்தன். சரோஜாவைத்

தோளில் சாத்தி வைத்திருந்தான். பொக்கை வாயைத் திறந்தவண்ணம் தன்னையும் மறந்துவிட்டுச் சிரித்துக் கொண்டிருந்த தன் மகனைக் கவனித்தாள் பூங்கொடி. அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. குழந்தைக்குப் புதிதாக அழகாக மின்னும் 'ஜரிகை கவுன்' ஒன்று போட்டிருந்தது.

"ஆமா, சட்டை புதுசா இருக்கே. இன்னிக்கு வாங்கினீங்களா. விலை ரொம்ப அதிகமாயிருக்குமே"

"பூங்கொடி, நேத்திக்கு நம்ப தமிழ் நாட்டிலேயிருந்து புதுசா ஒருத்தர் இந்தக் கப்பலிலே வந்திருக்காரு. ரொம்பத் தங்கமான குணம். அந்த அண்ணன் வாங்கித் தந்ததுதான் இந்தப் பட்டுச் சரிகை போட்ட சட்டை. பழகினது ரெண்டு நாழிகையாச்சும் இருக்குமோ மா என்னவோ; அதுக்குள்ளே ரெண்டு வருசம் தோளுக்குத் தோளாப் பழகிவிட்டது மாதிரி அவ்வளவு சிநேகிதமாகிட்டோம் நாங்க. கடையிலே நம்ப கண்ணுவைக் கண்டதும் சிலை கணக்கா ஏனோ அப்படி நின்னுட்டாரு. புள்ளையை எங்கிட்டேயிருந்து வாங்கி முத்தங் கொஞ்சி எம்பிட்டு பலகாரம் வாங்கிக் கொடுத்தாரு தெரியுமா? பார்த்தியா, அதுக்குள்ளே மறந்திட்டேன். நான், நம்ப கண்ணு, அந்த அண்ணன் மூணு பேருமா சேர்ந்து 'படம்' எடுக்கணும்னு பிடியாய் பிடிச்சாரு. இதோ பாரு படத்தை" என்று சொல்லி சட்டைப் பையிலிருந்து புகைப்படத்தை எடுத்து நீட்டினான் பூங்கொடியிடம்.

படத்தைப் பார்த்ததுதான் தாமதம். அவள் கண்கள் கலங்கிவிட்டன.

"பூங்கொடி, ஏன் இப்படி மலைச்சுப்போய் நின்னுட்டே பேயடிச்சவ கணக்கா? படத்தை ஏனு அப்படி முழிச்சுப் பார்க்கிறே. அந்த அண்ணனை முந்தியே ஒனக்குத் தெரியுமா? ஏதுனாச்சும் சொந்தம் கிந்தம் உண்டா?"

நெஞ்சை அழுத்திக்கொண்டு கேட்டான் கந்தன்.

"அவரைத் தெரியுமுங்க. அவரை எங்கே காண முடியும்?"

அவளது விம்மிக்கிடந்த மனத்தில் தங்கவேலின் மோகன உருவம் காட்சியளித்தது.

"ஐயையோ! இந்தக் கப்பலுக்குத்தானே போறதாகச் சொன்னாரு!"

அதற்கு மேல் அவள் அங்கு நிற்கவில்லை. வேகம் வேகமாக ஓடினாள், கனவேகத்தில் சுழன்று செல்லும் மனோரதத்தையும் போட்டியிட்டுக்கொண்டு.

உண்மையாக நடந்ததைச் சொல்லித் தன் மாசுமறு வற்ற தன்மையையும், விதி தன் வாழ்வில் ஆசைதீர விளை யாடிய விந்தை பற்றியும் விஸ்தாரமாகக் கூறி, தன்பேரில் கிஞ்சித்தும் அவருக்குச் சந்தேகம் இருக்காமல் செய்ய வேண்டும் என எண்ணித் துடித்தது அவள் பேதை உள்ளம்.

ஆனால் நடந்தது! குமுறும் கடலைக் கூர்ந்து பார்த் தாள். அப்போதுதான் கப்பல் புறப்பட்டுக் கொஞ்ச தூரம் நகர்ந்து சென்றது. அல்லலுற்ற மனம் ஆறுதல் எய்த மார்க்கம்......?

கலங்கிய கண்களுடன் ஏறிட்டு விழித்தாள். தன் கணவன் வந்துகொண்டிருப்பதைக் கண்ட அவள், சிறு குழந்தை போல தேம்பி அழுத வண்ணம் அன்று வரை மனதை அழுத்திக்கொண்டிருந்த சங்கதி பூராவையும் ஒன்றுவிடாமல் சொன்னாள்.

திரும்பவும் நீர் நிரம்பிய கண்களுடன் நீலத் திரைக் கடலைப் பார்த்தாள். கப்பல் மறைந்துவிட்டது. ஆனால், குமுறிப் புரளும் அலைகளின் பேரிரைச்சல்தான் அவள் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது!

★

"அம்மா—அம்மா!"

குழந்தை தன் மழலை மொழியில் கொஞ்சும் குரலில் அழைப்பதைக் கேட்டதும்தான் அவளுக்குச் சுய நினைவு

வந்தது. அவள் உள்ளக் கடலில் அதுவரை ஆர்ப்பரித்த வண்ணமிருந்த எண்ண அலைகள் ஓய்ந்தன. திடுக்கிட்டெழுந்தாள், முகத்தில் தோய்ந்திருந்த நீர்த்திவலைகளை தன் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு.

சரோஜாவைப் பார்த்தாள். தந்தையின் தோளில் ஒய்யாரமாகச் சாய்ந்திருந்த அக்குழந்தை ரொட்டித் துண்டைச் சுவைத்துக் கொண்டிருந்தது. அதற்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

பூங்கொடி தன் கணவனிடமிருந்து குழந்தையை வாங்கி, கீழேகிடந்த அந்த ஜரிகை கவுனை எடுத்துப்போட்டாள் சரோஜாவிற்கு. அக்சமயம் அதன் ஆனந்தம் பன்மடங்காகி சிவப்புக் கன்னங்களில் குழி விழுந்தன. அதன் எழிலில் மனம் பூரித்து அப்படியே வாரியணைத்த வண்ணம் உச்சி மோந்தாள் பூங்கொடி. அப்பொழுது அத்தாயுள்ளம் அடைந்த ஆனந்தத்தை அளவிடல் சாத்தியமாகுமா?

இந்த வேடிக்கை முழுவதையும் அடைத்த வாய் திறக்காமல் கவனித்துக் கொண்டிருந்த கந்தன் "எதுக்காக கொஞ்சநேரத்துக்கு முந்தி புள்ளையைப் பளீர்னு அப்படி அறைஞ்சியாம். அப்புறம் இப்ப இம்பிட்டுத்தூரம் என்னாத்துக்குக் கொஞ்சறீயாம்" என்று கேட்டான் கந்தன் கிண்டலாக.

"அடிக்கிற கைதானே அப்புறம் அணைக்கவும் செய்யும்" என்று பதில் கொடுத்தாள் அவள் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல்!

"தாங்கள் அறுத்துவிட்டது இரண்டாவது தந்தி. முதல் தந்தியை நானே........"

"வாஸந்தி! நீ முந்திக்கொண்டு விட்டாயா....."

# அறுந்த தந்தி

**வா**ஸந்திக்கு மூளை வெடித்துச் சிதறிவிடும்போலிருந்தது. தொடர்ந்து எதையுமே அச்சமயம் அவளால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. தூசு தட்டித் துடைத்து வைக்கப் பட்டிருந்த அந்த வீணையை மீண்டும் ஒருமுறை நோக்கினாள். மருட்சி தோய்ந்த அவள் விழி வீச்சில் அடியுண்ட மானின் வேதனை-ஏக்கம் சுடர்விட்டது. ஜன்னல் கம்பிகளினூடே பாய்ந்து ஒளி பரப்பியிருந்த அந்தி வெய்யலின் செங்கதிர்கள் வீணைமீது படிந்திருந்தன. அக்காட்சி அவள் நைந்த மனதை ரம்பம்போல அறுத்தது. அந்த நாட்களில் தன் அக்காள் சுலோ வீணை வாசித்து அத்தானை மகிழ்வுறச் செய்த சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நினைவு படுத்திப் பார்த்தாள் வாஸந்தி. நெடுமூச்சு வெடித்துக் கிளம்ப, இமை வட்டங்களில் நீர்த்திவலைகள் வரம்பு கட்டின.

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள். மத்தியானம் உண்டு முடிந்ததும் 'ஹாய்யாக' உட்கார்ந்து வம்பளந்து வீண்பொழுது கழிக்கத் திட்டமிட்டிருந்தான் மூர்த்தி. அதற்கு வாஸந்தியும் பூரண சம்மதம் கொடுத்திருந்தாள். ஆனால், யார் சூதோ தம்பதிகளின் ஒட்டிய இரு உள்ளங்கள் ஏகோபித்துப் போட்டிருந்த ஏற்பாடு சடுதியில் நிலைகுலைந்தது. மூர்த்தி முன்கூட்டியே தயாரித்து வைத்திருந்தவன் போல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்துக்கொண்டான் தன் இதய ராணியிடம். பதியின் ஆசை வேண்டுகோள் வாஸந்தியை மனமுடையச் செய்துவிட்டது

போதும்! இல்லையென்றால் அவள் கண் கலங்கக் காரணம்.........?

"வாஸந்தி நானும் யோசித்து யோசித்துப் பார்த்து விட்டேன். எப்படியும் திரும்பவும் ஒருதரம் உன் தமக்கை சுலோ வாசிக்கும் அந்த "தந்தியிலெழுவது நாதம்" என்ற பாட்டை வீணையில் இசைத்துக் கேட்கவேண்டும் என்ற அபரிமிதமான ஆசை என்னைப் பைத்தியமாக ஆட்டி வைக்கின்றது. ஆனால் அந்தப் பாட்டை சுலோ மாதிரி உன் ஒருவளாலேயே அத்தனை திறம்பட வாசிக்க முடியும். வாஸந்தி, மறுக்கமாட்டாயே?" என்று கேட்டுக்கொண்டான் மூர்த்தி. இயல்பான அவன் ஆணையில் - அல்ல விண்ணப்பத்தில் கம்பீரம் ஒடுங்கி ஒலித்தது. தலையை உயர்த்திப் பார்த்தாள் கணவனை. உடனே தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். புருஷன் கொண்ட மனைவியிடம் வேண்டுவதா என்ற இரண்டுங்கெட்டான் நிலையில் "ஆகட்டும்" என்று ஒப்புக்கொண்டாள். மூர்த்திக்கு அப்பொழுது ஆகாயத்தில் 'ஜிவ்' வென்று பறப்பது போன்ற உணர்ச்சி உடலெங்கும் ஊடுருவிப் பாய்ந்தது.

★

அட்வகேட் அனந்தராமனின் பெயருக்கும் புகழுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினர் அவரது இரு புதல்விகளும். மூத்தவள் சுலோ; இளையவள் வாஸந்தி. ஒரே கிளையில் பூத்த இரு மலர்கள் அவர்கள். அழகு அரியணை வகிக்கும் கனவுப் பதுமைகள் சுலோவும் வாஸந்தியும். வளர்ச்சியும் கவர்ச்சியும் அவர்களுக்குப் பருவ எல்லையை நிர்ணயித்தது. சுலோவிற்கு வாஸந்தியைவிட ஒரு வயதுதான் அதிகம் என்றாலும், முதலில் சுலோவின் கல்யாணத்தைப் பற்றிய கவலைதான் அனந்தராமனுக்கு உண்டாயிற்று. ஆனால் கலியாணத்தைப் பற்றி வரன் விஷயமாகத் துளிகூட யோசிக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லை அவரைப் பொருத்த மாத்திரத்தில். கையில் கரும்பை வைத்துக்கொண்டு கற்கண்டுக்கு யாரேனும் அலைவார்களா என்ன? தன் சகோதரி

மகன் மூர்த்தியை சுலோவிற்கென்றே நிர்த்தாரணம் செய்தவா அட்வகேட். மூர்த்தி ஒரு பி. எஸ். ஸி. படிப் பிற்குப் படிப்பு; அழகுக்கு அழகு; அந்தஸ்துக்கு அந்தஸ்து. பின் என்ன? ஜாதகங்கள் பரிமாறிக்கொள்ளப் பட்டன. ஆனால் என்றைக்கோ அவர்கள் இரண்டு இதயங் களும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டு விட்டனவே!

★

சுலோ படிக்கும் பொழுதே வீணைமீட்டக் கற்றுக்கொண் டாள். நாட்கள் செல்லச் செல்ல வீணைப் 'பைத்தியம்' வளரத்தான் வளர்ந்தது. இதுபற்றி அவள் பெற்றோருக்கும் சந்தோஷமே. தமக்கை வீணையைக் கையில் எடுப்பதைப் பார்த்துவிட்டால் போதும் கண்ணன் குழலோசை கேட்ட கோபியர்களைப் போல ஓடோடிச் சென்று அவள் வாசிக்கும் கானத்தை ரசிக்கத் தொடங்கி விடுவாள் வாஸந்தி. நாள டைவில் வாஸந்தியின் ரசிகத்தன்மை அவளையும் வீணை சிக்ஷை பெறத் தூண்டிவிட்டது.

விரைவில் சுலோ மிஸஸ் மூர்த்தி ஆனாள். அவனும் ஒரு சங்கீதப் பித்தன். பித்தம் தெளிய மருந்து சுலோ வின் இசை வெள்ளம். இப்படியல்லவா ஜோடி பொருந்த வேண்டும்? அவளும் முன்கூட்டியே வேண்டுகோள் எதுவு மின்றி, ஆனால் குறிப்பறிந்து—ஜாடை தெரிந்து வீணை வாசித்துத் தன், அத்தானைப் பரவசப்படுத்தத் தவறுவது கிடையாது.

சுலோவை அடுத்து அட்வகேட்டின் அதிகக் கவலை வாஸந்தியின் பேரில் நிலைத்தது நியாயமே! ஆனால் வரன் விஷயம்தான் அவருக்கு மட்டுப்படவில்லை. மூர்த்திபோல இன்னொரு மாப்பிள்ளையும் அமைந்துவிட வேண்டுமென்பது தான் அனந்தராமனின் ஆசையும் ஆதங்கமும். அந்தச் சமயம்தான் அவர் மனம் இடியும் வண்ணம் சுலோவின் அகால மரணம் பற்றி தந்தி வந்தது. மணம் முடிந்து புது வாழ்வு தொடங்கி இன்னமும் ஓராண்டுகூடப் பூர்த்தி பெற

வில்லை. அதற்குள் தன் ஆசை மகள் சுலோவின் பிரிவை எங்ஙனம் அவரால் சகிக்கக்கூடும்?

உயிர்த்துணை போன்ற தன் தமக்கையின் சாவினால் புண்பட்டிருக்கும் தன் நிலையை வெளிக் காட்டிக்கொள்ள நேர்ந்தால் அப்புறம் தந்தையையும் தாயையும் எவ்விதம் தேற்றமுடியும் என்று எண்ணியே வெளியில் தன் துயரத்தைக் காட்டாமலிருந்தாள் வாஸந்தி. தன் பெற்றோர் இஷ்டப்படி மூர்த்தியை வீட்டோடு வைத்து சிசுருஷை செய்ய ஆரம்பித்தாள் வாஸந்தி. தன் மனைவியை இழந்த நஷ்டத்தையும் மாளாத துக்கத்தையும் ஓரளவு மாற்றச் சாத்தியமாயின வாஸந்தியின் அன்பு கனிந்த ஆதரவு மொழிகளும், தூய உள்ளத்துடன் செய்த பணிவிடைகளும். தன் அத்தான் எப்படியும் துயரம் நீங்கி அமைதியுடன் இருக்கவேண்டுமென்பதே வாஸந்தியின் தனித்த கவலையாக—லட்சியமாக அமைந்தது.

ஆனால் மூர்த்தி—வாஸந்தி இருவரிடையிலும் நிலவிய ஐக்கிய மனப்பான்மையையும் பாசத்தையும் அடிக்கடி கவனித்த அட்வகேட் எப்பாடுபட்டேனும் அவ்விருவர்களை 'முடிச்சுப் போட்டு' கணவனும் மனைவியுமாக்கத் தீர்மானித்தார். காலமும் சமயமும் கூடின. மனம்போலல்லவா வாழ்வு? மூர்த்தி வாஸந்தியின் கைத்தலம் பற்றினான். ஒவ்வொரு அம்சத்திலும் சுலோவின் பிரதிபிம்பமெனத் தோற்றமளித்த வாஸந்திக்கு முதல் மனைவியின் ஸ்தானம் அளிக்கப்பட்டது. ஆதரிச வாழ்வின் தொடக்கம் அழகாக, அற்புதமாக இணைந்தது; அமைந்தது.

★

சுலோவைப்பற்றி எண்ணும்போதெல்லாம் அவள் தினமும் வாசிக்கும் அந்த வீணையின் ஞாபகமும் தொடர்ந்தே வரும். அப்போதெல்லாம் வாஸந்தி அந்த வீணையைக் கண்ணால் காணக்கூடாதென்று மறைத்து வைத்து விடுவாள். மேலும், நீண்ட நாட்களாக வீணையைக் குறித்த

பேச்சுக்கே அத்தம்பதிகளிடையே சந்தர்ப்பம் எழவும் இல்லை. ஒருவேளை தன் அத்தான் என்றாகிலும் வீணையை மீட்டி வாசிக்கும்படி கேட்க நேர்ந்தால் என்ன ஆகும் என்றுமட்டும் மனத்தில் பலமுறை சம்சயப்பட்டதுண்டு. பொங்கிக் குமுறும் துக்கத்தை மாற்றிவிட வகை என்ன என்பதாக ஆராய்ந்தும் இருக்கிறாள் வாஸந்தி. அவ்வளவு பாசம் தமக்கைமீது. ஆனால் வாஸந்தியின் பயம் முடிவில் நிஜமாக நிகழத்தான் செய்தது. ஒரு நாள் வீணையை ஒரே ஒருமுறை வாசிக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டான் மூர்த்தி.

விழிக்கோடியில் உருப்பெற்றுக்கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு, நெற்றியில் விழுந்து புரண்டு விளையாடும் கேசத்தை ஒதுக்கிக்கொண்டு மெல்ல எழுந்தாள் வாஸந்தி. பார்வையில் ஏக்கம் வலைபின்ன, தலையை நிமிர்த்தி சுவரில் மாட்டியிருந்த சுலோவின் போட்டோவை ஒரு கணம் நோக்கியபின் வீணை சகிதம் கீழே அமர்ந்தாள். எதிரேயிருந்த நாற்காலியில் மூர்த்தி வீற்றிருந்தான். இறந்துபோன சுலோவே உயிர் பெற்று வந்து கானமிழைக்கப் போவதாக மூர்த்திக்கு எண்ணம் ஓடியது. உடம்பு புல்லரித்தது. வாஸந்தி முகத்தில் புன்னகையை வருவித்துக்கொண்டாள்!

"ஆரம்பிக்கிறாயா வாஸந்தி?"

"ஆகட்டும்" என்பதற்கு அடையாளமாக வீணையின் கம்பிகளை நெருடிவிட்டாள். விரல்கள் தந்திகளில் இழைய, கானம் காற்றில் மிதந்தது.

**"தந்தியில் எழுவது நாதம்**
**சிந்தையில் எழுவது காதல்....**

தளிர் விரல்கள் வாத்தியத்துடன் விளையாடத் துவங்கின. தொடர்ந்து வாசித்துக்கொண்டேபோனாள். மூர்த்தி தன்னை மறந்து, சூழ்நிலையையும் மறந்து கான லயத்தில் ஒன்றிப்போய் ரசித்தவண்ணமிருந்தான்.

மின்னல் கொடி படரும் ஒரு விநாடியில் என்ன தோன்றிற்றோ, பாட்டு முடிவதற்குள் திடீரென்று மூர்த்தி எழுந்து வெளியே போய்விட்டான். இதைக் கண்ட வாஸந்தி தணலைத் தீண்டியவள்போன்று நடுங்கிப்போனாள். தன் அத்தானின் இத்தகைய செய்கை வியப்பை அளித்தது. அவள் மனம் அஞ்சி அதிர்ந்தது.

★

இந்தச் சம்பவத்தைக் குறித்து அதன்பின் தம்பதிகளிடையே எவ்வித வியாக்யானமோ, அல்லது சமாதான உடன்படிக்கையோ உதயமாகவில்லை; நிகழவுமில்லை. அப்புறம் ஒன்றிரண்டு நாட்கள் வழக்கம்போல வந்தன, ஓடிவிட்டன. அன்றாடம் நடக்கும்—நடக்கவேண்டிய சிரிப்பும் கேளிக்கையும் இடம் பெற்றன; களித்தனர்.

★

அன்று இரவு மூர்த்தி வெளியே சென்றிருந்த சமயம் வாஸந்தி தனித்திருந்த அவ்வீட்டின் பயங்கர அமைதி அவளை என்னவோ செய்ய ஆரம்பித்தது. அன்று வீணை வாசிக்கையில் நிகழ்ந்த சலனம் அவள் மனத்தில் அப்படியே ஆழப் பதிந்திருந்தது. காரணமின்றி அரைகுறை வாசிப்பில் அவ்விதம் மூர்த்தி திடுதிப்பென்று வெளியே எழுந்து சென்றதன் அர்த்தம் மர்மமாகவே பட்டது வாஸந்திக்கு. நேரில் கணவனிடம் இதைப்பற்றிக் கேட்கவும் விரும்பவில்லை. இருப்பினும் தன்னைப்பற்றி ஏதாகிலும் தவறுபட எண்ணிவிட்டிருப்பாரோ—? அவள் மனம் ஒரு நிலையில் அடங்காது அலை பாய்ந்து தத்தளித்தது.

அன்று வீணை வாசித்துக்கொண்டிருக்கும்பொழுது அவள் பட்டபாடு அவள் ஒருவளே அறிவாள். திரும்பவும் வீணையை மீட்டிவிட்டதும், தன் தமக்கையின் நினைவு அவள் இதய வீணையையே நெருடிவிட்டதை மூர்த்தியால் உணர்ந்திருக்கமுடியுமா? ஒவ்வொரு தவணையும் கானம் கூட்டும் சமயம் அவள் உயிரே போய்த் திரும்பும். கண்கள்

கலங்கும். இந்த மாற்றத்தை தன் அத்தான் கவனித்து விட்டால்......? அவள் சந்தர்ப்பத்தைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

வாஸந்தி எதிரேயிருந்த சுலோவின் படத்தினருகே சென்று சிறு குழந்தைபோலத் தேம்பினாள். திரும்பவும் ஒரு நாள் தன் கணவன் அந்த வீணையை வாசிக்க உத்தரவு பிறப்பித்தால் தன் கதி என்னாகும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்தாள்; அன்று தன கணவன் லவலேசமும் சலனமற்று ரசித்துக்கொண்டிருந்த காட்சியையும் மனத்தில் நினைவுபடுத்திக்கொண்டாள்.

ஆனால் மறுமுறை அவ்வீணையை கையால் தீண்டவும் கூடாது என்பதாக அசைக்கமுடியாததொரு எண்ணத்தை உற்பவித்துக் கொண்டாள் வாஸந்தி. உடனே பித்துப் பிடித்தவள்போல உள்ளே ஓடினாள். கண்முன் காட்சி தந்த வீணையை எடுத்து 'படீர்' என்று அதன் தந்தி ஒன்றை அறுத்துவிட்டாள். அப்போது அவள் இதயமே அறுந்துபோனதுபோன்ற ஒரு உணர்வு எழுந்தது. மறு நிமிஷம் 'அத்தான் ஊரிலிருந்துவந்து இந்த நிகழ்ச்சியைக் கண்டால் என்ன செய்வது?' என்ற கேள்வியும் உடனடியாக மின்வெட்டிச்சென்றது. வாஸந்தி அசையாச் சிலையாய் சமைந்து நின்றாள். கண்ணீர் பிரவகிக்க, சிதைந்த உருவம் மாதிரி பொலிவிழந்து காணப்பட்ட அந்த வீணையை ஆற்றாமையுடன் பார்த்தாள். சூனியகோளமாகத் தோற்றமளித்த உலகமே அவள்முன் சுழன்றது. அவள் தமக்கை சுலோவின் படத்தின்கீழ் மண்டியிட்டு விம்மி யழுதாள்.

கண்ணீர் நின்றுபோய் எப்போதுதான் தூங்கினாள் என்பதே அவளுக்குத் தெரியாது. ஏதோ ஒரு சப்தம் அருகில் கேட்ட மாதிரி திடுக்கிட்டுக் கண் விழித்தாள். பக்கத்தில் பார்த்தாள். தன் கணவன் எழுந்து அந்த அறைக் கதவைத் திறந்து பக்கத்து அறைக்குப் போவ

தைப் பார்வையிட்டாள். கண்களை அகல விரித்துக்கொண்டு படுக்கையில் படுத்தவாறே அந்தப் பக்கம் நோக்கியபடியே இருந்தாள். 'தன் கணவன் எப்போது வந்தார். இப்போது அந்த அறைக்கு எழுந்துபோவானேன்' என்பதெல்லாம் அவளுக்குத் திகைப்பாக இருந்தது. அவன் அந்த அறைக்குள் சென்று சில நிமிஷங்கள் இருக்கும். அந்த அறையிலிருந்து கிளம்பும் சப்தம் மூலம், நடப்பதை அறிய முயன்றுகொண்டிருந்தாள் அவள். படீரென ஒரு சப்தம் கேட்டது. அடுத்த விநாடி ஏதோ ஒன்று தெறித்து விழுந்த சப்தம். ஒரு கம்பி தெறித்து மற்றொரு கம்பியில் அடித்து கிளம்பும் ஒரு நாதம்!

அவள் சுருண்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள்

"ஆமாம் வீணையின் மற்றொரு கம்பியை! அவர் அறுத்துவிட்டிருக்கிறார் இனி அந்த வீணை பயன்படக்கூடாதென்று! தான் செய்த அதே காரியம் அவர் மனதிலும் தோன்றி........."

வாஸந்தி எழுந்தாள். படுக்கையிலிருந்து எழுந்து அந்த அறையை நோக்கிச் சென்றாள். அதே தருணம், மூர்த்தியும் அந்த நிலைக்கு வந்து சேர்ந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"வாஸந்தி! இனி அந்த வீணையை நீ தொடவேண்டிய சந்தர்ப்பம் வரவே வராது'! என்றான் அவன்.

வாஸந்தி அவன் தோள்மீது கையை வைத்து லேசாகச் சிரித்தாள்.

"ஏற்கனவே அது பயன்படாததாகிவிட்டது"

"வாஸந்தி! என்ன சொல்கிறாய்?"

“ தாங்கள் அறுத்துவிட்டது இரண்டாவது தந்தி. முதல் தந்தியை நானே.........”

“ வாஸந்தி! நீ முந்திக்கொண்டுவிட்டாயா?” என்று அவள் தோள்களில் கைவைத்து மூர்த்தி அவளை அணைத்துக்கொண்டான். இருவருக்கும் நிம்மதி பிறந்தமாதிரி இருந்தது!

"பூவாயி, உன்னை என்னிக்கு முதல் முதலிலே கண்டேனு, அப்பவே எனக்குப் புதுத் தெம்பும் உயிரும் வந்திருச்சு. உன்னைப் பார்த்ததும், காய்ச்சலிலே செத்துப் போன என் தங்கச்சியே மறுபிறவி எடுத்துவந்திருப்பது கணக்கா நெனைச்சுப்பிட்டேன். என் தங்கச்சி மாதிரியே அசலா இருக்கு உன் முகச் சாயல்"

# அமிர்தம்

"நெசம்மாவா தம்பி?"

"ஆமாங்க; நான் சொன்னது பூராவும் அப்படியே வாஸ்தவமுங்க. நான் இந்தச் சேதியை உங்க காதிலே விழக் காட்டினதா மூணாம்பேருக்குத் துளியும் தெரியப்படாது. உங்கமேலே உள்ள விசுவாசத்திலே இந்த ரகசியத்தைச் சொன்னேன். இருட்டியும் போச்சு...நான் வரட்டுங்களா?"

"நல்லது தம்பி."

கண்மணிக்குத் திகைப்பு அடங்கி ஓய வெகு நேரம் பிடித்தது. 'எல்லாத்துக்கும் காரணம் புதுசா உண்டான பணத் திமிர்தானே?' என்றஎண்ணம் ஓடியதும் அவனுக்கு ஆத்திரம் மூண்டெழுந்தது. "வரட்டும் அந்தப் பயல் வடிவேலு. இந்த உயிர் இருக்குமட்டும் அந்தப் பயல் வடிவேலு ஐயனாருக்குக் 'குதிரை எடுப்பு' செஞ்சு திருவிழா கொண்டாட விடறதில்லை" என்ற திட வைராக்கியம் அவனுக்கிருந்த மனத்துயருக்குச் சவால் விடுத்தது. பின் கொண்ட சபதத்தில் உள்ளம் ஆறுதல் பெற்றான் கண்மணி.

கையில் ஏந்திய தீபத்துடன் வெளியே வந்த பூவாயி, தன் கணவனை ஒரு விசை ஏற இறங்கப் பார்த்தாள். பிரமை பிடித்து மலைத்திருந்த கண்மணியின் முகத்தைக் கண்ட பூவாயிக்கு ஏனோ பயமாகப் போய்விட்டது. கூண்டினுள் நுழையும் பைங்கிளியைப்போன்று தட்டுத் தடுமாறினாள் அவள். கடந்த சில நாட்களாகவே அவள் அடிக்கடி ஊர்ப் பேச்சுக்களைப்பற்றிப் புலன் விசாரித்த வண்ணமாகவே இருந்தாள். காலந்தவறி இரவு வேளைகளில் தன் புருஷன் மனை மிதிப்பதற்குள் பூவாயிக்கு ஜீவன் அவள் வசம் தங்க மாட்டாது.

"என்னுங்க என்னமோ போல ஒரு மாதிரி உட்கார்ந்திருக்கிங்களே? ஏதாச்சும் தவசல்—"

"தவசல் என்ன பூவாயி? சும்மா போறவனை வலிய வம்புக்கு இழுக்க ஆசைப்படுறானாம் வடிவேலு. வெள்ளம் தலைக்கு மேலே போனதுக் கப்புறம் சாண்போனால் என்ன முழம் போனா என்னுங்கற கதைதான். அடுத்த கிழமை ஐயனாரு திருநாளைக்கு வடிவேலுவே தான் குதிரை எடுக்கப் போறானாம். எப்படி யிருக்குது சேதி? வழக்கமா நடக்கும் முறைப் பிரகாரம் பார்த்தா நம்பதானே இந்த வருசத்துக்குக் குதிரை எடுப்புக் கொண்டாட வேண்டியவுங்க?"

"அப்படீன்னு வடிவேலுதான் திருவிழா துவக்கிற துன்னு முடிவாயிருச்சாமா? ஊராருங்க ஏதும் சொல்லலையா?"

"ஊராருங்களா? நீ பொம்பளைதானே. ஊராவது ஒண்ணாவது! பணக்காரன் பாரு அந்தப் பயமவன். இடிச்ச புளிமாதிரி எல்லோரும் வாயடைச்சுப் போயிட்டானுங்க போல. ஆனா பாரு, பூவாயி, இந்தத்தரம் நான் முதல்லே 'குதிரை எடுப்பு' ஆரம்பிச்சுத் திருநாள் நடத்தல்லே அப்புறம்..." என்று கூறி முடிப்பதற்குள் இடைமறித்த பூவாயி, "உஷ்; பேசாதிங்க! சேதி உருப்படியா வந்து

சோட்டும். அப்பாலே பேசிக்கலாம். ஐயனார் தெய்வத்துக்குக் கண் இருந்தாப் பார்த்துக்கட்டும். அடம் செய்யறவுங்க எப்படியும் கஷ்டம் அனுபவிக்காமலா போயிடுவாங்க" என்று சாந்தப்படுத்தினாள்.

★

'ஐயனார் கோவில் திருவிழா' பூவாயியின் மனத்தில் இன்பவேதனை யொன்றைச் சதா தூண்டிவிடும் ஓர் எச்சரிக்கை போல அமைந்து வந்ததை அவள் எங்ஙனம் உணராமல் இருக்க முடியும்? அத்தகைய ஓர் அனுபவம் அவள் பேதை உள்ளத்தில் இரண்டறக் கலப்பதற்கு ஏதுவாயிருந்ததும் அதே கோவில் வட்டாரங்கள் தாமென்றால் கேட்கவா வேண்டும்?

ஒரு நாள் அந்திமயங்கும் வேளை. மேய்ந்துகொண்டிருந்த ஆடுகளை ஒதுக்கிவிட்டுக் கொஞ்சம் களைப்புத் தீர மணல் மேட்டில் சாய்ந்து படுத்திருந்தாள் பூவாயி. ஆனால் நெடுநேரம் தன்னையே கொட்டக் கொட்ட விழித்து நோக்கிக் கொண்டிருந்த ஒரு வயதுப் பையனை அவள் அந்தக் கணம் பார்க்கவேயில்லை. பூவாயி வயதுவந்த பெண். கல்யாணப் பருவம். வாலைக் குமரிக்கு என்னென்ன மோனக் கனவுகளோ? எப்படிப்பட்ட எண்ணச் சூழ்நிலையோ? வாழ்க்கை வருங்காலம் பற்றி அவள் நெஞ்சம் எந்தப் பாணியில் மோடி பண்ணியதோ?

சுய நினைவு உருப்பெற்று விசித்தெழுந்த சமயத்தில் தான் அந்த வாலிபனைக் கண்டாள். உடனே பரபரப்பு; உவகைப் பெருமிதம். அப்புறம் குறுநகையை வதனத்திரையில் குறுக்குப் பாய்ச்சல் ஓடவிட்டாள்.

"பூவாயி, பொழுது சாயப்போவுதே. வீட்டுக்கு வரலையா?"

அவள் ஆச்சரியமடைந்தாள். 'இந்த ஆளுக்கு எம் பேருகூடத் தெரியுதே!' என்று வியந்தது அவள் மனம்!

“இதோ புறப்படப் போறேனே! ஆமா நீங்க……” என்று பூவாயி சுவாதீனத்துடன் கேட்டு நிறுத்தினாள். மாணிக்கத்தை இன்னுமொரு முறை நிமிர்ந்து பார்க்க வேண்டும் போலிருந்தது; பார்த்தாள். அடுத்த விநாடி நிமிர்ந்த பார்வை கீழே தஞ்சமடைந்தது.

“நானா, இதோ—'' எனக் கூறி ‘ட்ரியோ’ வென்று ஓர் அதட்டுப் போட்டான் மாணிக்கம். சிதறிக்கிடந்த ஆடுகள் அப்படியே சரம் சரமாக ஒதுங்கி நின்றன, அணி வகுத்து நிற்கும் பட்டாளம் போன்று.

பூவாயி அதிசயித்தாள். அவள் கடை இதழில் புன் முறுவல் புறப்பட்டது. மாணிக்கம் சொக்கிப்போனான்.

அப்புறம் இருவருமே சேர்ந்து ஆடுகளை ஓட்டி வருவார்கள். தழை கண்ட இடங்களில் மேயவிட்டு மரத்து நிழலில் மாணிக்கமும் பூவாயியும் உட்கார்ந்து என்ன வெல்லாமோ பேசித் தீர்ப்பார்கள். இந்த நட்பு மூன்றும் பேருக்கு—என் பூவாயியின் தகப்பனுருக்கே தெரியாது.

மாணிக்கம் ஒரு நாடோடி. ஊர் ஆடுகளை மேய்த்து ஒரு வழியாக வயிறு வளர்த்து வந்தான். அவன் ஆணழகன். விசாரிக்கப் போக அவனும் தன் இனம் என்ற புள்ளிவிபரம் அறிந்து கொண்டதும் பூவாயிக்குச் சந்தோஷம் தாளவில்லை. “மாணிக்கம்” என்று வாய் நிறையப் பெயர் கூவி அழைத்துச் சிட்டுக் குருவிபோலப் பேசிப் பழகி வரலானாள் அவள்.

ஆனால் அன்று அப்படிப்பட்ட ஒரு தடங்கல் ஏற்படும் என்று பூவாயியோ அல்லது மாணிக்கமோ ஒரு போதும் நினைத்திருக்கமாட்டார்கள். பூவாயி அப்பொழுது

தான் வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். மாணிக்கமும் வந்திருந்தான். இரண்டு பேரையும் ஜோடியாகக் கண்டதும் அப்படியே சீறி விழுந்தான் பூவாயியின் தகப்பன்.

“பூவாயி, பெரிய பெண்ணு லட்சணமா இல்லையே! யாரோ ஒரு வழிப்போக்கனோடே கூடமாடப் பேசிப் பழகினு லேசிலே போகக்கூடிய தகவலா? அப்புறம் ஊர் வாயைத்தான் மூட ஏலுமா? இன்னிக்குச் சொல்றேன். இனி இப்படி அந்தப் பயலோடு ஒரு பேச்சுக்கூடப் பேசக் கூடாது. மீறிப் பேசினதைக் கண்டா பெத்த மகளின்னு பாராமல்கூடக் கொடுவாளாலே உன் தலையைச் சீவிப் போடுவேன்......” என்று எச்சரித்தான். அத்துடன் மாணிக்கத்தை நோக்கி, “ஏய் பயலே, ஊரு தேடவந்தவன் ஒழுங்கா முறையா இருக்கமாட்டாய்போலத் தோணுதே! ஜாக்கிரதையா இருந்தா இரு. இல்லாட்டி உன் குடிசை பறிபோயிடும். ஆமா, சொல்லிவிட்டேன்” என்று கர்ஜித்தான் அம்பலகாரன்.

அன்று ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டவர்கள் தாம். அப்புறம் நாளதுவரை வருடங்கள் இரண்டு ஓடி விட்டன. மாணிக்கத்தைப்பற்றிய விபரமே தெரியவில்லை.

மறுநாள் தன் மகளை அம்பலம் வாஞ்சையுடன் அருகில் அழைத்து, “பூவாயி, நேத்து உன்னைக் கோவிச்சதுக்கு மனசு கலங்காதே. உன் நன்மைககோசரம்தானே இவ்வளவு பாடாய்ப்படறேன் நான். நம்ப கண்மணி அடுத்த மாசம் பினாங்குச் சீமையிலேருந்து வரதாகத் தபால் போட்டிருக்கு. அதுக்கு உன்னைப் பரிசம் போட்டிருக்கிறப்போ, அன்னியவங்களோடு சகவாசம் வச்சிருந்தாப் பார்க்கிறவுங்க என்னதான் எண்ணமாட்டாங்க—” என்று புத்தி புகட்டினுன்.

காலம் கரைந்தது. பூவாயியினது பூங்கரம் பற்றினுன் கண்மணி. நல்ல பொருத்தம் என்று பேசிக்கொண்டார்கள் நாட்டுப்புற ஜனங்கள்.

ஊர் என்றால் சாதாரணமாகச் சண்டையும் சச்சரவும் ரொம்பவும் சகஜம். என்றாலும் அந்த ஊரில் ஐயனார் திருவிழாவை ஒட்டிக் கிளப்பின பூசலைப்போல் இதற்கு முன் நிகழ்ந்ததில்லை என்றுதான் சொல்லவேண்டும். நியாயம் தலைமறைவில் ஒதுங்கிக் கிடந்தது.

அந்தக் கிராமத்தில் இரண்டு 'கரை'—அதாவது இரண்டு தரப்பு நாட்டாண்மை. ஒன்றிற்கு அதிபன் கண்மணி. எதிர்க்கட்சி வடிவேலுவின் தலைமை. ஒவ்வொரு உற்சவமும் ஆரம்பிப்பதற்குமுன் கோவில் சந்நதியில் எந்தக் கட்சி 'குதிரை எடுப்பு' எடுக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்கும் பொருட்டு சீட்டுக்கள் குலுக்கிப் போடுவார்கள். குலிக்கி எடுக்கப்பட்ட சீட்டின் உத்தரவை தெய்வக் கட்டளையாக எண்ணி அதன்படி நடப்பார்கள். இதுவே நியதி. அம்மாதிரித்தான் கண்மணி விழாவிற்கு உரியவன் என்று அன்று கண்டிருந்தது. ஆனால் வடிவேலு இதற்குச் சம்மதிக்கவில்லை. அவன் அந்த வட்டாரத்தில் பழைய பேர்வழி. ஆள் கட்டும் ஜாஸ்தி. இரண்டு வகையிலும் தன் பக்கம் வலு அதிகமாக இருக்கையில் கண்மணியைத் துச்சமாக எண்ணிவிட்டான் வடிவேலு.

"மாமா, இந்தச் சங்கதியிலே நாம் தலையிடாம ஒதுங்கிக்கிட்டா என்ன? வினை செஞ்சவுங்க வினை அனுபவிக்காமல் இருக்கமாட்டாங்க. மானுங்கன்னியா அம்பிட்டுக் கிட்டு அப்புறம்......" என்று எவ்வளவோ நயமாகக் கண்மணியிடம் சொல்லிப்பார்த்தாள் பூவாயி.

"உயிர் போனாலும் சரி; வடிவேலுவை இந்தத் தடவை ஒரு கை பார்த்து முடிச்சாத்தான் மனசு சும்மா கிடக்கும்" என்று சபதம் செய்துகொண்டான் கண்மணி.

பூவாயியின் விழிக்கோணத்தில் நான்கு முத்துக்கள்—கண்ணீர்! கதி கலங்கினாள்.

விடிந்தால் ஐயனார் கோயில் குதிரை எடுப்பு நாள். இரவு ஊரடங்கிய தருணம். புலர்ந்ததும் திருவிழாவைப் பற்றி எப்படிப்பட்ட பூசல்கள் உதயமாகுமோ என்று நினைத்து நெஞ்சுருகிய பூவாயிக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. "ஐயனாரு தெய்வமே, அத்தானுக்கு உன் கிருபையாலே சங்கடம் எதுவும் வராமல் நீதான் ஒத்தாசை செய்யனும். அது ஒண்டிக்கை மனுசன்" என்று வேண்டிக் கொண்டாள் அவள்.

வாசலில் காற்றாடப் படுத்திருந்தான் கண்மணி. அவன் கண்கள் விழித்திருந்தன. உள்ளமும் விழிப்பில் ஈடு கொடுத்துச் சுழல் வட்டம் பாய்ந்தது. விடியவும் நடக்கவிருக்கும் சம்பவத்தைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்தான், யுத்த அரங்கிலே சிந்தனையைச் செலவிடும் தளபதிமாதிரி. அவனுக்கும் கையாட்கள் பலர் இருக்கத்தான் இருந்தனர். நியாயத்திற்குத்தானே மதிப்பு அதிகம் கிடைக்கும்?

'திடுதிப்'பென்று யாரோ மரத்தடியில் மறைந்து வருவது தெரிந்தது. உடனே 'விசுக்'கென்று எழுந்தான் கண்மணி. தன்னைப்பற்றி வேவு பார்க்க யாரையாகிலும் வடிவேலு அனுப்பியிருப்பான் என்பதை அறிந்ததும் அவன் சந்தேகம் வலுக்க எத்தனித்தது.

"பூவாயி!" என்று குரல் கொடுத்துவிட்டுக் கையில் லாந்தர் விளக்குடன் மெல்ல அடியெடுத்துவைத்தான் கண்மணி. நீண்ட சுழல் கழியுடன் ஓடிவந்தாள் பூவாயி. அவள் நீட்டிய கம்பை வாங்கி கண்மணி பதுங்கியிருந்த ஆளை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, 'கட்டாயம் இந்தப் பயல் எதிரி ஆள்தான்' என்று சம்சயித்தவனாய்க் கம்பை ஓங்கி அந்தப் புது மனிதன்மீது வீசப்போனான். ஆனால் அந்த ஆளை ஆழ்ந்து நோக்கினாள் பூவாயி.

"ஆ, மாணிக்கமா?" என்ற அவன் ஓலம் ஓசை எழுப்பி எதிரொலித்தது.. கண்மணிக்குத் திகைப்பு மேலிட்டது. நல்ல வேளை, அவன் ஒதுங்கினான்.

"மாணிக்கம், என்ன இப்படி இந்தக் கும்மிருட்டிலே வந்திருக்கிங்க. கொஞ்சம் உங்களை கவனிக்காமப்போயிருந் தால் எப்பிட்டு வினையா முடிஞ்சிருக்கும்?"

"பூவாயி, உனக்கும் உன் புருசனுக்கும் ரகசியம் ஒண்ணுமே தெரியாதாங்காட்டியும். உங்க எதிரிகள் அல்லாரும் உன் புருசனை அப்படியே அடிச்சுப்போட யோசனைபண்ணி ஆட்களைச் சேர்த்திருக்காங்க. சாயந்திரம் தான் சேதி விழுந்துச்சு. ஓடியாந்தேன், உங்ககிட்ட சொல் றத்துச்கு. ஐயனுரு புண்ணியத்திலே நான் தப்பிச்சுட் டேன்......" என்று இழுத்தான் மாணிக்கம்.

அப்பொழுது கொஞ்சம் தொலைவில் விளக்கு வெளிச்சமும் ஒரு சிலர் வருவதும் தெரிந்தது. 'ஒருவேளை வடிவேலு கோஷ்டியாத்தான் இருக்கும்' என்ற ஐயத் துடன் கண்மணி விரைந்தான் எதிர நோக்கி. மாணிக்கமும் பூவாயியும் பின் தொடர்ந்தனர்.

"அண்ணுச்சி, உங்களை எங்க ஐயா வடிவேலு அழைச்சுக்கிட்டு வரச் சொன்னுங்க. என்னமோ சமாசாரம் சொல்லணுமாம்" என்று ஒருவன் ஓடிவந்து கூறினான்.

"ஏலே, ஒன்னை எனக்குத் தெரியுமடா. என்னை வஞ்சகமாக்கொல்லச்செய்யற சூழ்ச்சியிலே இதுவும் ஒரு வழியாக்கும்! யாருகிட்டே கயிறு திரிக்க உத்தேசம்?" கண்மணியின் வார்த்தைகளில் கோபம்பொரிந்தது; எரிமலை வெடித்தது; பிரளயம் புரண்டது.

"அண்ணுச்சி, ஐயனுருமேலே ஆணையாச் சொல்லுறேன். நீங்க எதுவும் சந்தேகப் படாதிங்க. வடிவேலு எசமானுக்கு வழியிலே தேள் கொட்டி ரொம்ப தடபுடலாயிருக்கு. ஐயனுரு சோதனைதான் இப்படி நேர்ந்திருக்குன்னு பேசிக் கிறுங்க."

கண்மணிக்கு எல்லாம் புதிர்போலத் தோன்றியது. இருந்தும் நடையைக் கட்டினுன் வடிவேலுவிடம். அங்கே கண்ட காட்சி அவனை அளவற்ற அனுதாபத்திற்குள்ளாக்கியது. பாவம், துடித்துக்கிடந்தான் வடிவேலு. தன்னை எதிர்க்க அத்தனை ஆள் கட்டுடன் வரும்போதுதான் இப்படி அவனுக்குத் தேள் கொட்டியிருக்கிற தென்பதை அறிந்ததும் அவனுக்கு ஒருபுறம் வியப்பாகவும் இருந்தது.

"கண்மணி, ஐயனுரு எனக்குக் கண்ணைத் திறந்து விட்டிருச்சு. வழக்கத்தை விடாமல் காலம்பற குதிரை எடுப்புத் தொடங்கி திருநாளை சிறப்பா நடத்த ஏற்பாடு பண்ணு. உன் பொறுமைக்கு ஈடேயில்லை. உனக்குத் தீங்கு பண்ண எண்ணின என்னை சாமி செம்மையாத் தண்டிச்சுப்பிட்டாரு. ஐயோ; வலி பொறுக்கலையே......" என்று புலம்பிப் புரண்டான் வடிவேலு.

உடனே கண்மணியின் முயற்சியால் விஷம் லேசாக இறங்கிவந்தது. மறுபிறவி பெற்றவனைப்போல வடிவேலு களிப்புற்ருன்.

உலக ஞாபகம் அப்பொழுது தான் வரப்பெற்றவர்களைப்போலப் பூவாயியும் மாணிக்கமும் ஒருவரையொருவர் அதிசயத்துடன பார்த்துக்கொண்டனர்.

"மாணிக்கம், உங்களுக்கு நானும் அத்தானும் ரொம்ப ரொம்பக் கடமைப்பட்டிருக்கோம். இந்த ரெண்டு வருசமா உங்களைக் கண்ணுலே காணக்கூட முடியலேயே. நீங்க மட்டும்தான் வந்திங்களா? உங்க பெண்டாட்டியையும் கூட்டி வாரதுதானே திருநாளைக்கு?" என்று வாத்ஸல்யம் வழிந்தோடச் சிறு குழந்தைபோலக் கேட்டாள் பூவாயி.

"பூவாயி, எனக்குப் பெண்டாட்டியா? நிகரற்ற ஏழை அனுதைக்குக் கல்யாணம் ஒன்றுதான் குறைச்சலா? அதைப்பற்றிய கவலைகூட எனக்குக் கிடையாது. ஆனு இன்னிக்குத்தான் எனக்கு என்னைப் பழைய

மாணிக்கமாட்டம் தோணுது. அந்தநாளிலே உன்னோடே பேசிப்பழகியதைத் தப்பா நினைச்சு உன் அப்பா என்னைத் தூஷணையாப் பேசினார். ஆனா இந்த விளக்குக்குப் பொதுவாச் சொல்றேன், உன்னைப்பற்றி எனக்கு எந்தவிதமான கல்மிஷமும் கிடையாதுங்கிறதை நீயாச்சும் உணராமலா இருந்திருப்பாய்? உன்னை-என்னைக்கு முதல் முதலிலே கண்டேனோ, அப்பவே எனக்குப் புதுத் தெம்பும் உயிரும் வந்திருச்சு. உன்னைப் பார்த்ததும், காய்ச்சலிலே செத்துப்போன என் தங்கச்சியே மறு பிறவி யெடுத்து வந்திருப்பது கணக்கா நெனைச்சுப்பிட்டேன். என் தங்கச்சி யாத்திரியே அசலா இருக்கு உன் முகச்சாயல்". அவன் கண்களில் கண்ணீர் மிதந்தது.

'தங்கச்சி' என்ற பாசம் நிறைந்த அழைப்பைக் கேட்டதும் 'அண்ணாச்சி' என்று பதில் விடுத்தாள் பூவாயி. புதையல் எடுத்த பொருள்போலப் பூவாயியை அழைத்துக் காதோடு காதாக ரகசியம் பேசினான் கண்மணி. அதைக் கேட்டதும், பூவாயிக்கு வாயெல்லாம் பல்லாகப்பரிணமித்து விட்டது. அவளுக்கு உடம்பு புல்லரித்தது!

★

பூவாயியும் கண்மணியும் பிரமாதமாக அப்படி என்ன ரகசியம் பேசிவிட்டார்கள் என்று தானே எண்ணுகிறீர்கள்? அடுத்தநாள் ஐயனார் கோவில் திருவிழாவிற்கென்க் கண்மணி தன தங்கச்சியை வரவழைத்தான். அவள் பெயர் அமிர்தம். அழகுப் பாவையான அவளைக் கண்டதும் மாணிக்கம் அப்படியே சொக்கிவிட்டான். தங்களுடன் மாணிக்கம் என்றுமே தங்கவேண்டுமென்பது அவர்களது ஆசை. அதற்கு அமிர்தத்தை அவனிடம் ஒப்படைக்க முடிவிட்டார்கள் துணைவனும் துணைவியும்.

"மாணிக்கம் அண்ணுச்சி ரொம்ப பாக்கியம் செஞ்சது தான். இல்லாதபோனு, அந்தக் காலத்திலே தேவர்கள் அசுரர்களோடே சண்டைபோட்டு அமிர்தத்தைக் கடைந்து எடுத்ததாகக் கேள்விப் படறபோது, அண்ணனுக்கு அமிர்தம் இவ்வளவு லகுவிலே கிடைச்சது அதிர்ஷ்டம் தானே?" என்று பொங்கும் புளகிதத்தோடு பூவாயி கேலி செய்வதைக் கண்ட மாணிக்கத்தின் அப்போதைய நிறைந்த மனதின் நிலையை எப்படி வர்ணிக்க முடியும்?



பொன்னி அச்சகம், சென்னை-21

இது ஒரு கற்பனை ஓவியம்:

**குடும்பம் ஒரு குருவிக்கூடு;**

**வாழ்க்கை வெறும் வயிற்றுப் பிழைப்பு ………………**

**அன்பாய் வளர்த்த மகள் அர்த்தநாரி யாவதா?**

இதை விளக்கும்

# மகளா?
# மனைவியா?

ஆசிரியர்: துர்காதாஸ் எஸ். கே. சுவாமி

★

## அழகுப் பதிப்பகம்

35, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு

மவுண்ட் ரோடு :: சென்னை - 2

பொன்னி அச்சகம், சென்னை-21